# 2

# தேசிய உற்பத்தி, செலவினம், வருமானம் மற்றும் தொழில்நிலை

## 2.1 பொதுநோக்கு


*இலங்கைப் பொருளாதாரமானது கொவிட்-19 புதிய திரிபுகளிலிருந்து ஏற்பட்ட புதிய அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் கடுமையான நோய்த்தொற்றினால் தூண்டப்பட்ட 2020இன் 3.6 சதவீத வீழ்ச்சியிலிருந்து மீண்டு, 2021இல் 3.7 சதவீதத்தினால் மீளெழுச்சிபெற்றது. அதிகரித்த கேள்வி மற்றும் உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்புபட்ட இடையூறுகள் படிப்படியாகத் தளர்த்தப்பட்டதன் மூலம் உந்தப்பட்டும், 2020இல் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க சுருக்கத்திலிருந்து ஏற்பட்ட சாதகமான தளத் தாக்கத்தினால் துணையளிக்கப்பட்டும் அனைத்து மூன்று முக்கிய பொருளாதார நடவடிக்கைகள் அதாவது வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகள் நடவடிக்கைகளில் இம்மீட்சியை அவதானிக்கப்படக் கூடியதாகவிருந்தது. எவ்வாறிருப்பினும், வேகமாகத் தொற்றக்கூடிய டெல்டா திரிபின் விரைவான பரவல் இம்மீட்சியினை குறிப்பாக, ஆண்டின் மூன்றாவது காலாண்டுப் பகுதியில் இடர்நேர்வுக்குள்ளாக்கி பணிகள் மற்றும் கைத்தொழில் நடவடிக்கைகளை வெகுவாகப் பாதித்தது. புத்தாக்கம்பெற்ற இத்திடீர் எழுச்சியை முறியடிக்கப் போராடிய அதேவேளை, கொள்கைசார்ந்த தூண்டல்களுடனும் நாடளாவிய தடுப்பு மருந்தேற்றல் நிகழ்ச்சித்திட்டத்துடனும் ஒன்றிணைந்து நடமாட்டக் கட்டுப்பாடுகள் மீது கவனம் செலுத்தப்பட்டமை, ஆண்டின் பிந்திய பகுதியினை நோக்கி சாதாரண நிலைமையைத் தழுவிக்கொள்வதற்கு ஊக்குவித்ததுடன் பொருளாதார நடவடிக்கைகளுக்கான அதிக வாய்ப்பினையும் வழங்கியது. புதிய இயல்புக்கு விரைவாக மாறியமைக்கு மத்தியில் 2020 உடன் ஒப்பிடுகையில் 2021 காலப்பகுதியில் பல தொழிற்சந்தைக் குறிகாட்டிகளும் மேம்பட்டன. இருந்தும், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் மீண்டெழும் அலைகளின் திசைமாறிய தாக்கங்களின் காரணமாக தொழிலாளர் சந்தை 2019இன் உலகளாவிய நோய்த்தொற்றுக்கு முந்திய மட்டங்களை எட்டியிருக்கவில்லை. அதற்கமைய, விசேடமாக பணிகள் மற்றும் வேளாண்மைத் துறைகளில் உள்ள தொழில்புரியும் குடித்தொகையும் தொழிற்படையும் மேம்பட்ட அதேவேளை, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021 காலப்பகுதியில் தொழிலின்மை வீதம் வீழ்ச்சியடைந்தது. இப்பின்னணியுடன் நிதியியல் பணிகள் அத்துடன் மொத்தவிற்பனை மற்றும் சில்லறை வர்த்தக நடவடிக்கைகளில் விரிவடைதலினால் தூண்டப்பட்டு பணிகள் நடவடிக்கைகள் வளர்ச்சிப்பாதைக்கு நுழைந்தது. அதேவேளை, உள்நாட்டிலும் உலகளவிலும் அதிகரித்த கேள்வியுடன் தயாரிப்பு நடவடிக்கைகளில் கணிசமான மீளெழுச்சி கைத்தொழில் நடவடிக்கைகளை இயக்குவதற்கான செயலூக்கங்களை வழங்கியது. அதேநேரம், வேளாண்மை நடவடிக்கைகளில் ஒட்டுமொத்த விரிவடைதல் அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் நிலவிய வழங்கல் பக்க முட்டுக்கட்டைகளினால் சில வேளாண்மை மற்றும் கைத்தொழில் நடவடிக்கைகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டன. பண்ணைத் தொழிற்பாடுகளுக்குத் தேவையான ஊட்டச்சத்துகள் மற்றும் விவசாய இரசாயனங்களின் நிரம்பல் பற்றாக்குறை நிலவிய சாதகமான வானிலைக்கு மத்தியிலும் ஆண்டின் பிந்திய பகுதியினை நோக்கி வேளாண்மை பயிர்களில் விளைச்சல் குறைவடைவதற்கு வழிவகுத்தது. மேலும், உச்சத்தை எட்டுகின்ற மூலப்பொருள் விலைகள் மற்றும் கப்பலேற்றங்களில் தாமதங்கள் என்பன வெளிநாட்டுச் செலாவணிப் பற்றாக்குறையுடன் இணைந்து வழங்கல் சங்கிலியினை இறுகச்செய்து, இதனூடாக உற்பத்தித் திட்டங்களை இடையூறுக்குள்ளாக்கின என வியாபாரம் பற்றிய கணக்கெடுப்புக்கள் வெளிப்படுத்தின. குறிப்பாக, முக்கிய பொருட்கள் போதாமை கட்டடவாக்க கைத்தொழிலின் முழுமையான உள்ளார்ந்த ஆற்றலை பெருமளவு தடைப்படுத்தியது. அதேவேளை, செலவின நோக்கில், நாட்டில் பொருளாதார நடவடிக்கைகள் படிப்படியாக இயல்புநிலைக்குத் திரும்பியதன் மூலம் நுகர்வு மற்றும் முதலீட்டுச் செலவினம் இரண்டும் 2021இல் படிப்படியாக அதிகரித்தன. எனினும், இறக்குமதிகளில் திடீர் உயர்வு ஏற்றுமதிகளின் வளர்ச்சியினை விஞ்சிச்சென்றமையினால் தேறிய வெளிநாட்டுக் கேள்வி மேலும் சுருக்கமடைந்தது. அதேவேளை, முதலீட்டுச் செலவினத்தில் உயர்வான வளர்ச்சியினைப் பிரதான காரணமாகக் கொண்டு ஆண்டுகாலப்பகுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக தேசிய சேமிப்பு - முதலீட்டு இடைவெளி விரிவடைந்தது.*

## 2.2 மொத்த உள்நாட்டு உற்பத்தி,[1] மொத்தத் தேசிய வருமானம் மற்றும் தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி

**மொ.உ.உற்பத்தியானது 2020இல் பதிவாகிய உலகளாவிய நோய்த்தொற்றினால் தூண்டப்பட்ட சுருக்கத்திலிருந்து மீட்சியடைந்து 2021 காலப்பகுதியில் நடப்புச் சந்தை விலைகள் (நடப்பு விலைகள்) மற்றும் நிலையான (2010) சந்தை விலைகள் (நிலையான விலைகள்) இரண்டிலும் வளர்ச்சியடைந்தது.** அதற்கமைய, நிலையான விலைகளில் மொ.உ.உற்பத்தி 2020இல் பதிவாகிய 3.6 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2021இல் ரூ.9,881.4 பில்லியனுக்கு 3.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. அதேவேளை, நடப்பு விலைகளில் மொ.உ.உற்பத்தி 2021இல் ரூ.16,809.3 பில்லியன் (ஐ.அ.டொலர் 84.5 பில்லியன்) 2020இல் மதிப்பிடப்பட்ட ரூ.15,027.4 பில்லியன் (ஐ.அ.டொலர் 81.0 பில்லியன்) உடன் ஒப்பிடுகையில் 11.9 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. மொ.உ.உற்பத்தி நடப்பு விலைகளில் உயர் அதிகரிப்பை பதிவுசெய்தமை ஆண்டில் விலைமட்டங்கள் அதிகரித்தமையை வெளிப்படுத்தியது. அதற்கமைய, மொ.உ.உற்பத்தி உள்ளடக்கச் சுருக்கி 2020இல் பதிவாகிய 4.0 சதவீதத்திலிருந்து 2021இல் 7.9 சதவீதத்திற்கு அதிகரித்தது.

1 தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம், மொ.உ.உற்பத்தியை உற்பத்தி, செலவினம் மற்றும் வருமான அணுகுமுறைகளில் மதிப்பிடுகிறது.

வரைபடம் 2.1
மொ.உ.உற்பத்தி ஆண்டு வளர்ச்சி வீதம் (அ)




(அ) மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது (2010 அடியாண்டு)

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

அட்டவணை 2.1
நிலையான விலைகளில் (2010) கைத்தொழில் மூலங்களின்படி மொத்த உள்நாட்டு உற்பத்தி (அ)(ஆ)


| பொருளாதார நடவடிக்கை | வளர்ச்சி (%) | | வளர்ச்சிக்கான பங்களிப்பு (%) | | மொ.உ.உ இன் சதவீதமாக (%) | |
|---|---|---|---|---|---|---|
| | 2020 (இ) | 2021 | 2020 (இ) | 2021 | 2020 (இ) | 2021 |
| **வேளாண்மை, காடாக்கல் மற்றும் மீன்பிடித்தல்** | **- 2.2** | **2.0** | **- 0.2** | **0.1** | **7.1** | **6.9** |
| தானியங்களின் வளர்ச்சி (அரிசி நீங்கலாக) | 44.8 | 9.7 | 0.05 | 0.02 | 0.2 | 0.2 |
| அரிசியின் வளர்ச்சி | 7.0 | - 6.7 | 0.05 | - 0.06 | 0.8 | 0.7 |
| காய்கறிகளின் வளர்ச்சி | 7.6 | - 2.5 | 0.04 | - 0.02 | 0.6 | 0.6 |
| கரும்பு, புகையிலை மற்றும் ஏனைய நீண்ட காலமல்லாத பயிர்களின் வளர்ச்சி | 19.3 | - 7.4 | 0.00 | - 0.00 | 0.0 | 0.0 |
| பழவகைகளின் வளர்ச்சி | 6.2 | - 7.8 | 0.04 | - 0.05 | 0.7 | 0.6 |
| எண்ணெய்ப்பசை கொண்ட பழவகைகளின் வளர்ச்சி (தேங்காய், செவ்விளநீர், கமுகு) | - 10.4 | 11.2 | - 0.07 | 0.07 | 0.6 | 0.7 |
| தேயிலையின் வளர்ச்சி (பச்சை இலைகள்) | - 7.1 | 7.4 | - 0.05 | 0.05 | 0.6 | 0.7 |
| ஏனைய குடிபானப் பயிர்களின் வளர்ச்சி (கோப்பி, கொக்கோ போன்றவை) | 21.7 | - 15.6 | 0.00 | - 0.00 | 0.0 | 0.0 |
| வாசனைத்திரவியங்கள், நறுமணப்பயிர்கள், மருந்து மற்றும் மருந்தாக்க பயிர்களின் வளர்ச்சி | 3.3 | 4.5 | 0.02 | 0.03 | 0.7 | 0.7 |
| இறப்பரின் வளர்ச்சி | 4.6 | - 1.7 | 0.01 | - 0.00 | 0.2 | 0.2 |
| ஏனைய நீண்டகாலப் பயிர்களின் வளர்ச்சி | 1.6 | - 4.8 | 0.00 | - 0.01 | 0.2 | 0.2 |
| விலங்கு உற்பத்தி | - 2.8 | 9.7 | - 0.02 | 0.06 | 0.7 | 0.7 |
| தாவர இனவிருத்தி மற்றும் வேளாண்மைக்கான துணை நடவடிக்கைகள் | - 0.4 | 10.6 | - 0.00 | 0.01 | 0.1 | 0.1 |
| காடாக்கலும் குத்திகளும் | - 7.9 | 5.1 | - 0.05 | 0.03 | 0.6 | 0.6 |
| மீன்பிடித்தல் | - 16.6 | 1.4 | - 0.19 | 0.01 | 1.0 | 1.0 |
| **கைத்தொழில்** | **- 6.9** | **5.3** | **- 1.8** | **1.4** | **25.5** | **25.9** |
| சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் | - 12.5 | 2.8 | - 0.29 | 0.06 | 2.1 | 2.1 |
| தயாரிப்பு | - 3.9 | 7.2 | - 0.60 | 1.11 | 15.5 | 16.1 |
| மின்சாரம், எரிவாயு, நீராவி மற்றும் குளிரூட்டி வழங்கல் | - 1.6 | 6.1 | - 0.02 | 0.07 | 1.1 | 1.1 |
| நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல் | 4.8 | 4.3 | 0.01 | 0.01 | 0.2 | 0.2 |
| சாக்கடை, கழிவுப்பொருள் சுத்திகரிப்பு மற்றும் அகற்றும் நடவடிக்கைகள் | - 1.0 | - 3.3 | - 0.00 | - 0.01 | 0.3 | 0.3 |
| கட்டடவாக்கம் | - 13.2 | 1.9 | - 0.91 | 0.12 | 6.2 | 6.1 |
| **பணிகள்** | **- 1.6** | **3.0** | **- 0.9** | **1.7** | **58.7** | **58.3** |
| மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம், போக்குவரத்து மற்றும் களஞ்சியம் மற்றும் தங்குமிடம் மற்றும் உணவுப்பணி நடவடிக்கைகள் | - 5.0 | 1.3 | - 1.16 | 0.30 | 22.6 | 22.1 |
| தகவல் மற்றும் தொடர்பூட்டல் | 13.7 | 17.0 | 0.10 | 0.15 | 0.9 | 1.0 |
| நிதியியல், காப்புறுதி மற்றும் வதிவிட சொத்துரிமை உள்ளடங்கலாக உண்மைச் சொத்துக்கள் நடவடிக்கைகள் | 4.7 | 5.6 | 0.67 | 0.86 | 15.4 | 15.7 |
| தொழில்சார் பணிகள் மற்றும் ஏனைய ஆளணி பணி நடவடிக்கைகள் | - 5.9 | 1.2 | - 0.67 | 0.13 | 11.1 | 10.9 |
| பொது நிர்வாகம், பாதுகாப்பு, கல்வி, மனிதநலம் மற்றும் சமூக வேலை நடவடிக்கைகள் | 2.0 | 3.3 | 0.17 | 0.29 | 8.6 | 8.6 |
| **அடிப்படை விலையில் கூட்டப்பட்ட மொத்த பெறுமதிகளுக்கு சமனானவை** | **- 3.2** | **3.5** | **- 2.9** | **3.2** | **91.2** | **91.1** |
| உற்பத்திகள் மீதான மானியங்கள் கழித்த வரிகள் | - 8.1 | 4.9 | - 0.7 | 0.4 | 8.8 | 8.9 |
| **சந்தை விலையிலான மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு சமனானவை** | **- 3.6** | **3.7** | **- 3.6** | **3.7** | **100.0** | **100.0** |
| வெளிநாட்டிலிருந்தான தேறிய முதன்மை வருமானம் | 8.3 | 9.3 | | | | |
| **சந்தை விலையிலான மொத்த தேசிய வருமானம்** | **- 3.5** | **4.0** | | | | |

(அ) தரவானது மொ.உ. உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2010 அடியாண்டு)
(ஆ) தற்காலிகமானது
(இ) திருத்தப்பட்டது

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

வரைபடம் - 2.2

## தேசிய வெளியீடு, செலவினம், வருமானம் மற்றும் தொழில்நிலை - 2021



**உலகின் ஏனைய நாடுகளிலிருந்து தேறிய முதலாந்தர வருமானத்திற்கு மொ.உ.உற்பத்தியைச் சீராக்கம் செய்ததன் மூலம் மதிப்பிடப்படும் மொத்தத் தேசிய வருமானம், நடப்பு விலைகளில் 2020இல் பதிவுசெய்யப்பட்ட 0.3 சதவீதம் கொண்ட சிறிய வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2021இல் நடப்பு விலைகளில் 12.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியினைப் பதிவுசெய்தது.** கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 2021இல் நடப்பு விலைகளில் மொ.உ.உற்பத்தியில் அதிகரிப்பிற்கு மேல் தேறிய முதலாந்தர வருமானத்தின் மறைக்கணிய மீதியில் ஏற்பட்ட வீழ்ச்சி மொத்தத் தேசிய வருமானத்தில் ஏற்பட்ட இவ்வளர்ச்சிக்கு பெருமளவு காரணமாக அமைந்தது.

**தலைக்குரிய மொ.உ.உற்பத்தி 2020இன் ரூ.685,587 (ஐ.அ.டொலர் 3,695) உடன் ஒப்பிடுகையில் 2021இல் ரூ.758,680 (ஐ.அ.டொலர் 3,815)ஆக அதிகரித்தது.** ரூபா நியதிகளில் தலைக்குரிய மொ.உ.உற்பத்தியில் ஏற்பட்ட வளர்ச்சியின் பிரதான காரணமாக நடப்பு விலைகளில் மொ.உ.உற்பத்தி அதிகரித்திருந்த அதேவேளையில், ஐ.அ.டொலர் நியதிகளில் தலைக்குரிய மொ.உ.உற்பத்தியில் மெதுவான அதிகரிப்பிற்கு ஆண்டுச் சராசரி அடிப்படையில் ஐ.அ.டொலருக்கெதிராக உள்நாட்டு நாணயம் நலிவடைந்தமை காரணமாக அமைந்தது. அதேவேளையில், தலைக்குரிய மொத்தத் தேசிய வருமானம், 2020இன் ரூ.666,285 (ஐ.அ.டொலர் 3,591) உடன் ஒப்பிடுகையில் 2021இல் ரூ.740,328 (ஐ.அ.டொலர் 3,722) ஆக மதிப்பிடப்பட்டது.

## 2.3 நிறுவனசார் துறைகளிலிருந்தான பங்களிப்பு

**வீட்டுத்துறை மற்றும் வீட்டுத்துறைக்குப் பணியாற்றும் இலாபமீட்டாத நிறுவனங்கள் துறையிலிருந்து 2021இல் நடப்புச் சந்தை விலைகளில் மதிப்பிடப்பட்ட சேர்க்கப்பட்ட மொத்தப் பெறுமதிக்கு தொடர்ந்தும் பாரியளவில் பங்களிப்புகள் கிடைத்தன.** வேளாண்மை மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கு வீட்டுத்துறை மற்றும் வீட்டுத்துறைக்குப் பணியாற்றும் இலாபமீட்டாத நிறுவனங்கள் துறை பாரியளவு பங்களிப்பினை நிலைநிறுத்திய அதேவேளை, கைத்தொழில் நடவடிக்கைகளை நிதியல்லா நிறுவனங்கள் துறை ஆதிக்கம் செலுத்தியது. அதற்கமைய, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், பொருளாரத்தின் ஒட்டுமொத்தமாக சேர்க்கப்பட்ட மொத்தப் பெறுமதியின் 48.0 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தி வீட்டுத்துறை மற்றும் வீட்டுத்துறைக்குப் பணியாற்றும் இலாபமீட்டாத நிறுவனங்கள் துறை 2021இல் 10.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. அதேவேளை, நிதியல்லா நிறுவனங்கள் துறை, 15.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியினைப் பதிவுசெய்தன. பொது அரசாங்கம் மற்றும் நிதி நிறுவனங்கள் துறைகள் 2021இல் முறையே 5.4 சதவீதம் மற்றும் 19.0 சதவீதம் கொண்ட வளர்ச்சி வீதங்களைப் பதிவுசெய்தன.


## 2.4 உற்பத்தி, கொள்கைகள், நிறுவன ரீதியான ஆதரவு மற்றும் பிரச்சனைகள்

### வேளாண்மை

**தெங்கு மற்றும் கால்நடை உற்பத்தி நடவடிக்கைகளின் விரிவடைதலின் பிரதான காரணமாக வேளாண்மை நடவடிக்கைகள் 2020இல் பதிவுசெய்யப்பட்ட 2.2 சதவீதம் கொண்ட சுருக்கத்திலிருந்து மீட்சியடைந்து சேர்க்கப்பட்ட பெறுமதி நியதிகளில் 2021இல் 2.0 சதவீத விரிவடைதலினைப் பதிவுசெய்தன.** மேலும், தேயிலை, வாசனைத்திரவியங்கள் பயிர்ச்செய்கை, காடாக்கல் மற்றும் மரம் அறுத்தல் அத்துடன் தானியப் பயிர்ச்செய்கை என்பனவும் ஆண்டுகாலப்பகுதியில் விரிவடைந்து ஒட்டுமொத்த வேளாண்மை நடவடிக்கைளின் வளர்ச்சிக்கு சாதகமாகப் பங்களித்தன. அதேவேளை, மீன்பிடி நடவடிக்கைகளும் 2021இல் மிதமான வளர்ச்சியினைப் பதிவுசெய்து 2020இல் பதிவாகிய குறிப்பிடத்தக்க சுருக்கத்திலிருந்து மீண்டன. எனினும், நெல், பழங்கள், காய்கறிகள், ஏனைய நீண்டகாலப் பயிர்கள், இறப்பர் மற்றும் ஏனைய குடிபானப் பயிர் (கோப்பி, கொக்கோ போன்றன) பயிர்ச்செய்கையானது ஆண்டுகாலப்பகுதியில் சுருக்கமடைந்தது. வேளாண்மை நடவடிக்கைகள் ஆண்டு காலப்பகுதியில் விரிவடைதலொன்றினைப் பதிவுசெய்த போதிலும், குறிப்பாக, ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில்

வரைபடம் 2.3


2021இல் நிறுவனத்துறையினரின் மொத்த பெறுமதி சேர்ப்பின் பங்குச் சதவீதம் (நடைமுறைச் சந்தை விலைகளில்) (அ)




(அ) மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது (2010 அடியாண்டு)

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

வரைபடம் 2.4
வேளாண்மை நடவடிக்கைகளின் வளர்ச்சி வீதங்கள் - 2021 (அ)




(அ) மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது (2010 அடியாண்டு)

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

தொடர்புடைய ஊட்டச்சத்துகள் மற்றும் விவசாய இரசாயனங்கள் போதாமை அப்பயிர்கள் அவற்றின் முழுமையான உள்ளார்ந்த ஆற்றலையும் அடைவதிலிருந்து அவற்றைத் தடைப்படுத்தியது.

## வேளாண்மை உற்பத்திச் சுட்டெண்

**வேளாண்மை மற்றும் மீன்பிடித் துறைகளின் வெளியீட்டினை அளவிடுகின்ற வேளாண்மை உற்பத்திச் சுட்டெண்[2] 2021இல் மிதமான அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது.** வேளாண்மை உற்பத்திச் சுட்டெண்ணானது நெல், தேயிலை, தெங்கு, விலங்கு வளர்ப்பு மற்றும் மீன்பிடி உள்ளடங்கலாக அநேகமான துணைத் துறைகளின் வளர்ச்சியினால் தூண்டப்பட்டு 2020இன் 2.7 சதவீத அதிகரிப்பை விட ஆண்டுகாலப்பகுதியில் 3.0 சதவீதத்தினால் அதிகரித்த அதேவேளை, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இறப்பர் துணைத் துறைச் சுட்டெண்ணானது சுருக்கமொன்றினைப் பதிவுசெய்தது.

2 வேளாண்மை உற்பத்திச் சுட்டெண் காடாக்கல் மற்றும் மரம் அறுத்தல் துறையினை உள்ளடக்கவில்லை.

அட்டவணை 2.2
வேளாண்மை உற்பத்திச் சுட்டெண் (2007-2010 = 100)

| விடயம் | 2020 (அ) | 2021 (ஆ) | வளர்ச்சி வீதம் (%) 2019/20 (அ) | 2020/21 (ஆ) |
|---|---|---|---|---|
| வேளாண்மை மற்றும் மீன்பிடி | 129.4 | 133.3 | 2.7 | 3.0 |
| 1 வேளாண்மை | 129.6 | 133.8 | 7.3 | 3.2 |
| 1.1 வேளாண்மை பயிர்கள் | 123.7 | 126.9 | 9.2 | 2.5 |
| நெல் | 136.9 | 137.7 | 11.5 | 0.6 |
| தேயிலை | 89.5 | 96.1 | -7.1 | 7.4 |
| இறப்பர் | 58.3 | 57.3 | 4.6 | -1.7 |
| தெங்கு | 98.6 | 110.1 | -9.5 | 11.7 |
| ஏனைய பயிர்கள் | 167.1 | 166.9 | 22.6 | -0.1 |
| இதில், மரக்கறிகள் | 142.7 | 141.4 | 16.0 | -0.9 |
| பழங்கள் | 199.6 | 169.3 | 33.0 | -15.2 |
| ஏனைய களப்பயிர்கள் | 141.1 | 165.5 | 18.6 | 17.3 |
| 1.2 கால்நடை வளர்ப்பு | 176.4 | 188.7 | -2.3 | 7.0 |
| 2 மீன்பிடி | 128.5 | 130.7 | -15.2 | 1.7 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

## நெல்

**2021 சிறுபோகக் காலப்பகுதியின் அபரிமிதமான அறுவடையுடன் 2021இல் நெல் உயர்வான உற்பத்தி அளவினைப் பதிவுசெய்தது.** உகந்த வானிலை நிலைமைகள் மற்றும் அறுவடை செய்யப்பட்ட தேறிய பரப்பில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பன ஆண்டு காலப்பகுதியில் அதிகரித்த உற்பத்திக்குப் பங்களித்தன. அதற்கமைய, மொத்த நெல் உற்பத்தியானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அறுவடையில் சிறிதளவு அதிகரிப்புடன் 2021இல் தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாகவும் அபரிமிதமான அறுவடையினைப் பதிவுசெய்தது. ஆண்டு காலப்பகுதியில் மொத்த நெல் உற்பத்தியானது 5.1 மில்லியன் மெற்றிக் தொன்களுக்கு ஆண்டுக்காண்டு அடிப்படையில் 0.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. குறிப்பாக, 2020/2021 பெரும்போக உற்பத்தியின் 4.2 சதவீதம் கொண்ட வீழ்ச்சியானது 2021 சிறுபோக உற்பத்தியில் பதிவாகிய 8.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியினால் பாரியளவு எதிரீடு செய்யப்பட்டது. அறுவடை செய்யப்பட்ட தேறிய பரப்பு, 2020/2021 பெரும்போகத்திலும் 2021 சிறுபோகத்திலும் முறையே 681,521 ஹெக்டயர்களுக்கு 2.8 சதவீதத்தினாலும் 445,084 ஹெக்டயர்களுக்கு 10.3 சதவீதத்தினாலும் விரிவடைந்து, 2020இல் அறுவடை செய்யப்பட்ட மொத்த தேறிய பரப்பை விட 5.6 சதவீதம் கொண்ட ஒட்டுமொத்த அதிகரிப்பை பதிவுசெய்தது. ஆண்டு காலப்பகுதியில் உற்பத்தியில் ஏற்பட்ட ஒட்டுமொத்த மேம்படுத்தலுக்கு மத்தியில், 2020இன் தொடர்புடைய காலப்பகுதியனைவிட 2020/2021 பெரும்போக மற்றும் 2021 சிறுபோகக் காலப்பகுதியில் ஹெக்டயர் ஒன்றிற்கான நெல் விளைச்சல் முறையே ஹெக்கேடயர் ஒன்றிற்கு 4,492 கிலோகிராம்களுக்கு 6.8 சதவீதத்தினாலும் ஹெக்டயர் ஒன்றிற்கு 4,692 கிலோகிராம்களுக்கு 1.6 சதவீதத்தினாலும் குறைவடைந்து, வளமாக்கி மற்றும் ஏனைய இரசாயனங்கள் உள்ளடங்கலாக உள்ளீடுகளினது வழங்கல் போதுமாந்தன்மை மற்றும் மோசமான மண் மற்றும் பயிர் முகாமைத்துவ நடைமுறைகள் பற்றிய கரிசனைகளை ஏறபடுத்தியது. பெரும்போகம் மற்றம் சிறுபோகம் இரண்டிலுமிருந்தான மொத்த நெல் உற்பத்தி 3.3 மில்லியன் மெற்றிக் தொன் அரிசிக்குச் சமமாகவிருந்ததுடன், இது ஏறத்தாழ 17 மாதங்களுக்கு[3] அரிசிக்கான உள்நாட்டுக் கேள்வியினை நிறைவு செய்வதற்குப் போதுமானதாகவிருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. போதுமான உற்பத்திக்கு மத்தியிலும், அரிசி இறக்குமதிகள் 2020இன் 15,770 மெற்றிக் தொன்னிலிருந்து 2021இல் 147,091 மெற்றிக் தொன்களுக்கு குறிப்பிடத்தக்களவான அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தன. இதில், ஏறத்தாழ 134,716 மெற்றிக் தொன்களைக் கொண்ட அரிசி 2021 நவெம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களின் போது இறக்குமதி செய்யப்பட்டன. உள்நாட்டுச் சந்தையில் அவதானிக்கபட்ட அரிசி விலைகளில் மேல்நோக்கிய

3 வீட்டுத்துறையினரின் அரிசிக்கான கேள்வியானது இந்நோக்கத்திற்கான பிந்திய தரவுகளை வழங்குகின்ற வீட்டுத்துறை வருமானம் மற்றும் செலவின அளவீடு - 2016 அடிப்படையிலான வீட்டுத்துறையினரின் சராசரி அரிசி நுகர்வு மற்றும் 2021இன் நடுவாண்டுக் குடித்தொகை என்பனவற்றினைப் பயன்படுத்தி கணிக்கப்படுகிறது.

2

அட்டவணை 2.3
நெல்த்துறை புள்ளிவிபரங்கள்

| விடயம் | அலகு | 2020 (அ) | | | 2021 (ஆ) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பெரும்போகம் | சிறுபோகம் | மொத்தம் | பெரும்போகம் | சிறுபோகம் | மொத்தம் |
| விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 752 | 456 | 1,208 | 770 | 501 | 1,272 |
| அறுவடை செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 740 | 451 | 1,191 | 762 | 497 | 1,259 |
| அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 663 | 403 | 1,066 | 682 | 445 | 1,127 |
| உற்பத்தி | '000 மெற்றிக்தொன் | 3,197 | 1,924 | 5,121 | 3,061 | 2,088 | 5,150 |
| | '000 புசல்கள் | 153,188 | 92,206 | 245,395 | 146,702 | 100,067 | 246,769 |
| எக்டேயர் ஒன்றுக்கான விளைச்சல் (இ) | கி.கி./ எக்டேயர் | 4,821 | 4,770 | 4,802 | 4,492 | 4,692 | 4,571 |
| வழங்கப்பட்ட கொடுகடன் | ரூ.மில் | 5,605 | 4,096 | 9,701 | 8,603 | 4,449 | 13,052 |
| அரிசி இறக்குமதிகள் (ஈ) | '000 மெற்றிக்தொன் | வி.கி | வி.கி | 16 | வி.கி | வி.கி | 147 |
| இறக்குமதி செய்யப்பட்ட அரிசிக்கு சமனான நெல் (ஈ) | '000 மெற்றிக்தொன் | வி.கி | வி.கி | 23 | வி.கி | வி.கி | 216 |


(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) எக்டேயர் ஒன்றுக்கான விளைச்சலானது உற்பத்தியை தேறிய நிலப்பரப்பால் பிரிப்பதன் மூலம் கணிப்பிடப்பட்டது
(ஈ) ஆண்டுக்கான பெறுமதி

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

தளம்பல்களை நிலைநிறுத்தும் நோக்குடனும் போதியளவு கையிருப்பு பேணப்படுகின்றது என்பதனை உறுதிசெய்யும் நோக்கிலும் இறக்குமதி செய்யப்பட்டது.

**போதுமான நெல் உற்பத்திக்கும் உயர்வான அரிசி இறக்குமதிகளுக்கும் மத்தியில் நெல்லின் மற்றும் அரிசி வகைகளின் விலைகள் ஆண்டு முழுவதும் குறிப்பிடத்தக்களவு உயர்வாகவே காணப்பட்டன.** முன்னயை ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டு காலப்பகுதியில் *சம்பா* நெல்லின் சராசரி விலை கிலோகிராமொன்றிற்கு ரூ.65.32 இனை எய்தி, 29.2 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்த அதேவேளை, 2021இல் *நாடு* நெல் வகையின் சராசரி விலை கிலோகிராமொன்றிற்கு ரூ.57.61 ஆக 20.7 சதவீதத்தினால் அதிகரித்தது. வேளாண்மையாளர்களுக்கு நியாயமான விலைகள் கிடைப்பதை உறுதி செய்யும் பொருட்டு அரசாங்கம் அதன் நெல் கொள்வனவு செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தினை நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைமையில் தொடர்ந்தும் முன்னெடுத்தது. அதற்கமைய, 2021 மாச்சு தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் நெல் சந்தைப்படுத்தும் சபை அனைத்து நெல் வகைகளுக்கும் கிலோகிராமொன்றிற்கு ரூ.56.50 விலையில் நெல்லைக் கொள்வனவு செய்தது. இது, பின்னர் *நாடு* கிலோகிராமொன்றிற்கு ரூ.50.00, *சம்பா* கிலோகிராமொன்றிற்கு ரூ.52.00 மற்றும் *கீரி சம்பா* கிலோகிராமொன்றிற்கு ரூ.55.00 என்ற ரீதியில் 2021 யூலையில் திருத்தம் செய்யப்பட்டது. மேலும், 2021 செத்தெம்பரில் *நாடு* வகைக்கான உத்தரவாத விலை கிலோகிராமொன்றிக்கு ரூ.55.00 ஆக மேலும் அதிகரிக்கப்பட்டது. நெல் சந்தைப்படுத்தல் சபையானது 2020/2021 பெரும்போகத்திலிருந்து ஏறத்தாழ 44,948 மெற்றிக் தொன் நெல்லைக் கொள்வனவுசெய்த அதேவேளை, 2021 சிறுபோகக் காலப்பகுதியில் ஏறத்தாழ 7,728 மெற்றிக் தொன்களைக் கொள்வனவு செய்தது. மேலும், நெல் வேளாண்மையாளர்களுக்கு 2021/2022 பெரும்போகத்திற்கான நெல் கொள்வனவில் போட்டிமிக்க விலைகளை வழங்கும் நோக்குடன் *நாடு* வகைக்கு கிலோகிராமொன்றிற்கு ரூ.90.00, *சம்பா* கிலோகிராமொன்றிற்கு ரூ.92.00 மற்றும் *கீரி சம்பா* கிலோகிராமொன்றிற்கு ரூ.95.00 என்ற விலைகளில் கொள்வனவு செய்வதற்குரிய அனுமதி 2022 பெப்புருவரியில் வழங்கப்பட்டது. 2021/2022 பெரும்போகக் காலப்பகுதியில் ஏறத்தாழ 300,000 மெற்றிக் தொன் நெல்லைக் கொள்வனவு செய்வது நெல் சந்தைப்படுத்தல் சபையின் எதிர்பார்ப்பாக இருந்ததுடன் 2022 மாச்சு நடுப்பகுதியளவில் ஏறத்தாழ 70,000 மெற்றிக் தொன்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், களஞ்சிய வசதிகள், உலர்த்துதல் மற்றும் போக்குவரத்து வசதிகள் உள்ளடங்கலாக உட்கட்டமைப்பு மற்றும் போக்குவரத்து வசதிகளின் பற்றாக்குறை காரணமாக நெல் சந்தைப்படுத்தல் சபையின் நெல் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டத்தின் வினைத்திறன் தடைப்பட்டமையினால் திறந்த சந்தையில் தனியார் ஆலை உரிமையாளர்கள் போட்டிமிக்க சந்தை விலைகளில் கணிசமான நெல் தொகையினைக் கொள்வனவு செய்ய இயலுமாகவிருந்தனர். சராசரியாக, *சம்பா* அரிசியின் சில்லறை விலை கிலோகிராமொன்றிற்கு ரூ.136.52 ஆகவிருந்ததுடன், இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 30.8 சதவீதம் கொண்ட அதிகரிப்பாக காணப்பட்டது. அதேவேளை, *நாட்டரிசியின்* சராசரி சில்லைற விலை முன்னைய ஆண்டில்

வரைபடம் 2.5
அரிசி : நிரம்பல் மற்றும் கேள்வி




*மூலங்கள்:* இலங்கை மத்திய வங்கி
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கைச் சுங்கம்

அறிக்கையிடப்பட்ட கிலோகிராமொன்றிற்கு ரூ.100.01 உடன் ஒப்பிடுகையில் 2021இல் கிலோகிராமொன்றிற்கு ரூ.116.56ஆக இருந்தது. உயர்வான விலைத் தளம்பல்கள் மற்றும் இத் தளம்பல்களினால் வாடிக்கையாளர்கள் பாதிப்படைவதைத் தடுக்கும் நோக்குடனும் *சம்பா* அரிசி கிலோகிராமொன்றிற்கு ரூ.103.00 மற்றும் *நாட்டரிசி* கிலோகிராமொன்றிற்கு ரூ.98.00 ஆக உயர்ந்தபட்ச சில்லறை விலையினை நிர்ணயித்து 2021 செத்தெம்பர் 02இல் வர்த்தமானியொன்று வெளியிடப்பட்டது. இருப்பினும், 2021 செத்தெம்பர் இறுதியில் இவ் வர்த்தமானி இரத்துச்செய்யப்பட்டு மேலதிக விலை உயர்விற்கு வழிவகுத்தது. அதேவேளை, சந்தையில் போதுமான மற்றும் தொடர்ச்சியான நிரம்பலை உறுதிசெய்யும் நோக்குடன், இறக்குமதி செய்யப்பட்ட *சம்பா, நாடு* மற்றும் *பச்சை* அரிசி மீதான விசேட பண்ட வரி 2021 ஒத்தோபரிலிருந்து 2022 யூன் வரையான காலப்பகுதிக்கு கிலோகிராமொன்றிற்கு ரூ.65.00 இலிருந்து ரூ.0.25இற்கு கணிசமானளவு குறைக்கப்பட்டது.

**அரசாங்கத்தின் தேசிய கொள்கைக் கட்டமைப்பிற்கு இசைவாக நிலைபேறான விதத்தில் வேளாண்மைத் துறை உற்பத்தித்திறனை உயர்த்துவதற்கான பல்வேறு வழிமுறைகள் முன்னெடுக்கப்பட்டன.** வேளாண்மை இரசாயனங்களின் மிதமிஞ்சிய பயன்பாட்டின் பாதகமான விளைவுகளை உரியவாறு கரிசனையிற்கொண்டு, இரசாயன வளமாக்கிகள், பீடைநாசினிகள் மற்றும் களைநாசினிகள் இறக்குமதி மீது 2021 மேயில் தடைவிதிக்கப்பட்டது. இந்நோக்கில், நிலைபெறத்தக்க வேளாண்மை நடைமுறைகளை துரிதமாகப் பின்பற்றுவதற்கு பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்ட அதேவேளை, உற்பத்தி வேகம் குறைவடைந்து காணப்பட்ட உள்நாட்டு சேதன வளமாக்கி உற்பத்தியும் ஊக்குவிக்கப்பட்டது. எனினும், இத் துரித கொள்கை முன்னெடுப்பானது அசேதன மற்றும் சேதன வளமாக்கிகள் மட்டுப்படுத்தப்பட்டளவில் கிடைக்கப்பெறுவதற்கு வழிவகுத்து நெற் பயிர்ச்செய்கையில் பாரிய விளைச்சல் இழப்புகள் பற்றிய கரிசனைகளைத் தோற்றுவித்து நெல் விலை உயர்விற்கு காரணமாக அமைந்தது. எனவே, நெற் பயிர்ச்செய்கைக்கான இயற்கை சேதனப் பசளை, சேர்வையாக்கப்பட்ட கனியங்கள் மற்றும் நுண்போசனைகள் போன்றவற்றை இறக்குமதி செய்வதற்கு வழிமுறைகள் எடுக்கப்பட்டன. 2022 சிறுபோகக் காலப்பகுதியில் நெற் பயிர்ச்செய்கைக்காக பொட்டாசியம் மியுறியேற் (MOP) இறக்குமதி செய்வதற்கும் அரசாங்கம் திட்டமிட்டது. சேதன வேளாண்மை நடைமுறைகளை ஊக்குவிப்பதற்கான மற்றுமொரு முயற்சியாக 2021/2022 பெரும்போகத்தில் தமது சொந்த நெற் பயிர்ச்செய்கைக்காக சேதன வளமாக்கிகளைப் பயன்படுத்துகின்ற வேளாண்மையாளர்களுக்கு ஒரு ஹெக்டயர் என்ற உயர்ந்தபட்ச உச்ச வரம்பில் ஹெக்டயர் ஒன்றிற்கு ரூ.12,500 கொண்ட ஊக்குவிப்பினை வழங்கியிருந்தது. மேலும், நெல் வயல்களில் மண் போசனைப் பற்றாக்குறைகளைத் தீர்க்கும் பொருட்டு 2021/2022 பெரும் போகத்திற்காக மானியங்களாக சேதன மற்றும் உயிரியல் வளமாக்கிகள் வழங்கப்பட்ட அதேவேளை, அவர்களின் பயன்பாட்டிற்கென சொந்தமாக கூட்டுப்பசளையினை உற்பத்தி செய்வதற்கும் வேளாண்மையாளர்களுக்கு உதவியளிக்கப்பட்டது. இந்நோக்கில், கூட்டு வளமாக்கியின் தரத்தினை உறுதிசெய்வதற்கு ஆய்வுகூட வசதிகளும் கிடைக்கச்செய்யப்பட்டன. சிறப்பாக செயலாற்றுகின்ற இனங்களைத் தெரிவுசெய்வதற்கு 10 பிரபல்யமான இனங்களையும் 4 மரபுசார்ந்த இனங்களையும் இணைத்து சேதனப் பயிர்ச்செய்கைக்கான நெல் இன பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டது. *பயிர் மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின்* கீழ், புதிய கலப்பினங்களை உருவாக்கி இனப்பெருக்க வகைகளை மதிப்பிடுதலும் மேற்கொள்ளப்பட்ட அதேவேளை நிலப்பண்படுத்தலில் தொடங்கி அறுவடை வரை ஒட்டுமொத்த பயிர்ச்செய்கைச் செயன்முறைக் காலப் பகுதியிலும் பொருத்தமான வேளாண்மைத் தொழில்நுட்பங்களை நடைமுறைப்படுத்தும் நோக்குடன் *நெல் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன் மேம்படுத்தல் செயற்றிட்டம்* தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டது.

## தேயிலை

**தேயிலை உற்பத்தியானது 2020இன் தொடர்புடைய காலப்பகுதியில் கொவிட்-19 நோய்த் தொற்றின் மூலம் தூண்டப்பட்ட தாழ்ந்த தளத்தாக்கத்தின் காரணமாக ஆண்டின் முதலரைக் காலப்பகுதியில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க விரிவடைதலினால் தூண்டப்பட்டு 2021இல் ஒட்டுமொத்தமாக 7.4 சதவீத வளர்ச்சியினை பதிவுசெய்தது.** ஆண்டின் முதலரைப்பகுதியில் பதிவாகிய 24.0 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைத் தொடர்ந்து, நவெம்பர் மற்றும் திசெம்பர் மாத காலப்பகுதியில் நிலவிய சாதகமற்ற வானிலை நிலைமைகளால் பெருமளவில் தூண்டப்பட்டு ஆண்டின் பிந்திய அரைப்பகுதியில் தேயிலை உற்பத்தியில் 7.2 சதவீதம் கொண்ட சடுதியான சுருக்கமொன்றை பதிவுசெய்தது. மொத்த தேயிலை உற்பத்தியில் முறையே ஏறத்தாழ 22 சதவீதத்திற்கும் 17 சதவீதத்திற்கும் 61 சதவீதத்திற்கும் வகைகூறும் உயர்நில, மத்தியநில மற்றும் தாழ்நில வளர் தேயிலை உற்பத்தி 2021இல் முறையே 5.0 சதவீதத்தினாலும் 9.1 சதவீதத்தினாலும் 7.8 சதவீதத்தினாலும் விரிவடைந்தன. அதேவேளை, சிறு உடமையாளர் துறையின் சராசரி விளைச்சல் 2020இல் அறிக்கையிடப்பட்ட ஹெக்டயர் ஒன்றிற்கு 1,766 கிலோகிராம்களுடன் ஒப்பிடுகையில் ஹெக்டயர் ஒன்றிற்கு 1,880 கிலோகிராம்களுக்கு அதிகரித்ததுடன் பாரிய பெருந்தோட்டத் துறையின் சராசரி விளைச்சலுக்கு மேலாக காணப்பட்டது.

**கொழும்பு தேயிலை ஏலத்தில் தேயிலை விலைகள் தொற்றுநோய்க்கு முந்திய மட்டங்களுடன் ஒப்பிடுகையில் 2021இல் உயர்வடைந்து காணப்பட்டதாயினும், 2020இல் அவதானிக்கப்பட்ட மட்டங்களை விட கீழேயே காணப்பட்டன.** சராசரி தேயிலை விலையானது 2020இல் பதிவாகிய கிலோகிராமொன்றுக்கு ரூ.633.85 இலிருந்து ஆண்டு காலப்பகுதியில் கிலோகிராமொன்றிற்கு ரூ.619.15 இற்கு 2.3

சதவீதத்தினால் குறைவடைந்தது. அதற்கமைய, 2021ஆம் ஆண்டில் தாழ்நில மற்றும் மத்தியநில வளர் தேயிலை சராசரி விலைகள் ஆண்டிற்கு ஆண்டு முறையே 1.0 சதவீதத்தினாலும் 3.5 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்த அதேவேளை, உயர்நில வளர் தேயிலை 0.6 சதவீதம் கொண்ட சிறிய அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது. மேலும், தேயிலைக் கொழுந்துகளுக்காக சிறு உடமையாளர்களுக்குக் கிடைக்கப்பெற்ற சராசரி விலை 2020இன் கிலோகிராமொன்றிற்கு ரூ. 94.36 இலிருந்து ஆண்டு காலப்பகுதியில் கிலோகிராமொன்றிற்கு 93.67ஆக வீழ்ச்சியடைந்தது. ஆண்டு காலப்பகுதியில் தேயிலையின் சராசரி ஏற்றுமதி விலை (கப்பல் ஏற்றல் பெறுமதி) ரூபா நியதிகளில் கிலோகிராமொன்றிற்கு ரூ.920.76 ஆக 6.2 சதவீதத்தினால் அதிகரித்த போதிலும், தேயிலையின் கப்பல் ஏற்றல் பெறுமதி ஐ.அ.டொலர் நியதிகளில் 2021 ஆண்டு காலப்பகுதியில் 0.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. ஆண்டு காலப்பகுதியில் சராசரி தேயிலை விலைகள் குறைவடைந்தமை தேயிலை உற்பத்தியில் அதிகரிப்பிற்கும் அதேபோன்று ஆண்டு காலப்பகுதியில் ஏலத்திற்கு விநியோகிக்கப்பட்ட அளவில் அதிகரிப்பிற்கும் பகுதியளவு காரணமாக அமைந்தன. மேலும், கப்பலில் அனுப்பும் செலவுகள் அத்துடன் பொதிசெய்யும் பொருட்கள் போன்ற ஏனைய உள்ளீட்டு செலவுகளில் சடுதியான அதிகரிப்புக்களும் ஆண்டு காலப்பகுதியில் விலைகள் மீது பாதகமான தாக்கத்தைச் செலுத்தின.

**தேயிலை தொழில் துறையினை வலுப்படுத்துவதற்கு 2021இல் அரசாங்கத்தினால் பல்வேறு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.** இலங்கையில் தேயிலைத் துறைக்கான ஐந்து ஆண்டு உபாயம் மற்றும் நடவடிக்கைத் திட்டம் (2021-2025) ஆண்டுகாலப்பகுதியில் திட்டமிடப்பட்டவாறு இறுதிப்படுத்தப்பட்டு தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 2020இல் கொவிட்-19 நோய்த்தொற்றுக் காலப்பகுதியின் போது தொடங்கப்பட்ட தேயிலை வர்த்தகத்திற்கான முக்கிய படிக்கல்லாகவிருந்த இலத்திரனியல் - ஏல முறைமை தொடர்ந்தும் வெற்றிகரமாகத் தொழிற்பட்டதுடன் 2021இல் வலுப்படுத்தப்பட்ட வர்த்தகப்படுத்தல் மற்றும் தரவு அம்சங்களுடன் *'ஸ்மாட் ஒக்ஸன்'* ஆகத் தரமுயர்த்தப்பட்டது. தேயிலை நிலங்களின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கான மீள்நடுகை, புதிய நடுகை மற்றும் நிரப்பு நடுகை உதவுதொகை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தேயிலை பயிரிடப்படும் பிராந்தியங்களுக்கிடையில் 263 ஹெக்டயர்களுக்காக இலங்கை தேயிலைச் சபை ரூ.79.8 மில்லியனைப் பகிர்ந்தளித்தது. இலங்கைத் தேயிலைச் சபை, நடுத்தரளவிலான தேயிலைத் தோட்டங்களுக்கான மாதிரித் தேயிலைத் தோட்டச் செயற்றிட்டத்தினை தொடர்ந்தும் முன்னெடுத்த அதேவேளை, 17 காணிகளுக்காக ரூ.2.3 மில்லியனை வழங்கியதுடன் 138 தேயிலை நாற்றுமேடைகளை நிறுவுவதற்கு எதிர்பார்க்கின்றது. இதில், 113 நாற்றுமேடைகள் ஆண்டின் இறுதியில் தாபிக்கப்பட்டிருந்தன. தூய இலங்கைத் தேயிலை ஏற்றுமதிக்கான வர்த்தக நாம ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் தகைமைபெற்றுள்ள ஏற்றுமதியாளர்களுக்கு மானியம் வழங்குவதற்கு இலங்கை தேயிலைச் சபையின் தேயிலை ஊக்குவிப்பு மற்றும் சந்தைப்படுத்தல் நிலையத்திலிருந்து ரூ.1 பில்லியன் பயன்படுத்துவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியது. இலங்கைக்கேயுரிய உற்பத்தியின் தரத்தினையும் தனித்துவமான பண்பினையும் இனங்காண்பதற்கு உதவக்கூடிய இலங்கைத் தேயிலைக்கான புவியியல்சார்ந்த குறிகாட்டிச் சான்றிதழைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் நிதியியல் மற்றும் தொழில்நுட்ப உதவியினைப் பெற்றுக்கொள்வதற்கு யூரோ 1 மில்லியன் பெறுமதியுடைய முத்தரப்பு உடன்படிக்கையொன்று இலங்கை தேயிலைச் சபையினால் கைச்சாத்திடப்பட்டது. தேயிலை சிறு உடமையாளர் அபிவிருத்தி அதிகாரசபையானது தேயிலை மீள்நடுகை மற்றும் புதிய நடுகை நிகழ்ச்சித்திட்டங்கள் அத்துடன் பயிர் செழிப்பாக்கல் உதவுதொகை நிகழ்ச்சித்திட்டங்கள் என்பன தொடர்பிலான அதன் முயற்சிகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்தது. 2021இல் ஏறத்தாழ 849 ஹெக்டயர் தேயிலைக் காணிகள் மீள்நடுகை செய்யப்பட்டதோடு ஏறத்தாழ 678 ஹெக்டயர் புதிய காணிகள் தேயிலைக் காணிகளாக மாற்றம்செய்யப்பட்ட அதேவேளை, தேயிலைக் காணிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கான 3.3 மில்லியன் தேயிலைக் கன்றுகள் பயன்படுத்தப்பட்டன. ஐந்து வருடங்களின் பின்னர் ஏற்படும் இடைவெளிகளுக்கு தேயிலை மீள்நடுகை உதவுதொகையாக தேயிலை சிறு உடமையாளர்களுக்கு வழங்கப்படும் ஹெக்டயர் ஒன்றிற்கு ரூ.500,000 தொகை ஆண்டுகாலப்பகுதியில் ஹெக்டயர் ஒன்றிற்கு ரூ.630,000 ஆக அதிகரிக்கப்பட்ட அதேவேளை, ஹெக்டயர் ஒன்றிற்கு ரூ.400,000 புதிய நடுகை உதவுதொகை ஹெக்டயர் ஒன்றிற்கு ரூ.500,000 ஆக அதிகரிக்கப்பட்டது. நிலைபெறத்தக்க தேயிலை அபிவிருத்தி இலக்குகள், தேயிலைக்கான ஐந்து ஆண்டு உபாயம் மற்றும் நடவடிக்கைத் திட்டம் மற்றும் அரசாங்கத்தின் தேசிய கொள்கைக் கட்டமைப்பு என்பவற்றிற்கிணங்க துறையினை வலுப்படுத்துவதற்கு அணிசேர்ந்துள்ள தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் உபாயத்திட்டத்துடன் (2019-2023) இணங்கும் வகையில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் அத்துடன் சேவைச் செயற்றிட்டங்களை தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் தொடர்ந்தும் முன்னெடுத்தது.

### இறப்பர்

**பங்கசு நோய்ப்பரவலுடன் இணைந்து பால் சேகரிப்பு நாட்களின் போது பெருந்தோட்டப் பிரதேசங்களில் பெறப்பட்ட மழை வீழ்ச்சி காரணமாக இறப்பர் உற்பத்தி 2021இல் தொடர்ந்தும் குறைவடைந்து காணப்பட்டது.** அதற்கமைய, 2020இல் உற்பத்தி செய்யப்பட்ட 78.2 மில்லியன் கிலோகிராம்களிலிருந்து 2021இல் 76.9 மில்லியன் கிலோகிராம்களுக்கு 1.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 2021இன் முதலரைக் காலப்பகுதியில் இறப்பர் உற்பத்தி உயர்வடைகின்ற போக்கொன்றினைக் காண்பித்த போதிலும், இறப்பர் பெருந்தோட்டங்களின் உச்ச விளைச்சல் காலப்பகுதியாக பொதுவாகக் கருதப்படுகின்ற காலமான

ஆண்டின் இறுதிக் காலாண்டில் உற்பத்தியினைக் குறைவடையச் செய்த அதிக மழை நாட்களின் எண்ணிக்கை காரணமாக அதன் பின்னர் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது. மொத்த இறப்பர் உற்பத்தியின் ஏறத்தாழ 50 சதவீதத்திற்கு வகைகூறுகின்ற தட்டை இறப்பர் உற்பத்தி மீளாய்வுக் காலப்பகுதியில் 1.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த அதேவேளை, கிறேப் இறப்பர் உற்பத்தி 7.4 சதவீத வளர்ச்சியினைப் பதிவுசெய்தது. மொத்த இறப்பர் உற்பத்தியின் ஏறத்தாழ 32 சதவீதத்திற்கு வகைகூறுகின்ற ஏனைய இறப்பர் உற்பத்தி வகைகள் முன்னைய ஆண்டின் உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் 6.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. 2021இன் உள்நாட்டுக் கைத்தொழில்கள் மூலமான இறப்பரின் உள்நாட்டு நுகர்வானது, கைத்தொழில் துறை படிப்படியாக மீட்சியடைந்தமையுடன் இணைந்து 133.9 மில்லியன் கிலோகிராம்களுக்கு 19.4 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை, குறைவான உற்பத்தியின் காரணமாக இறப்பர் ஏற்றுமதிகள் 2021இல் 15.5 மில்லியன் கிலோகிராம்களுக்கு 1.7 சதவீதம் கொண்ட சிறிய வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தன.

**உலக சந்தைகளில் இயற்கை இறப்பர் விலைகளின் அதிகரிப்பினைப் பிரதிபலித்து உள்நாட்டுச் சந்தையிலும், இறப்பர் விலைகள் 2021 காலப்பகுதியில் அதிகரித்த போக்கொன்றினைக் காண்பித்தன.** கொழும்பு இறப்பர் ஏலத்தில் நாடாவாக்கப்பட்டு புகையூட்டப்பட்ட தட்டை இறப்பரின் (RSS1) சராசரி விலை 2020இல் பதிவாகிய விலைகளைவிட 2021இன் கிலோகிராமொன்றிற்கு ரூ.460.78ஆக 31.1 சதவீதத்தினால் அதிகரித்த அதேவேளை லேட்டெக்ஸ் கிறேப் இறப்பர் விலைகள் கிலோகிராமொன்றிற்கு ரூ.626.32 இற்கு 74.4 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தன. அதேவேளை, நாடாவாக்கப்பட்டு புகையூட்டப்பட்ட தட்டை இறப்பர் மற்றும் லேட்டெக்ஸ் கிறேப் இறப்பர் என்பவற்றின் சராசரி ஏல விலைகள் 2021 திசெம்பர் இறுதியில் உள்ளவாறு முறையே கிலோகிராமொன்றிற்கு ரூ.475.00 ஆகவும் கிலோகிராமொன்றிற்கு ரூ.696.58 ஆகவும் காணப்பட்டன. இறப்பரின் சராசரி கப்பல் ஏற்றல் பெறுமதி 2020இன் கிலோகிராமொன்றிற்கு ஐ.அ.டொலர் 1.91 இலிருந்து 2021இல் கிலோகிராமொன்றிற்கு ஐ.அ.டொலர் 2.72 ஆக அதிகரித்தது. ஆண்டின் பிந்திய காலப்பகுதியில் பன்னாட்டு விலைகளில் ஏற்பட்ட திடீர் ஏற்றமானது கிழக்காசியாவிலிருந்து கிடைக்கும் அதிகரிக்கின்ற கேள்விக்கு மத்தியில் பருவகாலம்சாராத காரணிகள் மற்றும் பால் சேகரிப்புத் தொழிற்பாடுகளை இடையூறுகளுக்குள்ளாக்கிய கனமழையின் காரணமாக உலக சந்தைகளில் வழங்கல் பற்றாக்குறைகள் மூலம் தூண்டப்பட்டிருந்தது.

**இறப்பர் கைத்தொழில்துறை சார்ந்த உற்பத்தித்திறனை மேம்படுத்துவதனையும் பெறுமதி சேர்த்தலை அதிகரிப்பதையும் நோக்காகக் கொண்டு, இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தினாலும் இறப்பர் ஆராய்ச்சி நிறுவகத்தாலும் நடைமுறைப்படுத்தப்பட்ட உபாயங்கள் 2021இல் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டன.** தேசிய வேளாண்மைக் கொள்கைக்கு அமைவாக இயற்கை இறப்பருடன் இணைந்த உற்பத்தியில் ஈடுபடுவதற்கும் வருமான மூலங்களை பன்முகப்படுத்துவதனை ஊக்குவிப்பதன் வாயிலாக சிறிய இறப்பர் காணிகளை இலாபகரமான வர்த்தக அலகுகளாக மாறுதலடையச் செய்வதற்கும் உள்நாட்டு சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சியாளர்களுக்காக உதவுதொகைகளை வழங்குவதற்கு வரவுசெலவுத் திட்டம் 2021இல் ரூ.60 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டது. சிறு உடமையாளர் துறையினை

அட்டவணை 2.4
முதன்மை வேளாண்மைப் பயிர்களின் போக்குகள்

| வகை | அலகு | 2020 (அ) | 2021 (ஆ) | மாற்றம் (%) 2019/20 (அ) | மாற்றம் (%) 2020/21 (ஆ) |
|---|---|---|---|---|---|
| **1. தேயிலை** | | | | | |
| 1.1 உற்பத்தி (இ) | மில் கி.கி | 278.9 | 299.5 | -7.1 | 7.4 |
| - தாழ் நிலம் | மில் கி.கி | 169.9 | 183.2 | -10.5 | 7.8 |
| - மத்திய நிலம் | மில் கி.கி | 46.7 | 51.0 | -0.9 | 9.1 |
| - உயர்ஓ நிலம் | மில் கி.கி | 62.2 | 65.3 | -1.3 | 5.0 |
| 1.2 மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 266 | 267 | 33.0 | 0.3 |
| 1.3 பயிரிடப்பட்ட நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 266 | 267 | 37.7 | 0.3 |
| 1.4 உற்பத்திச் செலவு (ஈ) | ரூபா/கி.கி | 492.48 | 533.13 | 1.8 | 8.3 |
| 1.5 சராசரி விலை | | | | | |
| - கொழும்பு ஏலம் | ரூபா/கி.கி | 633.85 | 619.15 | 15.9 | -2.3 |
| - ஏற்றுமதி (க.ஏ.பெ) | ரூபா/கி.கி | 866.70 | 920.76 | 5.4 | 6.2 |
| 1.6 மீள்நடுகை | எக்டேயர்கள் | 812 | 1,123 | -22.0 | 38.3 |
| 1.7 புதிய பயிரிடுகை | எக்டேயர்கள் | 424 | 696 | -61.6 | 64.2 |
| 1.8 கூட்டப்பட்ட பெறுமதி (உ) | மொ.உ.உ.,இன் %மாக | 0.6 | 0.7 | | |
| **2. இறப்பர்** | | | | | |
| 2.1 உற்பத்தி | மில் கி.கி | 78.2 | 76.9 | 4.6 | -1.7 |
| - தட்டை இறப்பர் | மில் கி.கி | 39.1 | 38.4 | 4.6 | -1.7 |
| - கிறேப் இறப்பர் | மில் கி.கி | 13.0 | 13.9 | -10.2 | 7.4 |
| - ஏனையவை | மில் கி.கி | 26.1 | 24.5 | 14.0 | -6.2 |
| 2.2 மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 138 | 139 | 0.2 | 0.6 |
| 2.3 பாலெடுக்கப்பட்ட நிலப்பரப்பு (ஊ) | '000 எக்டேயர்கள் | 121 | 113 | 6.1 | -6.0 |
| 2.4 உற்பத்திச் செலவு | ரூபா/கி.கி | 213.50 | 221.00 | 1.7 | 3.5 |
| 2.5 சராசரி விலை | | | | | |
| - கொழும்பு ஏலம் (ஆர்எஸ்எஸ்1) | ரூபா/கி.கி | 351.46 | 460.78 | 21.8 | 31.1 |
| - ஏற்றுமதி (க.ஏ.பெ) | ரூபா/கி.கி | 353.84 | 540.77 | 6.5 | 52.8 |
| 2.6 மீள்நடுகை (ஊ) | எக்டேயர்கள் | 976 | 1,470 | -6.2 | 50.6 |
| 2.7 புதிய பயிரிடுகை (ஊ) | எக்டேயர்கள் | 751 | 1,185 | -31.9 | 57.8 |
| 2.8 கூட்டப்பட்ட பெறுமதி (உ) | மொ.உ.உ.,இன் %மாக | 0.2 | 0.2 | | |
| **3. தெங்கு** | | | | | |
| 3.1 உற்பத்தி | காய்கள் மில் | 2,792 | 3,120 | -9.5 | 11.7 |
| - உலர்ந்த தேங்காய் துருவல் | காய்கள் மில் | 226 | 298 | -41.5 | 31.8 |
| - தேங்காய் எண்ணெய் | காய்கள் மில் | 48 | 211 | -81.0 | 340.6 |
| - ஏனையவை | காய்கள் மில் | 2,516 | 2,607 | 2.9 | 3.6 |
| 3.2 மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 505 | 505 | 0.2 | 0.2 |
| 3.3 உற்பத்திச் செலவு | ரூபா/காய் | 21.81 | 21.25 | 19.0 | -2.6 |
| 3.4 சராசரி விலை | | | | | |
| - உற்பத்தியாளர் விலை | ரூபா/காய் | 61.05 | 71.88 | 45.7 | 17.7 |
| - ஏற்றுமதி (க.ஏ.பெ) (எ) | ரூபா/காய் | 52.61 | 65.36 | 40.4 | 24.2 |
| 3.5 மீள்நடுகை/கீழ்பயிரிடுகை (ஏ) | எக்டேயர்கள் | 5,333 | 7,647 | -10.1 | 43.4 |
| 3.6 புதிய பயிரிடுகை (ஐ) | எக்டேயர்கள் | 8,000 | 1,387 | 16.9 | -82.7 |
| 2.8 கூட்டப்பட்ட பெறுமதி (உ) | மொ.உ.உ.,இன் %மாக | 0.6 | 0.7 | | |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) பச்சைத் தேயிலை உட்பட
(ஈ) பச்சைத் தேயிலை வழங்குனர்களின் இலாபவீச்சு உட்பட
(உ) வளர்த்தல் மற்றும் பதனிடுதல் மட்டும்
(ஊ) இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் பயிர்ச்செய்கை உதவித் திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்ட நிலப்பரப்பு
(எ) மூன்று முக்கிய தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள் மட்டும்
(ஏ) தெங்குப் பயிர்ச்செய்கைச் சபையின் பயிர்ச்செய்கை உதவித் திட்டங்களில் உள்ளடக்கப்பட்ட நிலப்பரப்பு
(ஐ) புதிதாக நடுகையிடப்பட்ட பரப்பானது ஒரு எக்டேயருக்கு 158 விதைகள் என்ற மாற்றல் வீதத்தில் தெங்குப் பயிர்ச்செய்கை சபையால் விநியோகிக்கப்பட்ட தெங்கு விதைகளின் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டது.

*மூலங்கள்:*
இலங்கைத் தேயிலைச் சபை
தேயிலை சிறு உடைமையாளர் அபிவிருத்தி அதிகாரசபை
பெருந்தோட்ட அமைச்சு
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இறப்பர் அபிவிருத்தி திணைக்களம்
தெங்குப் பயிர்ச்செய்கைச் சபை
தெங்கு அபிவிருத்தி அதிகாரச்சபை
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

இலக்காகக் கொண்டு 2020இல் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தினால் தொடங்கப்பட்ட உற்பத்தித்திறன் மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் புதிய நடுகை, மீள் நடுகை, கைவிடப்பட்ட பயிர்ச்செய்கை காணிகளை இறப்பர் பால் எடுப்பதற்காக தயார்படுத்தல் மற்றும் காணிகளின் உற்பத்தித்திறனை மேம்படுத்தல் என்பன தொடர்பிலான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட அதேவேளை, 2021இல் கைவிடப்பட்ட காணிகளில் மீள் பயிர்ச் செய்கைகளுக்காகவும் மழைகாப்புக் கருவிகளையும் களையெடுக்கும் உபகரணங்களையும் கொள்வனவு செய்வதற்காகவும் உதவுதொகைகள் வழங்கப்பட்டன. மேலும், *சிறு உடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் செயற்றிட்டத்தின்* கீழ் மொனராகலை, அம்பாறை மாவட்டங்கள் உள்ளடங்கலாக பாரம்பரியமற்ற இறப்பர் பயிரிடப்படும் பிரதேசங்களில் இறப்பர் புதிய நடுகை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளும் தொடர்ந்தன. அதன் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளின் பாகமொன்றாக இறப்பர் ஆராய்ச்சி நிறுவகம் புசல்லாவ, அகலவத்தை, களனிவெலி மற்றும் கேகாலை பெருந்தோட்ட நிறுவனங்களின் கீழ் 14 தோட்டங்களினதும் 6 சிறு உடமையாளர் பிரதேசங்களினதும் அறுவடைச் செயலாற்றத்தினை மேம்படுத்துவதற்கு சுற்றாடல் நட்புமிக்க மற்றும் பொருளாதார ரீதியாக இலாபகரமான மெதுவாக விடுவிக்கும் வளமாக்கித் தொழில்நுட்பமொன்றினை அறிமுகப்படுத்தியது. களுத்துறை, குருநாகல், மாத்தளை, கேகாலை, மாத்தறை, காலி, கொழும்பு மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் 131.8 ஏக்கர்களைக் கொண்ட மொத்தப்பரப்பை உள்ளடக்கிய கூட்டுப் பசளை பிரயோகத்திற்கான 64 தோட்டத்திலான பங்கேற்பு ஆராய்ச்சிப் பரிட்சாத்தங்களையும் இறப்பர் ஆராய்ச்சி நிறுவகம் நடாத்தியது. மேலும், இறப்பர் கைத்தொழிலையும் அதனோடிணைந்த பெறுமதிச் சங்கிலிகளையும் அபிவிருத்திசெய்து வலுப்படுத்துவதற்கான அனைத்தையுமுள்ளடக்கிய கொள்கைகளை உருவாக்கும் நோக்குடன் தொடர்புடைய அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கி இறப்பர் பயிர்ச்செய்கை மற்றும் கைத்தொழில்களின் அபிவிருத்திக்கான நிறுவனங்களுக்கிடையிலான ஒருங்கிணைப்புக் குழுவினை பெருந்தோட்ட அமைச்சு நிறுவியது.

### தெங்கு

**2021இல் தெங்கு உற்பத்தியானது மொத்தமாக 3,120 மில்லியன் காய் உற்பத்திகளுடன் வரலாற்றிலேயே உயர்வான மட்டத்தினை எட்டியுள்ளது.** அதற்கமைய, தெங்கு உற்பத்தி 2020இன் பதிவாகிய 9.5 சதவீதக் கொண்ட சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2021இல் 11.7 சதவீத வளர்ச்சியினைப் பதிவுசெய்தது. இவ்வதிகரிப்பானது, முக்கிய தெங்கு பயிரிடப்படும் பிரதேசங்களில் சாதகமான வாயு வெப்பநிலையுடன் 2020இன் பிந்திய பகுதியிலிருந்தும் 2021ஆம் ஆண்டு முழுவதும் நன்கு பரவலாகவிருந்த மழைவீழ்ச்சியினால் ஏற்பட்ட ஆக்கபூர்வமான வானிலை நிலைமைகளினால் தூண்டப்பட்டிருந்தது. 2020இல் அதன் குறைவடைந்த செயலாற்றத்திலிருந்து தெங்கு உற்பத்தி மீட்சியடைந்து மீளாய்வுக்குட்படுகின்ற காலப்பகுதியில் முக்கிய தெங்கு உள்ளீட்டு உற்பத்திகளின் வெளியீடு மேம்பாடுகளைக் காண்பித்தது. அதற்கமைய, 2020 உடன் ஒப்பிடுகையில் 2021இல் துருவல் தேங்காய் உற்பத்தி 33,289 மெற்றிக் தொன்களுக்கு 31.8 சதவீதத்தினால் அதிகரித்த அதேவேளை, தேங்காய் எண்ணெய் உற்பத்தி 117.8 சதவீதத்தினால் கணிசமாக மேம்பட்டது. உள்நாட்டு தேங்காய் எண்ணெய் உற்பத்தியினை ஊக்குவிக்கின்ற அதேவேளை, தாவர எண்ணெய் மற்றும் உண்ணத்தக்க எண்ணெய் இறக்குமதிகளையும் நுகர்வினையும் ஊக்கமிழக்கச் செய்வதற்கான அரசாங்கத்தின் கொள்கைசார்ந்த முயற்சிகளின் விளைவாக தேங்காய் எண்ணெய் உற்பத்தியில் அதிகரிப்புக் காணப்பட்டது. 2021இல் தேங்காய்க் களி, தேங்காய் பால், தேங்காயப் பால்மா உற்பத்தியும் அதிகரித்து காணப்பட்டது. மொத்த காய்கள் உற்பத்தி அதிகரித்த அதேவேளை, 2021இல் பதப்படுத்தப்பட்ட உற்பத்திகளுக்கான வளர்ச்சியடைகின்ற கைத்தொழில்சார் கேள்விக்கு மத்தியிலும் கொப்பரா மற்றும் உடன் தேங்காய் ஏற்றுமதிகள் வீழ்ச்சியைப் பதிவுசெய்தன. அதேவேளை, தொழில்த் துறையின் வளர்ச்சியடைகின்ற கேள்வியினை நிறைவுசெய்வதற்கு உள்நாட்டு உற்பத்தி போதாமையினால் தேங்காய் அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களுக்காக குளிரச்செய்யப்பட்ட தேங்காய் உள்ளீடுகளை இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

**தேங்காய் உற்பத்தியின் உயர்வான அளவுகளுக்கு மத்தியிலும் 2021 காலப்பகுதியில் தேங்காய் மற்றும் தேங்காய் அடிப்படையிலமைந்த உற்பத்திகளின் விலைகள் உயர்வான மட்டத்திலேயே காணப்பட்டு தேங்காய் அடிப்படையிலமைந்த கைத்தொழில்களிலிருந்து தோற்றம்பெறுகின்ற கேள்வியினைப் பிரதிபலித்தது.** அதற்கமைய, கொழும்பு தேங்காய் ஏலத்தில் தேங்காயின் சராசரி ஏல விலை 2020இன் காயொன்றுக்கு ரூ.48.89 இலிருந்து 2021இல் காயொன்றுக்கு ரூ.56.51 ஆக அதிகரித்தது. தேங்காயின் சராசரி சில்லறை விலை 2020 இனைவிட காயொன்றுக்கு ரூ.83.90 இற்கு 13.7 சதவீதத்தினால் அதிகரித்தது. 2020 செத்தெம்பரில் சுற்றறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு தேங்காய்களுக்கான உயர்ந்தபட்ச விலையினை ரூ.60 இலிருந்து ரூ.70 வரையான வீச்சில் அரசாங்கம் விதித்த போதிலும் உள்நாட்டுச் சந்தைகளில் தேங்காய்கள் கட்டுப்பாட்டு விலைகளுக்கு மேலதிகமாகவே விற்பனை செய்யப்பட்டதால், 2021 யூனில் விலைக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதற்கு இது வழிவகுத்தது. உண்ணத்தக எண்ணெய் இறக்குமதிகளில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி மற்றும் உலக சந்தையில் உண்ணத்தக்க எண்ணெய் விலைகளில் அதிகரிப்பு என்பவற்றுடன் தேங்காய் எண்ணெய்க்கான சராசரி உள்நாட்டு விலை 2021இல் 750 மி.லீற்றர் போத்தலொன்றிற்கு ரூ.443.42 இற்கு 29.2 சதவீதத்தினால் அதிகரித்தது. துருவப்பட்ட

தேங்காயின் சராசரி உள்நாட்டுச் சந்தை விலையும் முன்னைய ஆண்டில் பதிவாகிய கிலோகிராமொன்றிற்கு ரூ.447.56 உடன் ஒப்பிடுகையில் கிலோகிராமொன்றிற்கு ரூ.537.25 ஆக ஆண்டுகாலப்பகுதியில் மேலும் அதிகரித்தது.

**நிலைபேறான தெங்கு பயிர்ச்செய்கை முறைமையினை நிறுவுவதன் வாயிலாக தெங்குப் பயிர்ச்செய்கைகளின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் தொடர் வழிமுறைகளை எடுத்தது.** அதற்கமைய, தெங்குப் பயிர்ச்செய்கை சபையானது துறையின் நிலைபெறத்தக்க அபிவிருத்திக்கு வழியமைப்பதற்கு ஏற்கனவே காணப்படுகின்ற தெங்கு பயிர்ச்செய்கைக் காணிகளின் உற்பத்தித்திறன் மேம்படுத்தல்களைத் தூண்டுதல் மீது விசேட கவனம் செலுத்தி அதன் நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. அதற்கமைய, சேதன எரு, மண் ஈரப்பதனைக் காத்தல், ஈரப்பதன் பாதுகாப்பு நுட்பங்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி ஏற்கனவேயுள்ள தெங்குக் காணிகளை புனரமைப்பதற்கு விசேட உதவுதொகைத் திட்டம் 2021இல் அறிமுகப்படுத்தப்பட்டது. அத்துடன், முறைமைசார்ந்த பயிர்ச்செய்கைக்காக மானிய விலையில் தென்னங்கன்றுகளை வழங்கும் திட்டமும் ஆண்டு காலப்பகுதியில் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டது. நுண் நீர்ப்பாசன முறைமையினை நிர்மாணித்தல், குழாய் நீர்ப்பாசன முறைமை மற்றும் தெங்குக் காணிகளில் நீர் மூலங்கள் என்பவற்றுக்கு ஆதரவளிக்கின்ற புதிய உதவுதொகை முறைமையொன்றினூடாக தெங்குப் பயிர்ச்செய்கை மீது பாதகமான வானிலைத் தாக்கங்களைத் தணிப்பதற்கு தெங்குக் காணிகளில் வினைத்திறன்மிக்க நீர்ப்பாசன முறைமைகளை உருவாக்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆண்டுகாலப்பகுதியில், தெங்கு ஆராய்ச்சி நிலையம் மரபு ரீதியாக சிறந்த கலப்பு தேங்காய் நாற்றுகளை உற்பத்திசெய்தல் மற்றும் உயர்வான விளைச்சலைத் தருகின்ற *கப்சுவாய* கலப்பு தெங்கு பயிர்ச்செய்கைக்கான புதிய தெங்கு நாற்றுத் தோட்டமொன்றினை உருவாக்குதல் போன்ற பல நடவடிக்கைகளில் ஈடுபட்டது. தெங்குப் பயிர்ச்செய்கைக்குத் தேவையான சேதன வளமாக்கி பற்றிய மதிப்பீடு மற்றும் திண்ம மற்றும் திரவ சேதனப் பசளையினை தரப்படுத்தல் என்பன தொடர்புடைய முயற்சிகளிலும் தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் ஈடுபட்டது. தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையும் தேங்காய் உற்பத்தித் தயாரிப்பாளர்கள் மற்றும் தொழில்முயற்சியாளர்களுக்கு நிதியியல் ஆதரவினை வசதிப்படுத்துகின்ற அதேவேளை பெறுமதிசேர்க்கப்பட்ட தேங்காய் உற்பத்திகளின் பன்முகப்படுத்தல் மற்றும் தயாரிப்பு என்பவற்றில் தொடர்ச்சியான ஈடுபாட்டினை உறுதிசெய்வதன் மூலம் தெங்கு அடிப்படையிலமைந்த கைத்தொழில்களுக்கு தொடர்ந்தும் ஆதரவளித்தது.

## சிறு ஏற்றுமதிப் பயிர்கள்

**கொவிட்-19 நோய்த்தொற்றுடன் தொடர்புபட்ட உலகளாவிய வழங்கல் சங்கிலி இடையூறுகளுக்கு மத்தியிலும் சிறு ஏற்றுமதிப் பயிர்களின் வளர்ச்சி உத்வேகம் 2021ஆம் ஆண்டில் தொடர்ந்து காணப்பட்டது.** ஏற்றுமதி வேளாண்மைத் திணைக்களத்தின் தற்காலிக மதிப்பீடுகளின் படி சிறு ஏற்றுமதிப் பயிர்களின் உற்பத்தி, 2020 விட 2021ஆம் ஆண்டில் 28.6 சதவீதத்தினால் அதிகரித்து காணப்பட்டது. வாசனைத்திரவியங்கள் இறக்குமதி மீது அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகள் விவாசாயிகளை பயிர்ச்செய்கையில் முனைப்புடன் ஈடுபட ஊக்குவித்து துறையின் மேம்பட்ட செயலாற்றத்திற்கு வழிவகுத்தது. கருவா, மிளகு, கராம்பு, ஏலக்காய், கோப்பி, கொக்கோ, சாதிக்காய் என்பவற்றின் உற்பத்தி 2021ஆம் ஆண்டில் வளர்ச்சியினைப் பதிவுசெய்த அதேவேளை வெற்றிலை உற்பத்தி சிறிதளவு வீழ்ச்சியடைந்தது. மேலும், மிளகுக்கான உலகளாவிய கேள்வியில் உயர்வடைதலைத் தொடர்ந்து அதன் விலைகள் குறிப்பிடத்தக்களவு அதிகரித்து 2016 தொடக்கம் குறைவான விலையினால் பாதிப்படைந்த பயிர்ச்செய்கையாளர்களுக்கு நிதியியல் நிவாரணத்தை வழங்கியது. அரசாங்கத்தின் *துரிதப்படுத்தப்பட்ட மஞ்சள் பயிர்ச்செய்கை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின்* தொடக்கத்துடன் விளைச்சலில் தன்னிறைவினை அடைந்து கொள்ளும் அரசாங்கத்தின் இலக்கிற்கு அமைவாக 2021 காலப்பகுதியில் மஞ்சள் பயிர்ச்செய்கை குறிப்பிடத்தக்களவு விரிவடைந்தது. மேம்பட்ட உற்பத்தியினைப் பிரதிபலித்து உயர்வான செயலாற்றத்தினைப் பதிவுசெய்த ஏற்றுமதி வேளாண்மைத் துறையானது ஆண்டுகாலப்பகுதியில் மொத்த ஏற்றுமதி அளவுகளில் 20.4 சதவீதம் கொண்ட அதிகரிப்பைப் பதிவுசெய்த அதேவேளை ரூபா நியதிகளில் 41.0 சதவீதத்தினால் ஏற்றுமதி வருவாய்களும் அதிகரித்தன.

**ஏற்றுமதி வேளாண்மைத் துறையின் செயலாற்றத்தினைத் தரமுயர்த்துவதற்கு ஏற்றுமதி வேளாண்மை பயிர்களின் தரத்தினையும் உற்பத்தித்திறனையும் அதிகரிப்பதன் வாயிலாக வெளிநாட்டு வருவாய்களை ஈட்டுவதை இலக்காகக்கொண்ட பல்வேறு வழிமுறைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.** அனுராதபுரம், பொலநறுவை, அம்பாறை, வவுனியா, யாழ்ப்பாணம் போன்ற மரபுசாரா பிரதேசங்களில் மிளகு, பாக்கு, இஞ்சி, மஞ்சள், வெற்றிலை பயிர்ச்செய்கையினை விரிவாக்கம் செய்வதுடன் அதனுடன் தொடர்புடைய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் 2021ஆம் ஆண்டில் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டன. சேதனப் பயிர்ச்செய்கையினை அறிமுகப்படுத்தி பிரபல்யப்படுத்தல், சிறந்த வேளாண்மை பயிற்சிகள் மற்றும் சிறந்த தயாரிப்பு பயிற்சிகள் என்பன உள்ளடங்கலாக உற்பத்தியின் தரத்தினை அதிகரிப்பதற்கான முயற்சிகளை ஏற்றுமதி வேளாண்மை திணைக்களம் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தியது. மேலும், பொருளாதார ரீதியாக உற்பத்தித்திறன்மிக்க பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் உதவுவதற்காக உற்பத்திதிறன் மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள், பயிருக்கான குறிப்பான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் சேதனப் பயிர்ச்செய்கை திட்டங்கள் போன்ற பல அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் 2021ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன. அறுவடைக்குப் பிந்திய செயற்பாடுகளை

2

மேம்படுத்தும் நோக்குடனும் பொருத்தமான தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி பெறுமதி சேர்த்தல் நடவடிக்கையினுள் அவர்களை ஈடுபடுத்துவதற்கும் தொழில்நுட்பம் தொடர்புபட்ட வழிகாட்டலுக்கான ஆதரவும் வேளாண்மையாளர்களுக்கு வழங்கப்பட்டன. தரச் சான்றிதழ்களைகளையும் சேதனப் பயிர்ச்செய்கை ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டத்தினூடாக சேதனச் சான்றிதழையும் பெற்றுக்கொள்ளுவதற்கு பயிர்ச் செய்கையாளர்களுக்கு உதவியளிக்கப்பட்டது.

## ஏனைய களப் பயிர்கள்

**இறக்குமதிகள் மீதான தடைகளுக்கு மத்தியிலும் சாதகமான வானிலை நிலைமைகள் மற்றும் உள்நாட்டு உற்பத்திக்கான உயர்வான கேள்வி காரணமாக ஏனைய களப் பயிர்களின் உற்பத்தி அதிகரித்து காணப்பட்டது.** அதற்கமைய, 2021ஆம் ஆண்டில் ஏனைய களப் பயிர்களின் ஒட்டுமொத்த உற்பத்தி ஆண்டுக்காண்டு அடிப்படையில் 27.3 சதவீதத்தினால் 843,297 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தது. இவ் அதிகரிப்பு 2020/2021 பெரும்போகத்தில் பதிவுசெய்யப்பட்ட 41.9 சதவீத அதிகரிப்பினால் கணிசமான பங்கு தூண்டப்பட்டிருந்தது. அதேபோன்று 2021 சிறுபோகமும் முன்னைய சிறுபோகத்தை விட 2.0 சதவீதம் கொண்ட அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது. சோளம், குரக்கன், உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம், பாசிப்பயறு, உளுந்து, நிலக்கடலை மற்றும் எள்ளு போன்ற ஏனைய களப் பயிர்களின் உள்நாட்டு உற்பத்திகள் அதிகரிப்பினைப் பதிவுசெய்த அதேவேளை சின்ன வெங்காயம், பச்சை மிளகாய், கௌபி, சோயா அவரை மற்றும் இறுங்கு உற்பத்திகள் வீழ்ச்சியினைப் பதிவுசெய்தது. உள்நாட்டு சோள உற்பத்தியினை மேம்படுத்தும் பொருட்டு அரசாங்கத்தினால் நடாத்தப்பட்ட பல்வேறு வலுப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களின் விளைவாக, 2020 உடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டு காலப்பகுதியில் சோள உற்பத்தி 472,444 மெற்றிக் தொன்களுக்கு 50.7 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது. சோள இறக்குமதியினைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டதன் காரணமாக சோள இறக்குமதியும் 2021ஆம் ஆண்டில் 47.8 சதவீதத்தினால் குறைவடைந்தது. 2020ஆம் ஆண்டில் 36.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த உருளைக்கிழங்கு உற்பத்தி, 2021ஆம் ஆண்டில் 16.6 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் மீளெழுச்சிபெற்ற அதேவேளை உருளைக்கிழங்கு இறக்குமதிகள் 2020ஆம் ஆண்டைவிட 8.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. மேலும், 2021ஆம் ஆண்டில் பெரிய வெங்காய உற்பத்தியானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 65,907 மெற்றிக் தொன்களுக்கு 53.2 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் பெரிய வெங்காய இறக்குமதி 257,421 மெற்றிக் தொன்களுக்கு 3.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, விதைகள் மற்றும் நடுகைப்பொருட்கள் விநியோகத்தினூடாக தொடர்ச்சியான ஆதரவுக்கு மேலதிகமாக குறிப்பிடப்பட்ட உற்பத்தி மேம்படுத்தல் முயற்சிகளூடாக ஏனைய களப் பயிர்களின் உள்நாட்டு உற்பத்தியினை அதிகரிப்பதற்கு அரசாங்கம் பல வழிமுறைகளைப் பின்பற்றியது. அதற்கமைய, ஆண்டுகாலப்பகுதியில், கமத்தொழில் அமைச்சு மேம்பட்ட உணவுப் பாதுகாப்புக்கு வழியமைக்கின்ற அதேவேளை அறுவடைகளுக்கு நியாய விலையினை உறுதிசெய்வதற்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வேளாண்மையாளர்களுக்கு குறுகியகால களஞ்சிய வசதிகளை வழங்கும் நோக்குடன ஏனைய களப் பயிர்களுக்கான 102 களஞ்சியசாலைகளை நாடு முழுவதும் நிர்மாணிப்பதை முன்னெடுத்தது. இதில் 76 செயற்றிட்டங்கள் 2021 இறுதியளவில் நிறைவுபெற்றிருந்தன. கமத்தொழில் திணைக்களமானது சிறந்த வேளாண்மை நடைமுறைகளை ஊக்குவித்தல், ஏனைய களப் பயிர்களின் பயிர்ச்செய்கைப் பரப்பினை விரிவுபடுத்துதல், பீடை முகாமைத்துவ நுட்பங்களை மேம்படுத்துதல் அத்துடன் உயர் விளைச்சலைத் தருக்கின்ற விதைகளைப் பயன்படுத்தல் என்பவற்றுக்கான அதன் முயற்சிகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்த அதேவேளை, நீர் முகாமைத்துவத்திற்கான மேம்படுத்தல்கள் மீதும் கவனம் செலுத்தியது. உள்நாட்டு உணவுப் பாதுகாப்பினை வலுப்படுத்தும் பொருட்டு, விதை உற்பத்தியினை ஊக்குவித்தல், வளமாக்கி மற்றும் பீடைநாசினிகள் போன்ற வேளாண்மை உள்ளீடுகளின் உகப்பான பயன்பாடு, களஞ்சிய இயலளவினை அதிகரித்தல், காலநிலைக்கு தாக்குப்பிடிக்கத்தக்க வேளாண்மை பற்றிய சிறந்த நடத்தைகளைப் பின்பற்றுதல், பெறுமதிச் சங்கிலிகளுக்கான ஒருங்கிணைப்பை அதிகரித்தல் மற்றும் புதிய சந்தைத் தளங்களை நிறுவுதல் போன்றவற்றின் மூலம் ஏனைய களப் பயிர்களினதும் வழங்கலை மேம்படுத்துவதற்கு மேலும் முயற்சிகள் தேவைப்படுகின்றன.

## காய்கறிகள்

**கொந்தளிப்பான வானிலை, வளமாக்கிப் பற்றாக்குறை மற்றும் அதிகரித்த இயந்திர மற்றும் போக்குவரத்துச் செலவுகள் என்பவற்றின் இணைந்த தாக்கத்தின் காரணமாக காய்கறி வழங்கல் 2021ஆம் ஆண்டில் வீழ்ச்சியடைந்தது.** காய்கறிகளின் மொத்த உற்பத்தி, 2020ஆம் ஆண்டில் பதிவாகிய 1,693,095 மெற்றிக் தொன்களுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் 1,669,515 மெற்றிக் தொன்களுக்கு 1.4 சதவீதத்தினால் குறைவடைந்தது. முன்னைய பெரும்போகத்தை விட 871,729 மெற்றிக் தொன்களுக்கு 2.5 சதவீதம் கொண்ட சுருக்கமொன்றுடன் 2020/2021 பெரும்போகக் காலப்பகுதியில் குறைவடைந்த காய்கறி உற்பத்தி இவ்வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக அமைந்திருந்தது. அதேவேளை, 2021 சிறுபோக உற்பத்தியும் 2020ஆம் ஆண்டின் தொடர்புடைய பருவகாலத்துடன் ஒப்பிடுகையில் 797,786 மெற்றிக் தொன்களுக்கு 0.2 சதவீதத்தினால் சிறிதளவு வீழ்ச்சியடைந்தது. குறைவான உற்பத்தி மற்றும் வழங்கல் சங்கிலிக்கான இடையூறுகள் என்பன ஆண்டு முழுவதும் காய்கறி விலைகளின்

தளம்பலுக்கு வழிவகுத்தன. அதற்கமைய, பருவகால அறுவடை காரணமாக காய்கறி விலைகள் மாச்சு மற்றும் செத்தெம்பர் மாதங்களில் அவதானிக்கப் பெற்ற சிறிய வீழ்ச்சிகள் தவிர ஆண்டின் ஏனைய காலப்பகுதியில் உயர்வாகவே காணப்பட்டன. அதிக மழை வீழ்ச்சி மற்றும், வளமாக்கி இறக்குமதி மீதான கட்டுப்பாடுகளைத் தொடர்ந்து வேளாண்மையிற்கான இரசாயனங்களின் பற்றாக்குறை காரணமாக வளமாக்கித் தட்டுப்பாடு மற்றும் பீடை மற்றும் நோய்ப்பரவல் என்பனவற்றின் விளைவாக காய்கறி விலைகள் ஆண்டின் இறுதியில் பருவகால விலை வீதங்களையும் விஞ்சிக் காணப்பட்டது. அதேவேளை, ஐ.அ.டொலர் 28.5 மில்லியன் பெறுமதி கொண்ட 21,540 மெற்றிக் தொன் காய்கறிகள் ஏற்றுமதி செய்யப்பட்ட அதேவேளை ஐ.அ.டொலர் 384.3 மில்லியன் பெறுமதியுடைய 697,144 மெற்றிக் தொன் காய்கறிகள் 2021 காலப்பகுதியில் இறக்குமதி செய்யப்பட்டன. மேலும், ஆண்டுகாலப்பகுதியில் உள்நாட்டு காய்கறி உற்பத்தியினை ஊக்குவித்து வலுப்படுத்துவதற்கு பல அரசாங்க நிறுவனங்களும் தொடர்ந்து வழிமுறைகளை மேற்கொண்டன. தொழில்நுட்பத்தினைப் பின்பற்றுவதனை மேம்படுத்துகின்ற அதேவேளை அறுவடைக்குப் பிந்திய முகாமைத்துவம் மீதான தொழில்நுட்பத்தை மையப்படுத்திய நுட்பங்கள் மற்றும் வேளாண் வியாபார அபிவிருத்தியினை வலுப்படுத்துவதன் மீதான அவற்றின் கசிவுத்தாக்கங்கள் அத்துடன் பாதுகாப்பினை மேம்படுத்துதல் போன்றவற்றின் தாக்கத்தினை மதிப்பிடுவதற்கு கமத்தொழில் அமைச்சின் கீழ் தொழிற்படுகின்ற தேசிய அறுவடைக்குப் பிந்திய முகாமைத்துவ நிறுவனம் பல ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்றிட்டங்கள், பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஆலோசனைச் சேவைகள் என்பவற்றை முன்னெடுத்தது. 2022இன் ஆரம்பப்பகுதியில் அரசாங்கமானது காய்கறி மற்றும் பழங்கள் உற்பத்தியினை அதிகரிப்பதற்கும் உணவு பாதுகாப்பினை உறுதிசெய்யும் பொருட்டும் 8 அரசாங்க முகவராண்மையின் உதவியுடன் வீட்டுத்தோட்டம் செய்வதற்கான தேசிய மட்ட நிகழ்ச்சித்திட்டமொன்றினைத் தொடங்கிவைத்தது.

### பழங்கள்

**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் தற்காலிக மதிப்பீடுகளின் படி 2021ஆம் ஆண்டில் பழ உற்பத்தி 3.3 மில்லியன் மெற்றிக் தொன்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.** மீளாய்வு செய்யப்படுகின்ற ஆண்டுகாலப்பகுதியில் ஐ.அ.டொலர் 38.0 மில்லியன் பெறுமதியுடைய 43,426 மெற்றிக்தொன் பழங்கள் ஏற்றுமதி செய்யபட்ட அதேவேளை ஐ.அ.டொலர் 67.6 மில்லியன் பெறுமதியுடைய 55,725 மெற்றிக்தொன் பழங்கள் இறக்குமதி செய்யப்பட்டன. பழ ஏற்றுமதிகளில் முதல் மூன்று பிரதான ஏற்றுமதிகளாக வாழை, பப்பாசி மற்றும் அன்னாசி காணப்பட்ட அதேவேளை முதல் மூன்று பிரதான இறக்குமதிகளில் அப்பிள், திராட்சை, தோடம்பழம் என்பன உள்ளடங்கியிருந்தன. உள்நாட்டுப் பழங்களுக்கான கேள்வி வலுவடைந்ததற்கு மத்தியில், உள்நாட்டுக் கேள்விக்கு ஈடுகொடுப்பதற்கான உள்நாட்டு உற்பத்தியாளர்களின் மட்டுப்படுத்தப்பட்ட இயலளவு துறையின் அபிவிருத்திக்கு பாரிய தடையாக இருந்து வருகின்றது. அதற்கமைய, உற்பத்தித்திறன், களஞ்சிய மற்றும் விநியோக வசதிகள் அத்துடன் வேளாண்மை உள்ளீடுகளின் உகந்த பயன்பாடு என்பவற்றை அதிகரிக்கின்ற அதேவேளை அறுவடைக்குப் பிந்திய இழப்புகளைக் குறைப்பதனை உறுதி செய்வதற்கு கமத்தொழில் அமைச்சும் கமத்தொழில் திணைக்களமும் பல்வேறு வழிமுறைகளை நடைமுறைப்படுத்தின. 2021 யூனில் கமத்தொழில் அமைச்சானது நடமாட்டக் கட்டுப்பாடுகளை விதித்தமையின் காரணமாக வசதியாக விற்பனை செய்யப்பட முடியாதிருந்த காய்கறிகள் மற்றும் பழங்கள் தொகையிருப்புகளை கொள்வனவு செய்வதற்கு மாவட்டச் செயலாளர்களுக்கு அல்லது அரசாங்க அதிபர்களுக்கென நிகழ்ச்சித்திட்டமொன்றினை நடைமுறைப்படுத்தியது. காய்கறிகளும் பழங்களும் உரிய மாவட்ட விலைக்குழுவினால் நிர்ணயிக்கப்படும் விலைகளில் கொள்வனவு செய்யப்பட வேண்டியிருந்தன. இதனூடாக தமது உற்பத்திக்கு வேளாண்மையாளர்கள் நியாயமான விலையினைப் பெற்றுக்கொள்வது உறுதிப்படுத்தப்பட்டது. 2022 மாச்சில் அரசாங்கமானது அத்தியாவசியமற்ற இறக்குமதிகள் மீதான உயர்வான செலவினத்தைக் கட்டுப்படுத்துவதற்கான அதன் வழிமுறைகளின் ஒரு பகுதியாக தோடம்பழங்கள், மென்டரின் பழங்கள், திராட்சை, அப்பிள் உள்ளடங்கலாக பலவகையான பழங்களின் இறக்குமதியினை மட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தது.

### சீனி

**சாதகமான மழைவீழ்ச்சிப் போக்குகள் மற்றும் விரிவுபடுத்தப்பட்ட பயிர்ச்செய்கைப் பரப்பு என்பன மூலம் துணையளிக்கப்பட்டு, சீனி உற்பத்தி 2021ஆம் ஆண்டில் தொடர்ந்தும் அதன் மேல்நோக்கிய போக்கைத் தொடர்ந்தது.** *செவனகல, பெல்வத்த,* மற்றும் *கல்ஓயா* சீனித்தொழிற்சாலைகளின் சீனி உற்பத்தியின் அளவு 2020ஆம் ஆண்டில் பதிவாகிய 14.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியினைவிட 2021ஆம் ஆண்டில் 70,606 மெற்றிக்தொன்களுக்கு 17.9 சதவீதம் கொண்ட அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது. அதற்கமைய, மீளாய்வுக்குட்படுகின்ற காலப்பகுதியில் *செவனகல, பெல்வத்த,* மற்றும் *கல்ஓயா* சீனித்தொழிற்சாலைகளின் உற்பத்தி முறையே 10.4 சதவீதத்தினாலும் 28.8 சதவீதத்தினாலும் 11.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. இத்தொழிற்சாலைகளால் முகாமை செய்யப்படுகின்ற கரும்புப் பயிர்ச்செய்கையின் கீழ் (முளைவிட்ட கரும்புகள் உள்ளடங்கலாக) மொத்தப் பரப்பும் ஆண்டுகாலப்பகுதியில் 3.5 சதவீதத்தினால் அதிகரித்தது. மேலும், உற்பத்தி நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ள எத்திமலை தோட்டங்கள் அண்மைய எதிர்காலத்தில் உள்நாட்டுச் சீனி உற்பத்திக்கு கணிசமான பங்களிப்பைச் செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை, கந்தளாய் சீனித்தொழிற்சாலை மற்றும் கரும்புத்தோட்டம் என்பவற்றை

மீளத்தாபிக்கும் நடவடிக்கைகள் சட்டரீதியான பிரச்சனைகள் காரணமாக மந்த வேகத்தில் முன்னேற்றமடைந்து வருகின்றது. 2021ஆம் ஆண்டில் மொத்த சீனி உற்பத்தியும் சராசரி விளைச்சலும் அதிகரித்த போதிலும், சீனி எடுத்தல் வீதம்[4] மூலம் அளவிடப்பட்டவாறு சீனி உற்பத்தித்திறன் 2021ஆம் ஆண்டில் குறைவடைந்து குறிப்பாக அறுவடைக் காலப்பகுதியில் நீர்ப்பாசன முகாமைத்துவத்தினையும் சீனித்தொழிற்சாலைகளில் முறையற்ற மாதிரியெடுத்தல் முறைமையுடன் இணைந்த தரம் அடிப்படையிலமைந்த கரும்பு விலையிடல் முறைமையில் வினைத்திறன்களின்மைகளையும் எடுத்துக்காட்டுகின்றது.

**ஏற்கனவே காணப்படுகின்ற பயிர்ச்செய்கைகளில் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதனையும் பயிர்ச்செய்கையினை விரிவுபடுத்தலையும் மையப்படுத்தி சீனிக் கைத்தொழிலில் பல உபாயங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.** குறைவான உள்நாட்டு உற்பத்தியை விட உயர்ந்தளவு சீனி இறக்குமதிகளைக் கருத்திற்கொண்டு நாற்றுக்கரும்பு வழங்குதல், பல்வேறு கரும்புச்செய்கை பிரதேசங்களில் நாற்றுவிருத்தி காணிகளை மற்றும் நாற்றுமேடைகளை உருவாக்குதல் மற்றும் பயிர் மேம்படுத்தல் மற்றும் வளமுகாமைத்துவ நடைமுறைகள் என்பன ஊடாக கரும்புத் தோட்டங்களை விரிவுபடுத்துவதற்கான முயற்சிகள் ஆண்டு முழுவதும் முன்னெடுக்கப்பட்டன. அரசாங்கத்தின் கொள்கை வழிகாட்டல்களுக்கிணங்க அசேனதப் பயிர்ச்செய்கை முறைகளிலிருந்து சேதனப் பயிர்ச்செய்கைக்கு மாறுதலடைதலுடன் தொடர்புபட்ட பல அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களும் ஆண்டுகாலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டன. சேதன வளமாக்கியை அறிமுகப்படுத்தல், உயிர் இரசாயன மற்றும் உயிரியில் கட்டுப்பாட்டு வழிமுறைகள் மற்றும் கரும்பு பயிர்ச்செய்கை மண்ணுக்காக பிரதேசம் குறித்த வளமாக்கி பரிந்துரை மாதிரிகளை வகுத்தல் என்பவற்றை இவை உள்ளடக்கியிருந்தன. அதேவேளை, கரும்பு ஆராய்ச்சி நிறுவகமானது வெலிஓயா, ஹொரவப்பொத்தான மற்றும் பிபில போன்ற இடங்களில் சீனித் தொழிற்சாலைகளை நிறுவுகின்ற அதேவேளை கிளிநொச்சியின் ஸ்கந்தபுரம் பிரதேசத்தில் கரும்புப் பயிர்ச்செய்கை விரிவுபடுத்தலுடன் தொடர்புடைய முயற்சிகளை மேற்கொண்டது. அதேவேளை கரும்பு ஆராய்ச்சி நிறுவகமானது நடைமுறையிலுள்ள உலகளாவிய மற்றும் உள்நாட்டு நிலைமையினை சிறப்பாகப் பிரதிபலிப்பதற்கு 2016இல் அமைச்சரவையினால் அனுமதிக்கப்பட்ட *தேசிய சீனித்துறை அபிவிருத்திக் கொள்கையினை* இற்றைப்படுத்தும் செயன்முறையில் முனைப்புடன் ஈடுபட்டது. உலகளாவிய சீனி விலைகளின் சடுதியான அதிகரிப்பு, சீனி இறக்குமதிகள் மீது செலவிடப்படும் கணிசமான வெளிநாட்டுச் செலாவணி என்பவற்றின் நோக்கில் சீனிக் கைத்தொழிலை உரிய காலத்தில் மறுசீரமைக்கும் அதேவேளை மேம்பட்ட இனங்களைப் பயன்படுத்துதல், சிறந்த பயிராக்கவியல் நடத்தைகள் மற்றும் நவீன தொழில்நுட்பங்கள் என்பன ஊடாக உற்பத்தி இயலளவை விரிவுபடுத்துவதற்கான சாத்தியப்பாட்டினைக் கண்டறிவதைப் பொறுப்பேற்பதற்கு இந் நிறுவனங்களுடன் அரசாங்கம் கூட்டிணைந்து செயற்படுவது இன்றியமையாததாகும்.

4 சீனி எடுத்தல் வீதம் = (சீனி உற்பத்தி/ பிழியப்பட்ட கரும்பின் அளவு)*100

## விலங்கு வளர்ப்பு

**விலங்கு வளர்ப்புத் துறையின் செயலாற்றம் 2021 காலப்பகுதியில் மேம்பாட்டிற்கான சமிக்ஞைகளைக் காண்பித்தது.** தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் மதிப்பீடுகளின் பிரகாரம், மொத்த தேசிய பால் உற்பத்தியானது 2021ஆம் ஆண்டில் 513 மில்லியன் லீற்றர்களுக்கு 4.4 சதவீதத்தினால் அதிகரித்தது. பால் உற்பத்தியில் இவ்வளர்ச்சிக்கு சராசரி பசும்பால் உற்பத்தியாளர் விலையில் அதிகரிப்பு, அதிகரித்த பால் சேகரிப்பு அத்துடன் புதிய பால் பண்ணைகள் இணைந்துகொண்டமை என்பன பிரதான தூண்டுகோலாக அமைந்தன. அதிகரித்த தீவன விலைகள் மற்றும் உயர்வான ஊழியச் செலவுகள் காரணமாக பசும்பாலின் சராசரி உற்பத்திச் செலவு முனனைய ஆண்டில் பதிவாகியிருந்த லீற்றரொன்றுக்கு ரூ.49.28 இலிருந்து 2021இல் ரூ.69.30 ஆக அதிகரித்தது. எனினும், இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் உள்நாட்டு பால்மா தட்டுப்பாடுகளிலிருந்து தோற்றம்பெற்ற திரவப் பாலுக்கான அதிகரித்த கேள்வி அதேபோன்று பால்மா விலைகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புகள் என்பன காரணமாக உள்நாட்டு திரவப் பாலுக்கான பண்ணையாளர்களுக்கு கிடைக்கப்பெற்ற விலையும் ஆண்டுகாலப்பகுதியில் ஒப்பீட்டளவில் உயர்வாகவிருந்தது. அதற்கமைய, பசும்பால் லீற்றரொன்றுக்கான சராசரிப் பண்ணை விலை 2020ஆம் ஆண்டில் ரூ. 82.00 இலிருந்து 2021ஆம் ஆண்டில் ரூ.98.00 ஆக அதிகரித்தது. விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்கள தரவுகளின் படி, 2021ஆம் ஆண்டில் உள்நாட்டு பால் உற்பத்தியின் பங்களிப்பானது நாட்டின் மொத்தத் தேவைப்பாட்டினை நிறைவு செய்வதில் ஏறத்தாழ 38 சதவீதமாகக் காணப்பட்டது. கோழி வளர்ப்புத் துறையினை நோக்குகையில், முட்டை உற்பத்தியானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் 4.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியினைப் பதிவுசெய்தது. எவ்வாறாயினும், தீவன அடங்குபொருட்கள் பற்றாக்குறை மற்றும் அதிகரிக்கின்ற தீவனச்செலவுகள் என்பன கோழியொன்றுக்கு உற்பத்தி செய்யப்பட்ட முட்டைகளின் அளவிலும் எண்ணிக்கையிலும் குறைவுகளை ஏற்படுத்தின. மேலும், கோழி இறைச்சி உற்பத்தி, 9.5 சதவீதத்தினால் அதிகரித்த அதேவேளை, கோழி இறைச்சி உற்பத்திச் செலவும் 2021இல் கிலோகிராமொன்றுக்கு ரூ.342.07 இலிருந்து கிலோகிராமொன்றுக்கு ரூ.434.19ஆக அதிகரித்தது. உள்நாட்டு இறைச்சிக் கோழியின் (புரொயிலர்) பெற்றோர் கோழி உற்பத்தியானது மாற்றமின்றிக் காணப்பட்ட அதேவேளை, இறைச்சிக்கோழி பெற்றோர்களின் இறக்குமதி அதிகரித்து 2021ஆம் ஆண்டில் இறைச்சிக் கோழி பெற்றோர் ஒரு நாள் கோழிக் குஞ்சுகள் அதிகளவில் கிடைக்கப் பெறுவதற்கு வழிவகுத்தது. மீளாய்வுக்குட்படுகின்ற காலப்பகுதியில் மாட்டிறைச்சி, பன்றியிறைச்சி, ஆட்டிறைச்சி உற்பத்தி முறையே 4.4 சதவீதத்தினாலும் 4.9 சதவீதத்தினாலும் 1.0 சதவீதத்தினாலும் அதிகரித்தது.

### அட்டவணை 2.5
### கால்நடைத்துறை புள்ளிவிபரங்கள்

| துணைத்துறை | 2020 (அ) | 2021 (ஆ) | மாற்றம் (%) 2019/20 (அ) | மாற்றம் (%) 2020/21 (ஆ) |
|---|---|---|---|---|
| 1. மொத்த மந்தைகள் (எண்ணிக்கை) (மில்) | 1.4 | 1.5 | 3.0 | 2.6 |
| கறவைப் பசுக்கள் | 1.1 | 1.1 | 1.6 | 2.5 |
| எருமைகள் | 0.3 | 0.3 | 8.2 | 3.2 |
| 2. தேசிய பால் உற்பத்தி (மில். லீற்றர்கள்) | 491.5 | 513.3 | 9.8 | 4.4 |
| பசும்பால் | 413.6 | 425.4 | 10.6 | 2.8 |
| எருமைப்பால் | 77.9 | 87.9 | 5.9 | 12.9 |
| 3. பால் உற்பத்திகள் (மில். லீற்றர்கள்) (இ) | வி.கி | வி.கி | - | - |
| 4. உற்பத்தியாளர் விலை - பசும்பால் (ரூ./லீற்றர்) | 82.00 | 98.00 | 17.2 | 19.5 |
| 5. தேசிய முட்டை உற்பத்தி (எண்ணிக்கை) (மில்) | 1,869.7 | 1,953.7 | -10.3 | 4.5 |
| 6. தேசிய கோழி இறைச்சி உற்பத்தி ('000 மெ.தொ) | 216.2 | 236.7 | -3.5 | 9.5 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் தகவல்களின்படி

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்

**ஆண்டுகாலப்பகுதியில் அவசியமான வழிமுறைகளை நடைமுறைப்படுத்தி கொள்கை ரீதியான ஆதரவினை வழங்குவதன் வாயிலாக விலங்கு வளர்ப்புத் துறையினை ஊக்குவிப்பதை அரசாங்கம் தொடர்ந்தும் முன்னெடுத்திருந்தது.** கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் கால்நடை இனப்பெருக்க செயற்றிட்டத்தின் கீழ் பிரதேச மிருகவைத்திய அலுவலகங்கள் ஊடாக 2021 காலப்பகுதியில் பசுக்களுக்கும் எருமைகளுக்கும் ஏறத்தாழ 196,364 செயற்கை கருவூட்டல்கள் மேற்கொள்ளப்பட்டன. செயற்கை கருவூட்டல்கள் ஊடாக ஈன்றெடுத்த பெண் கன்றுகளின் போசணையினை மேம்படுத்துவதற்கு மாட்டுத்தீவனம் வழங்குதல் மற்றும் பல்வேறு விலங்கு நோய்களுக்கெதிராகத் தடுப்புமருந்து வழங்குதல் என்பனவும் மீளாய்வுட்படுகின்ற காலப் பகுதியில் முன்னெடுக்கப்பட்டன. மேலும், தேசிய மந்தைகளில் மருத்துவ மற்றும் உபமருத்து முலையழற்சிகளைக் கட்டுப்படுத்துவதற்கும் தடுப்பதற்கும் *அனைத்தையும் உள்ளடக்கிய முலையழற்சி கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தின்* கீழ் பால்மடி உட்செலுத்திகள் உள்நாட்டில் தயாரிக்கப்பட்டு பாற்பண்ணையாளர்களுக்கு வழங்கப்பட்டன. பாற்பண்ணை தொழில்துறையினை மேம்படுத்துவதற்கான பல்வேறுபட்ட முயற்சிகளுக்கு மத்தியிலும், உள்நாட்டு பாற்பண்ணைத் துறையானது நாளொன்றுக்கு சராசரியாக 2-3 லீற்றர்கள் உற்பத்தியளவுகளுடன் கூடிய சிறியளவிலான பால் உற்பத்தியாளர்களையே பெருமளவில் கொண்டமைந்துள்ளது. மோசமான தீவனம் வழங்கும் நடைமுறைகள், உள்நாட்டில் தயாரிக்கப்படும் தீவன மூலப்பொருட்களின் பற்றாக்குறை, அதிக கன்று ஈன்றல் இடைவெளிகள் மற்றும் இனப்பெருக்கப் பிரச்சனைகள், பால் களஞ்சியப்படுத்தல், குளிரூட்டல், கொண்டுசெல்லுதல் மற்றும் பதப்படுத்துதல் என்பவற்றுக்கான மட்டுப்படுத்தப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பசுக்களின் மோசமான உடல் நிலைமைகள் என்பவை உற்பத்தித்திறன் குறைவிற்குத் தொடர்ந்தும் காரணங்களாகின. நாட்டின் பாற்பண்ணைத் துறையை அபிவிருத்தி செய்வதற்கான அவசர தேவையினைக் கருத்திற்கொண்டு, பாற்பண்ணைத் தொழிற்துறையினை நடுத்தரளவிலிருந்து பாரியளவு பண்ணைகளாக தரமுயர்த்துதல், மற்றும் மலிவான விலையில் உயர்தரத் தீவனங்களின் கிடைப்பனவை உறுதிசெய்தல், பால் மற்றும் பால் உற்பத்திகளுக்கான செலவைப் பிரதிபலிக்கும் விலைப் பொறிமுறையொன்றினை நிறுவுதல் மற்றும் ஏற்கனவே காணப்படும் மந்தைகளின் உற்பத்தித்திறனை அதிகரித்தல் என்பன பால் மற்றும் பால் உற்பத்திகளுக்கான உள்நாட்டுக் கேள்வியினை நிறைவுசெய்வதற்கு வசதியளிக்கும். மேலும், உள்நாட்டுக் கோழித் தீவன உற்பத்தியில் பிரதான மூலப் பொருளாக பெருமளவில் பயன்படுத்தப்படுகின்ற உள்நாட்டுச் சோள உற்பத்தியானது மொத்தக் கேள்வியினை நிறைவுசெய்வதற்கு இன்னும் போதாமையாகக் காணப்பட்டு, உயர் செலவுமிக்க பிரதியீடுகளைத் தெரிவுசெய்வதற்கு தீவன உற்பத்தியாளர்களைக் கட்டாயப்படுத்தி போதியளவு தீவனத்தைப் பெற்றுக் கொள்வதில் இடர்ப்பாடுகளைத் தோற்றுவித்ததுடன் தீவன விலைத் தளம்பல்களுக்கு வழிவகுத்து தீவன உற்பத்தியில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியினை ஏற்படுத்துகின்றது. அதற்கமைய, சிறியளவிலான கோழி உற்பத்தியாளர்கள் சந்தை அழுத்தங்களுக்கு அதிகம் பாதிக்கப்படக்கூடியவர்களாக தோற்றம் பெற்றுள்ளனர். ஆகையினால், உள்நாட்டு சோளப் பயிர்ச்செய்கையினை ஊக்குவித்தலும் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கு தொழில்நுட்பத்தினை அறிமுகப்படுத்தலும் கோழி வளர்ப்புத் துறையில் நீண்டகாலம் உறுதிவாய்ந்த தன்மையினை உறுதிசெய்கின்ற அதேவேளை தற்காலிக வழங்கல் பற்றாக்குறைகள் உரியகாலத்தில் தீர்க்கப்படுகின்றமையினை உறுதிசெய்தலும் இன்றியமையாததாகும்.

### மீன்பிடி

**மீன்பிடித் துறையின் உற்பத்தியானது 2020ஆம் ஆண்டில் அவதானிக்கப்பட்ட சடுதியான சுருக்கமடைதலைத் தொடர்ந்து 2021ஆம் ஆண்டில் மெதுவடைந்து காணப்பட்டது.** அதற்கமைய, கரையோர மற்றும் கரைகடந்த துணைத்துறைகளை உள்ளடக்குவதுடன் மொத்த மீன் உற்பத்தியில் ஏறத்தாழ 76 சதவீதத்திற்கு வகைகூறுகின்ற கடல்சார் மீன் உற்பத்தி 1.5 சதவீதத்தினால் அதிகரித்தது. உள்நாட்டு மீன் உற்பத்தி 2.4 சதவீதத்தினால் அதிகரித்தது. மேம்பட்ட நீர் உயிரினவளர்ப்பு நடைமுறைகளுடன் ஒன்றிணைந்து இறால் பண்ணை உற்பத்தியில் அதிகரிப்பினால் பிரதானமாகத் தூண்டப்பட்டிருந்தது. 2021ஆம் ஆண்டின் இரண்டாம் மற்றும் மூன்றாம் காலாண்டுப் பகுதியில் கரையோர மற்றும் கடல்சார் வளங்களுக்கு கணிசமான சேதத்தினை விளைவித்த *எக்ஸ்பிரஸ்* பேர்ல் கப்பல் விபத்தின் காரணமாக கடல்சார் மீன்பிடி நடவடிக்கைகளுக்கு ஏற்பட்ட இடையூறுகளால் மீன் உற்பத்தி பாதிக்கப்பட்டது. மீனவ சமூகத்தினதும் நுகர்வோர்களினதும் பாதுகாப்பினை உறுதிசெய்யும் நோக்கில் களுத்துறை தொடக்கம்

2

அட்டவணை 2.6
மீன் உற்பத்தி

'000 மெற்றித்தொன்கள்

| துணைத்துறை | 2020 | 2021 (அ) | மாற்றம் (%) 2019/20 | மாற்றம் (%) 2020/21 (அ) |
|---|---|---|---|---|
| கடல் | 327 | 332 | -21.3 | 1.5 |
| கரையோரம் மற்றும் களப்பு | 183 | 178 | -24.7 | -2.4 |
| கடற்கரையிலிருந்து தொலைவில் | 144 | 153 | -16.5 | 6.3 |
| நன்னீர் மீன்பிடி | 102 | 104 | 12.7 | 2.4 |
| பிடிப்பு | 84 | 81 | 15.1 | -4.3 |
| பண்ணை மீன் வளர்ப்பு | 10 | 9 | -5.3 | -10.2 |
| இறால் வளர்ப்பு பண்னை | 7 | 14 | 15.0 | 95.8 |
| மொத்தம் | 429 | 436 | -15.2 | 1.7 |

(அ) தற்காலிகமானது

*மூலம்:* கடற்தொழில் அமைச்சு

நீர்கொழும்பு வரையான பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் தற்காலிக மீன்பிடித்தடையினை விதிப்பதற்கு அதிகாரிகள் உடனடி வழிமுறைகளை எடுத்தனர். அதன் தொடர்ச்சியாக அரசாங்கமானது பாதிக்கப்பட்ட குடும்பமொன்றுக்கு ரூ.5000 கொடுப்பனவினை பகிர்ந்தளித்த அதேவேளை மீனவ சமூகங்களின் வாழ்வாதாரங்களைப் பாதுகாக்கின்ற விதத்தில் சேதமடைந்த மீன்பிடி உபகரணங்களுக்கான மாற்றுப் பொருட்களையும் வழங்கியது. எனினும், மீன் உற்பத்தியும் நுகர்வும் 2021ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டில் மீளெழுச்சி பெற்றன. மீன்பிடி நடவடிக்கைகளுக்கான இடையூறுகள் மற்றும் அதிகரித்த ஏற்பாட்டுச் செலவுகளின் விளைவாக மீன் வகைகளின் சில்லறை விலைகள் ஆண்டு முழுவதும் தளம்பலுக்குள்ளாகியிருந்தன. கடற்றொழில் அமைச்சின் படி, 2021ஆம் ஆண்டில் மீன் ஏற்றுமதிகள் அளவு நியதிகளில் 25.6 சதவீதத்தினாலும் ரூபா நியதிகளில் 58.6 சதவீதத்தினாலும் அதிகரித்தமையானது இறக்குமதி செய்கின்ற நாடுகளால் விதிக்கப்பட்ட தொடர்புடைய ஒழுங்கு விதிகளுக்கமைவாக உயர்தரத்திலான மீன் உற்பத்திகளை ஏற்றுமதி செய்யும் பொருட்டு ஆர்வலர்களுக்கு அவசியமான வழிகாட்டலையும் உதவியினையும் வழங்குவதற்கு அதிகாரிகளால் எடுக்கப்பட்ட வழிமுறைகளின் தாக்கத்தினை பிரதிபலித்தது. மேலும், மீளாய்வுட்படுகின்ற காலப்பகுதியில் மீன் இறக்குமதிகள் 34.5 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்து காணப்பட்டன.

**தேசியப் பொருளாதாரத்திற்கான மீன்பிடித் துறையின் பங்களிப்பினை அதிகரிப்பதை நோக்காகக் கொண்ட அதன் முயற்சிகளை அரசாங்கம் தொடர்ந்தும் முன்னெடுத்தது.** மீன் உற்பத்தியினை அதிகரிக்கின்ற அதேவேளை மொத்த உற்பத்தியின் ஏறத்தாழ 20-30 சதவீதத்திற்கு வகைகூறுகின்ற அறுவடைக்குப் பிந்திய இழப்புகளைக் குறைப்பதனை மையப்படுத்தி கடற்றொழில் அமைச்சு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது. சட்டத்திற்கு புறம்பான, அறிக்கையிடப்படாத அத்துடன் ஒழுங்குபடுத்தப்படாத மீன்பிடி நடவடிக்கைகளைத் தடுப்பதற்கும் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. பாரியளவிலான பல நாள் மீன்பிடி கலங்கள் நங்கூரமிடுவதை இயலச் செய்வதற்குப் புதிய துறைமுகங்களின் கட்டுமான நடவடிக்கைகள், ஏற்கனவே காணப்படுகின்ற துறைமுகங்களைத் தரமுயர்த்துதல், நங்கூர மற்றும் தரையிறக்கும் பிரதேசங்களின் கட்டுமானம் என்பன ஆண்டுகாலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டன. மேம்பட்ட மீன் உற்பத்திக்கு அத்தியாவசியமான ஏற்பாட்டு சேவைகளாக விளங்குகின்ற நவீன குளிரூட்டல், களஞ்சியப்படுத்தல் மற்றும் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதற்கான முயற்சிகளும் 2021 காலப்பகுதியில் இடம்பெற்றன. கடற்றொழில் அமைச்சு, தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையுடன் கூட்டிணைந்து உள்நாட்டு மீன் மற்றும் நீர் உயிரின வளர்ப்பு உற்பத்தியினை அதிகரிப்பதற்கும், ஏற்றுமதிகளை மேம்படுத்து வதற்கும் கிராமியப் பொருளாதாரத்தினை வலுப்படுத்துவதற்கும் பல எண்ணிக்கையான மரபுசாரா பண்ணை முயற்சிகளை நடைமுறைப் படுத்தியது. இந்நோக்கில், சமுதாயத்தினை அடிப்படையாகக் கொண்ட மீன் இனப்பெருக்க அலகுகளைத் தாபித்தல், அறுவடைக்குப் பின் வளர்ச்சிபெற உதவதற்காக சிறியளவிலான மீன் குஞ்சு உற்பத்திப் பிரிவுகளை மேம்படுத்தல் மற்றும் மீன் குஞ்சு உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி நிலையங்களைப் புனரமைத்து மேம்படுத்தல் என்பன ஆண்டுகாலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டன. நீர் மீள்சுழற்சி முறைமையினைப் பொருத்துதல், பண்ணைப் பிரதேசங்களின் உயிரியல் பாதுகாப்பினை மேம்படுத்துதல் மற்றும் தரமான நீரைப் பெறுவதற்காக புத்தளத்தில் டச்சுக்கால்வாயினைத் தூர்வாறுதல் போன்ற பல்வேறு வழிமுறைகளூடாக இறால் வளர்ப்பை தீவிரப்படுத்துவதற்கான முயற்சிகளும் தொடர்ந்தும் இடம்பெற்றன. இறால் பண்ணைக்கு மேலதிகமாக, தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை கடற்சாதாழை, கடற்பாசி, நண்டு, கடலட்டை மற்றும் பால்மீன் பண்ணை அபிவிருத்தியூடாக வர்த்தக ரீதியான நீர் உயிரினவளர்ப்பு ஊக்குவிப்பிலும் ஈடுபட்டது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் மற்றும் புத்தளம் கடற்பிரதேசங்களில் கடற்பாசி வளர்ப்பு நடவடிக்கைகளிலும் புத்தளத்தில் பால்மீன் குஞ்சு பொரித்தல் நிலையமொன்றினை நிர்மாணித்தலும் ஆண்டுகாலப்பகுதியில் இடம்பெற்றன. 2021 மாசிசில் மன்னாரில் கடலட்டை குஞ்சு பொரித்தல் நிலையம் தொழிற்பாடுகளைத் தொடங்கியதுடன் கிளிநொச்சியில் கடலட்டைக் கிராமமொன்றும் உருவாக்கப்பட்ட அதேவேளை கடலட்டை ஏற்றுமதிகளை அதிகரிக்கும் நோக்குடன் யாழ்ப்பாணத்தில் கடலட்டை வளர்ப்பினை விரிவு படுத்துவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், அலங்கார மீன் மற்றும் நீர்வாழ் தாவர வளர்ப்பு அபிவிருத்திக்கும் ஏற்றுமதித் துறைக்கும் ஆதரவளிக்கும் பொருட்டு புதிய அலங்கார மீன் வளர்ப்பு இயலளவினையும் முழுமையாக அபிவிருத்திசெய்தல், நீர் உயிரினவளர்ப்பு தொழில்நுட்ப முன்னேற்றம், மீன்குஞ்சு வழங்குதல் மற்றும் மீன் நோய்நிர்ணயச் செயற்பாடுகள் என்பனவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அட்டவணை 2.7
முக்கிய உணவுப் பண்டங்களின் கிடைப்பனவு

| விடயம் | அலகு | 2010 | | | 2020 (அ) | | | 2021 (ஆ) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | உற்பத்தி | இறக்குமதிகள் | தலைக்குரிய கிடைப்பனவு (கி.கி/ஆண்டு) | உற்பத்தி | இறக்குமதிகள் | தலைக்குரிய கிடைப்பனவு (கி.கி/ஆண்டு) | உற்பத்தி | இறக்குமதிகள் | தலைக்குரிய கிடைப்பனவு (கி.கி/ஆண்டு) |
| அரிசி (இ) | மெ.தொ'000 | 3,011 | 126 | 152 | 3,482 | 16 | 164 | 3,502 | 147 | 165 |
| சோளம் | மெ.தொ'000 | 162 | 16 | 9 | 314 | 44 | 16 | 472 | 23 | 22 |
| கோதுமை | மெ.தொ'000 | - | 1,051 | 51 | - | 1,404 | 64 | - | 1,307 | 59 |
| பெரிய வெங்காயம் | மெ.தொ'000 | 59 | 158 | 10 | 43 | 266 | 14 | 66 | 257 | 15 |
| சீனி | மெ.தொ'000 | 31 | 548 | 28 | 60 | 683 | 34 | 71 | 582 | 29 |
| உருளைக் கிழங்கு | மெ.தொ'000 | 52 | 130 | 9 | 65 | 127 | 9 | 76 | 117 | 9 |
| உடன் மீன் | மெ.தொ'000 | 385 | 14 | 19 | 429 | 13 | 20 | 436 | 10 | 20 |
| பசும்பால் | மில்லியன் லீற்றர்கள் | 192 | - | 9(ஈ) | 414 | - | 19(ஈ) | 425 | - | 19(ஈ) |
| தேங்காய் எண்ணெய் | மெ.தொ'000 | 65 | 3 | 3 | 20 | 79 | 5 | 43 | 99 | 6 |


(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) 1 மெற்றிக்தொன் நெல் = 0.68 மெற்றிக்தொன் அரிசி
(ஈ) ஆண்டொன்றிற்கான லீற்றர்கள்

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கைச் சுங்கம்
லங்கா சீனிக் கம்பனி லிமிட்டெட் - செவனகல அலகு
லங்கா சீனிக் கம்பனி (தனியார்) லிமிட்டெட் - பெல்வத்தை அலகு
கல்லோயா (ஹிங்குரான) சீனிக் கைத்தொழில் லிமிட்டெட்
கடற்றொழில் அமைச்சு
தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை

## கைத்தொழில்

**கைத்தொழிலானது அதிகரித்த கேள்வி மற்றும் 'புதிய இயல்பு' சூழலின் கீழ் தொடர்ச்சியான தொழிற்பாடுகள் என்பனவற்றிலிருந்து நன்மையடைந்து, அதன் சேர்க்கப்பட்ட பெறுமதி 2020இல் பதிவாகிய 6.9 சதவீதம் கொண்ட சுருக்கத்திலிருந்து 2021இல் 5.3 சதவீதத்தினால் மீட்சியடைந்த போதிலும், வழங்கல் பக்க தடைகளினால் தோற்றுவிக்கப்பட்ட தொடர்ந்திருக்கின்ற சேதத்தின் பண்புகளை இத்தொகைகள் உள்ளடக்கியிருந்தன.** கைத்தொழில் வளர்ச்சிக்கு தயாரிப்பு நடவடிக்கைகளில் மீட்சி வழிவகுத்த அதேவேளை, கட்டடவாக்கம் அத்துடன் சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் நடவடிக்கைகள் மிதமான விரிவடைதல்களைப் பதிவுசெய்தன. அதேவேளை, மின்சாரம், எரிவாயு, நீராவி, வாயுச்சீராக்கும் வழங்கல் நடவடிக்கைகள் அத்துடன் சுத்திகரிப்பு மற்றும் வழங்கல் நடவடிக்கைகள் என்பனவும் ஆண்டுகாலப்பகுதியில் விரிவடைந்து ஒட்டுமொத்த கைத்தொழில் நடவடிக்கைகளுக்கு சாதகமாகப் பங்களித்தன. எவ்வாறாயினும், கழிவு நீர், கழிவுச் சுத்திகரிப்பு மற்றும் அகற்றுதல் நடவடிக்கைகள் 2021இல் சுருக்கமடைந்தன. கைத்தொழில் நடவடிக்கைகளில் மீட்சியினைப் பிரதிபலித்து காலாண்டு அடிப்படையில் மத்திய வங்கியினால் நடத்தப்படுகின்ற வியாபாரத் தோற்றப்பாட்டு அளவீட்டின் கைத்தொழில் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய கேள்வி மற்றும் உற்பத்தி துணைச் சுட்டெண்கள் ஆண்டுகாலப்பகுதியில் சராசரி விரிவடைதலை எடுத்துக்காட்டின.

வரைபடம் 2.6
கைத்தொழில் நடவடிக்கைகளின் வளர்ச்சி வீதங்கள் - 2021 (அ)




(அ) மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது (2010 அடியாண்டு)


*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

## தயாரிப்பு

**புதிய இயல்பின் கீழ் தொழிற்பாடுகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்து தயாரிப்பு நடவடிக்கைகளின் சேர்க்கப்பட்ட பெறுமதி 2020இல் பதிவாகிய 3.9 சதவீத வீழ்ச்சியிலிருந்து 2021இல் 7.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் மீட்சிப்பாதைக்குத் திரும்பியது.** நாட்டில் வெற்றிகரமான தடுப்புமருந்தேற்றல் நிகழ்ச்சித்திட்டம், உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்புடைய நடமாட்டக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தல் தொழிற்சாலைத் தொழிற்பாடுகள் தொடர்ந்து இயங்குவதற்கு அனுமதித்தல் அத்துடன் புதிய இயல்புக்கு ஏற்றவாறு பொருளாதார சூழலினைச் சரிப்படுத்தல் என்பன ஆண்டு காலப்பகுதியில் தயாரித்தல் நடவடிக்கைகளில் இம்மீட்சிக்கு செயலூக்கம் அளித்தன. அதற்கமைய, சபுகஸ்கந்த சுத்திகரிப்புச் சாலையை தற்காலிகமாக மூடியதனால் மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்த கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்களின் தயாரிப்பு தவிர ஆண்டுகாலப்பகுதியில் அனைத்து தயாரிப்பு நடவடிக்கைகளும் விரிவடைந்தன. ஆரோக்கியமான வெளிநாட்டுக் கேள்வியினால் பெருமளவு தூண்டப்பட்டு புடவைகள், அணியும் ஆடை மற்றும் தோல் தொடர்புபட்ட உற்பத்திகள் தயாரிப்பானது தயாரிப்பு நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு முக்கியமாக பங்களித்தன. மேலும், உணவு, குடிபானங்கள், புகையிலை உற்பத்திகள், இறப்பர் மற்றும் பிளாத்திக்குப் பொருட்கள்

2

வரைபடம் 2.7
கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு (அ)




(அ) கொ.மு.சுட்டெண்ணானது கடந்த மாதத்துடன் ஒப்பிட்டு மாதாந்த அபிவிருத்திகளை வெளிக்காட்டும் மனோபாவ அளவீட்டு அடிப்படையில் அமைந்ததாகும். இது ஓர் வியாபித்தல் சுட்டெண் (diffusion index) ஆவதுடன் 0 மற்றும் 100 இற்கு இடையிலான பெறுமதியை கொண்டிருப்பதோடு நடுநிலையான 50இற்கு மேலான சுட்டெண் பெறுமதி பொருளாதார நடவடிக்கைகளில் ஓர் விரிவாக்கத்தைக் குறிக்கும் அதேவேளையில் 50இற்க கீழான சுட்டெண் பெறுமதியானது சுருக்கத்தினையும் குறிக்கின்றது.

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி


மற்றும் ஏனைய உலோகமல்லா கனிம உற்பத்திகள் தயாரிப்பும் தயாரித்தல் நடவடிக்கைகளில் விரிவடைதலுக்கு கணிசமாகப் பங்களித்தது. தயாரித்தல் தொடர்புபட்ட குறிகாட்டிகளைக் கருத்திற் கொள்கையில், தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்படுகின்ற கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் 2021இல் அதிகரிப்பினைப் பதிவுசெய்து, தயாரித்தல் நடவடிக்கைகளில் மீட்சியினை எடுத்துக்காட்டியது. மேலும், மாதாந்த அடிப்படையில் மத்திய வங்கியினால் தொகுக்கப்படுகின்ற தயாரித்தல் நடவடிக்கைகளுக்கான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணும் ஆண்டு காலப்பகுதியில் சராசரியாக தயாரிப்பு நடவடிக்கைகளின் விரிவடைதலினை எடுத்துக்காட்டியது. எனினும், வழங்கல் சங்கிலியில் ஏற்பட்ட தாமதங்கள் அதன் முழுமையான உள்ளார்ந்த ஆற்றலை அடைந்துகொள்வதிலிருந்து துறையினை தடைப்படுத்தியது.

## கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்

**தயாரித்தல் துறையானது கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் தோற்றுவிக்கப்பட்ட சவால்களுக்கு மத்தியில் 2020ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க பின்னடைவுக்கு பின்னர் 2021ஆம் ஆண்டில் மீளெழுச்சியினைக் காண்பித்தது.** தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்படுகின்ற கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின் படி, பெரும்பாலான துணைத் துறைகள் முழுவதும் அதிகரித்த உற்பத்தியுடன் தயாரித்தல் துறையானது 2020ஆம் ஆண்டில் அவதானிக்கப்பட்ட 10.2 சதவீதம் கொண்ட வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் 7.3 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியினை காண்பித்தது. கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் தொகுத்தல் தொடங்கிய காலம் முதலான அதன் அதிஉச்ச பெறுமதியான 119.6ஐ 2021 மாச்சில் பதிவுசெய்தது. 2021ஆம் ஆண்டில் கொவிட்-19 பரவல் காலப்பகுதியில் அமுல்ப்படுத்தப்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் குறைந்தளவான கட்டுப்பாடுகளைக் கொண்ட நடமாட்டக் கட்டுப்பாடுகள், முக்கிய கைத்தொழில் நடவடிக்கைகள் அதிக இடையூறுயின்றி இடம்பெறுவதற்கு இடமளித்தன. விசேடமாக, ஆண்டின் இரண்டாம் அரையாண்டு காலப்பகுதியில் படிப்படியாக வேகமடைந்த கொவிட்-19 தடுப்புமருந்தேற்றல் நிகழ்ச்சித்திட்டமும் கைத்தொழில்சார் நடவடிக்கையைத் தொடர்ந்து இடம்பெறுவதற்கு வசதியளித்தது. அணியும் ஆடைகள், உலோகமல்லாத கனிம உற்பத்திகள், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள், புடவைகள் மற்றும் அடிப்படை உலோகங்கள் அத்துடன் குடிபானங்கள் என்பனவற்றின் துணைத்தயாரிப்பு துறைகளினால் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின் சாதகமான செயலாற்றம் பிரதானமாகத் தூண்டப்பட்டிருந்தது. எனினும், சுத்திகரிப்புச்சாலை அவ்வப்போது மூடப்பட்டதன் காரணமாக, கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளின் தயாரித்தல் துணைத் துறையினால் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின் ஒட்டுமொத்த சாதகமான உத்வேகமானது குறைவடைச்செய்யப்பட்டது.

**ஆண்டு காலப்பகுதியில் உணவு தயாரித்தல் நடவடிக்கைகள் குறைவடைந்து காணப்பட்ட போதிலும் குடிபானத் தயாரிப்பு நடவடிக்கைகள் பாரிய வளர்ச்சியினைப் பதிவுசெய்தன.** கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின் பாரிய துணைத்துறையான உணவு உற்பத்திகள் தயாரித்தலில் அவதானிக்கப்பட்ட மிதமான வளர்ச்சி வேகமானது பெருமளவில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வழங்கல் சங்கிலிகள் இரண்டுக்குமான இடையூறுகளின் பெறுபேறாக அமைந்திருந்தது. ஆண்டின் முதலரையாண்டில் பதிவாகிய 0.8 சதவீதம் கொண்ட சிறிதளவான சுருக்கத்தினைத் தொடர்ந்து, கோழி இறைச்சி உற்பத்திகள், தகரத்திலடைத்த மீன், பழப்பாகு, சுவைச்சாறு மற்றும் பிஸ்கட் என்பவற்றின் அதிகரித்த தயாரிப்புடன் இத்துணைத் துறையானது பிந்திய அரைப்பகுதியில் மேம்பட்ட செயலாற்றுகையினைக் காண்பித்து ஆண்டுகாலப்பகுதியில் 0.2 சதவீதங்கொண்ட சிறிதளவான விரிவடைதலுக்கு வழிவகுத்தது. குடிபான தயாரித்தல் நடவடிக்கைகள் 2020ஆம் ஆண்டில் பதிவாகிய 6.7 சதவீதங்கொண்ட சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் 9.8 சதவீதம் குறிப்பிடத்தக்க

வரைபடம் 2.8
கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்




*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

வளர்ச்சியினைப் பதிவுசெய்தன. நிகழ்வுகள் மற்றும் சமூகச் செயற்பாடுகள் மீதான கட்டுப்பாடுகள் பாரியளவில் தளர்த்தப்பட்டமையினால் பொருளாதாரம் இயல்புநிலைக்கு திரும்பியதற்கு அமைவாக குடிபானங்களுக்கான அதிகரித்த கேள்வியும் அவதானிக்கப்பட்டது.

**உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்புடைய நடமாட்டக் கட்டுப்பாடுகள் மற்றும் 2020ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட தாழ்ந்த தளத்தாக்கம் என்பவற்றுக்கு மத்தியில் உலகளாவிய வழங்கல் சங்கிலிகளின் மேம்பாடுகள் மற்றும் தயாரிப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு வசதியளிப்பதற்கான அரசாங்கத்தின் கொள்கை தீர்மானங்கள் என்பன மூலம் ஆதரவளிக்கப்பட்டு 2021 காலப்பகுதியில் அணியும் ஆடை மற்றும் புடவைகள் தயாரித்தல் துணைத் துறைகள் வலுவான முன்னேற்றத்தை அடைந்தன.** கைத்தொழில் தயாரிப்பு சுட்டெண்ணின் ஏறத்தாழ ஐந்தில் ஒரு பகுதிக்கு வகைகூறுகின்ற அணியும் ஆடை தயாரித்தல் துணைத் துறை முன்னைய ஆண்டின் 30.7 சதவீதம் கொண்ட சடுதியான சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் 17.5 சதவீதங்கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியினைப் பதிவுசெய்தது. புடவை தயாரித்தலும் இதே போக்கிலேயே காணப்பட்டு 2020ஆம் ஆண்டின் 5.6 சதவீதச் சுருக்கத்தின் பின்னர் 2021ஆம் ஆண்டில் 25.9 சதவீதம்கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியினைப் பதிவுசெய்தது. இத்துணைத் துறைகளின் சாதகமான செயலாற்றங்கள் உலகளாவிய பொருளாதாரத்தில் விசேடமாக ஏற்றுமதிக் கேள்வியின் உறுதியான மீட்சியினை இயலச்செய்திருந்த முக்கிய ஏற்றுமதி நாடுகளில் ஒட்டுமொத்த மீளெழுச்சியினால் தூண்டப்பட்டிருந்தன. மூலப்பொருட்களின் கிடைப்பனவில் எதிர்மறையாகத் தாக்கம் செலுத்தியிருந்த உள்நாட்டு மற்றும் உலகளாவிய வழங்கல் சங்கிலிகளுக்கான இடையூறுகளைக் குறைவடையச் செய்தமையும் இத் துறையின் வளர்ச்சி உத்வேகத்திற்கு வசதியளித்தது. அதேவேளை, ஏனைய துறைசார் நடவடிக்கைகளுக்கிடையிலான நடமாட்ட கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் தயாரிப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு அனுமதிப்பதற்கான அரசாங்கத்தின் தீர்மானத்துடன் இணைந்து இத்துறையில் ஈடுபட்டுள்ள பணியாளர்களுக்கான துரித தடுப்பு மருந்தேற்றலும் இடையூறுகளைக் குறைவடையச் செய்வதற்கு உதவியளித்து, அணியும் ஆடைகள் மற்றும் புடவை உற்பத்தி தயாரித்தலின் துறைசார் செயலாற்றம் மீளெழுச்சி பெறுவதற்கு இயலுமைப்படுத்தியது.

அட்டவணை 2.8
கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்
2015=100


| பிரிவு | கை. உ. சுட்டெண்ணில் நிறை ஏற்றங்கள் (%) | 2020 (அ) | 2021 (ஆ) | மாற்றம் (%) 2019/20 (அ) | மாற்றம் (%) 2020/21 (ஆ) |
|---|---|---|---|---|---|
| 1. உணவு உற்பத்திகள் | 35.2 | 109.1 | 109.3 | 3.3 | 0.2 |
| 2. குடிபானங்கள் | 3.8 | 96.5 | 106.0 | -6.7 | 9.8 |
| 3. புகையிலை உற்பத்திகள் | 1.7 | 72.1 | 77.9 | -11.0 | 8.0 |
| 4. புடவை | 3.3 | 102.2 | 128.7 | -5.6 | 25.9 |
| 5. அணியும் ஆடைகள் | 19.8 | 81.2 | 95.4 | -30.7 | 17.5 |
| 6. தோல் மற்றும் தொடர்பான உற்பத்திகள் | 0.3 | 77.6 | 78.6 | -33.5 | 1.3 |
| 7. தளபாடம் தவிர்ந்த மரம் மற்றும் மரசார் உற்பத்திகள், அடைப்பான்கள் தயாரித்தல், வைக்கோல் பொருட்கள் மற்றும் பின்னல் பொருட்கள் தயாரிப்பு | 0.2 | 71.8 | 82.5 | -29.5 | 15.0 |
| 8. தாள் மற்றும் தாள் உற்பத்திகள் | 1.7 | 81.8 | 86.5 | -15.4 | 5.8 |
| 9. அச்சுப் பதிப்பு மற்றும் பதிவுசெய்யப்பட்ட ஊடகத்தின் மீள் தயாரிப்பு | 1.4 | 112.6 | 117.9 | 9.4 | 4.8 |
| 10. சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள் | 7.4 | 97.2 | 71.1 | -9.0 | -26.8 |
| 11. இரசாயனம் மற்றும் இரசாயன உற்பத்திகள் | 4.1 | 94.2 | 89.8 | -7.8 | -4.7 |
| 12. மருந்தாக்கற் பொருட்கள், மருத்துவ இரசாயனவியல் மற்றும் தாவரவியல் உற்பத்திகள் | 0.1 | 104.7 | 117.9 | 6.6 | 12.6 |
| 13. இறப்பர் மற்றும் பிளாத்திக்குப் பொருட்கள் | 5.7 | 75.8 | 102.9 | -28.8 | 35.7 |
| 14. ஏனைய உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்திகள் | 7.8 | 111.7 | 137.4 | -5.2 | 23.0 |
| 15. அடிப்படை உலோகங்கள் | 2.4 | 110.7 | 133.6 | -10.9 | 20.7 |
| 16. உரு. உலோக உற்பத்திகள் (பொறி மற்றும் இயந்திரம் தவிர்ந்த) | 1.3 | 100.9 | 124.6 | -8.9 | 23.5 |
| 17. இலத்திரனியல் சாதனங்கள் | 2.0 | 67.5 | 81.4 | -22.3 | 20.6 |
| 18. பொறி மற்றும் இயந்திரங்களின் உற்பத்தி | 0.7 | 102.9 | 122.0 | 3.6 | 18.6 |
| 19. தளபாட உற்பத்தி | 0.8 | 77.0 | 77.5 | -14.7 | 0.7 |
| 20. ஏனைய உற்பத்திகள் | 0.3 | 65.7 | 69.6 | -0.5 | 6.0 |
| **கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்** | | **97.1** | **104.2** | **-10.2** | **7.3** |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

**உலோகமற்ற கனிம உற்பத்திகள், அடிப்படை உலோகங்கள் மற்றும் புனையப்பட்ட உலோக உற்பத்திகள் துணைத்துறைகள் 2020ஆம் ஆண்டில் கொவிட்-19 இனால் தூண்டப்பட்ட சுருக்கங்களின் பின்னதாக 2021ஆம் ஆண்டில் முறையே 23.0, 20.7, 23.5 சதவீதங்கொண்ட குறிப்பிடத்தக்க விரிவடைதல்களைப் பதிவுசெய்தன.** இத் துணைத் துறைகளின் சாதகமான செயலாற்றமானது உள்நாட்டு உற்பத்தியின் இயலளவினை மேம்படுத்துகின்ற அதேவேளை ஓடுகள் மற்றும் செரமிக் உற்பத்திகள் மீது இறக்குமதிக் கட்டுப்பாடுகளை விதிப்பதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளினால் தூண்டப்பட்டிருந்தது. ஆண்டு காலப்பகுதியில் கட்டடவாக்கத்துறையில் அவதானிக்கப்பட்ட மீளெழுச்சியும் இத் துணைத் துறைகளிலிருந்து கிடைத்த உற்பத்திகளுக்கான கேள்வியின் அதிகரிப்பிற்குப் பங்களித்தது. குறிப்பாக சீமெந்து, ஓடுகள், கண்ணாடிப் போத்தல்கள், கூரை ஓடுகள் மற்றும் பீங்கான் மேசைப்பொருட்கள் உற்பத்தியில் அதிகரிப்புகள் ஏனைய உலோகமல்லா கனிம உற்பத்தித் துணைத் துறை தயாரிப்பில் உற்பத்தி விரிவடைதலுக்கு முக்கிய பங்களிப்பு காரணிகளாக விளங்கின. குறிப்பாக ஈயம் மற்றும் அலுமினியம், அலுமினிய சட்டங்கள் மற்றும் உருக்கு, மற்றும் அலுமனிய உற்பத்திகள் ஆகியவற்றின் அதிகரித்த உற்பத்தியினால் அடிப்படை உலோகத் தயாரித்தல் மற்றும் புனையப்பட்ட உலோகத் தயாரித்தல் துணைத்துறைகளில் ஏற்பட்ட ஒட்டுமொத்த விரிவடைதல்கள் முதன்மையாக தூண்டப்பட்டிருந்தன.

வரைபடம் 2.9
இயலளவுப் பயன்பாடு




குறிப்பு: ஒவ்வொரு பிரிவுக்குமான நிறையிடல்கள் அடைப்புக்குறிக்குள் உள்ளன

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சுத்திகரிப்புச்சாலையின் தொழிற்பாடுகள் தடைப்பட்டதன் காரணமாக கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய பொருட்களின் உற்பத்தியானது 2020ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட சுருக்கத்தை விட ஆண்டுகாலப்பகுதியில் சடுதியான வீழ்ச்சியினைக் காண்பித்தது.** கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளைத் தயாரித்தலானது முன்னைய ஆண்டுகாலப்பகுதியில் 9.0 சதவீத சுருக்கத்ததுடன் ஒப்பிடுகையில் 2021 காலப்பகுதியில் 26.8 சதவீதங்கொண்ட சுருக்கத்தினைக் காட்டியது. 2021 முதலரைப்பகுதியில் பராமரிப்பு நோக்கங்களுக்காக ஏறத்தாழ இரண்டு மாதங்களுக்கு சுத்திகரிப்புச்சாலை மூடப்பட்டதுடன் அதனைத் தொடர்ந்து உரியகால பெறுகையினைத் தடைப்படுத்திய வெளிநாட்டுச் செலாவணி சிக்கல்கள் மற்றும் உயர்வடைகின்ற மசகெண்ணெய் விலைகள் காரணமாக ஏற்பட்ட மசகெண்ணெய் இறக்குமதி பற்றாக்குறையின் காரணமாக 2021ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டுக் காலப்பகுதியில் ஏறத்தாள ஒரு மாத காலத்திற்கு மூடப்பட்டது. இதன் விளைவாக, ஆண்டுகாலப்பகுதியில் பெற்றோல், வாகன டீசல் மற்றும் உலை எண்ணெய் உற்பத்தியில் வீழ்ச்சிகள் அவதானிக்கப்பட்டன.


**கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் அத்தியாவசிய உற்பத்தி தன்மையுடன் இணைந்து உள்நாட்டு மருந்துப் பொருட்கள் தயாரித்தலை மேம்படுத்துவதற்கான கொள்கை சார்ந்த பணிப்புரைகள், அடிப்படை மருந்துப் பொருள் தயாரிப்புகள் மற்றும் மருந்தாக்கற் தயாரப்படுத்தல்கள் துணைத் துறை 2021ஆம் ஆண்டில் தொடர்ந்தும் அதன் வளர்ச்சி உத்வேகத்தை முன்னெடுப்பதற்கு வழிவகுத்தது.** அதற்கமைய, இத் துணைத் துறை, 2020ஆம் ஆண்டில் பதிவாகிய 6.6 சதவீத விரிவடைதலைத் தொடர்ந்து 2021 காலப்பகுதியில் 12.6 சதவீதம் கொண்ட விரிவடைதலைப் பதிவுசெய்தது. ஆயுர்வேத உற்பத்திகளுக்கான கேள்வியில் அதிகரிப்பானது பாரியளவில் உலகளாவிய நோய்த்தொற்றினால் தூண்டப்பட்டு துணைத்துறையின் மேல்நோக்கிய வளர்ச்சி உத்வேகம் தொடர்ந்து மேல்நோக்கிச் செல்வதற்கு வழிவகுத்தது.

**இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள் தயாரித்தல் துணைத் துறையானது 2021 காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க விரிவடைதலினைப் பதிவுசெய்தது.** மருத்துவ இறப்பர் கையுறைகளுக்காக கொவிட்-19 இனால் தூண்டப்பட்ட கேள்வி, உள்நாட்டு டயர் உற்பத்தி இயலளவிற்கான குறிப்பிடத்தக்க மேம்பாடுகள் இத்துறையில் 35.7 சதவீத வளர்ச்சி பதிவாவதற்கு வழிவகுத்தது. இத் துணைத் துறையின் வளர்ச்சியானது ஏனையவற்றுக்கு மத்தியில் அதிகரித்த ஸிப்பர், பிளாத்திக்கு போத்தல்கள், நெகிழக்கூடிய நூல் உற்பத்திகளினால் தூண்டப்பட்டிருந்தது. 2021ஆம் ஆண்டில் தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகள் சுருக்கமடைந்திருந்த புகையிலை உற்பத்திகள், 2020ஆம் ஆண்டில் அவதானிக்கப்பட்ட 11.0 சதவீதச் சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 8.0 சதவீத வளர்ச்சியினைப் பதிவுசெய்தன.

**தோல் மற்றும் தொடர்புபட்ட பொருட்களின் தயாரிப்புத் துணைத் துறையும் இரசாயன மற்றும் இரசாயன உற்பத்திகள் துணைத் துறையும் குறைவடைந்த செயலாற்றுதினைக் காண்பித்தன.** தோல் மற்றும் தொடர்புபட்ட பொருட்கள் தயாரிப்புத் துணைத் துறையானது 2021ஆம் ஆண்டில் 1.3 சதவீத சிறிய விரிவடைதலைப் பதிவுசெய்த அதேவேளை, இரசாயனங்கள் மற்றும் இரசாயனப் பொருட்கள் தயாரித்தல் துணைத் துறை ஒட்டுமொத்தமாக 4.7 சதவீதச் சுருக்கத்தினைப் பதிவுசெய்தது. குறைவடைந்த இரசாயன வளமாக்கிகள் உற்பத்தி இத் துறையின் வீழ்ச்சிக்கு பிரதான தூண்டுகோல்களாக அமைந்தது. எனினும், உள்நாட்டுக் கேள்வி மேம்பட்டமையுடன் இணைந்து ஆண்டின் இறுதியில் இவ்விருதுறைகளும் மேம்பாடுகளுக்கான சமிக்ஞைகளைக் காண்பித்தன.

**மரப்பொருட்கள் (தளபாடங்கள் நீங்கலாக), மின்சார சாதனங்கள், தளபாடங்கள், கடதாசி மற்றும் கடதாசிப் பொருட்கள், இயந்திரம் மற்றும் உபகரணங்கள் மற்றும் அச்சிடுதல் மற்றும் பதிவுசெய்யப்பட்ட ஊடக மீளுருவாக்க தயாரிப்புக்கள் போன்ற ஏனைய கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின் துணைத் துறைகள் 2021ஆம் ஆண்டுகாலப்பகுதியில் விரிவடைதலைப் பதிவுசெய்தன.** அதிகரித்த நெளி கடதாசிகள், கடதாசிப் பைகள், அப்பியாசப் புத்தகங்கள் உற்பத்தியானது கடதாசி மற்றும் கடதாசிப் பொருட்கள் துணைத்துறையின் விரிவடைதலுக்குப் பங்களித்த அதேவேளை, நேரடிப் பாடசாலைகளை மீளத்திறத்தல் மற்றும் கல்வி நடவடிக்கைகள் மீளத் தொடங்கப்பட்டமை என்பன அதிகரித்த அச்சிடப்பட்ட புத்தகங்களின் உற்பத்திக்கு வழிவகுத்தன. இது அச்சு மற்றும் பதிவுசெய்யப்பட்ட ஊடக மீளுருவாக்க துணைத் துறையின் சாதகமான செயலாற்றத்திற்கு வழிவகுத்தது. இறக்குமதிக் கட்டுப்பாடுகளுக்கு மத்தியிலும் உள்நாட்டு உற்பத்திகளுக்கு

வரைபடம் 2.10
2021இல் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின் முக்கிய பிரிவுகளின் ஆண்டுக்காண்டு மாற்றத்திற்கான பங்களிப்பு




குறிப்பு: ஒவ்வொரு பிரிவுக்குமான நிறையிடல்கள் அடைப்புக்குறிக்குள் உள்ளன

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

அதிகரித்து வருகின்ற கேள்வியுடன் இணைந்து பல்வேறு வீட்டுசாதனப் பொருட்களின் உற்பத்தியின் அதிகரிப்பானது மின்சார உபகரணங்கள் தயாரித்தல் துணைத் துறை விரிவடைதலுக்கு வழிவகுத்தது.

## கைத்தொழில் கொள்கைகளும் நிறுவனசார் ஆதரவும்

**ஆண்டுகாலப்பகுதியில் அரசாங்கமானது உள்நாட்டு உற்பத்தித் தளத்தினை மேம்படுத்துவதற்கு கைத்தொழில் துறையினை வலுப்படுத்தும் நோக்கில் பல்வேறு முயற்சிகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது.** *கைத்தொழில் அபிவிருத்திக்கான தேசிய கொள்கையினை* வரைவதை நிறைவுசெய்தமை 2021ஆம் ஆண்டில் முக்கிய மைல்கல்லொன்றாக அடையாளப்படுத்தப்பட்டது. அனைத்தையுமுள்ளடக்கிய மற்றும் விரிவான பகுப்பாய்வினை வழங்குவதற்கு சேவையாற்றுகின்ற, கைத்தொழில் அபிவிருத்தியின் முன்னேற்றத்தினைத் தடைப்படுத்திய காரணிகளை ஆராய்கின்ற கைத்தொழில் பற்றிய ஆய்வானது கைத்தொழில் அபிவிருத்திற்கான தேசிய கொள்கைக்கு தளமாக அமைந்தது. கைத்தொழில் அபிவிருத்திக்கான தேசிய கொள்கையானது நிலைபெறத்தக்க மற்றும் அனைவரையும் வசதிக்குட்படுத்துகின்ற வளர்ச்சிக்காக உலகளாவிய போட்டிமிகு தொழில்துறையினை நிறுவுகின்ற அதேவேளை பசுமை வளர்ச்சி மற்றும் டிஜிட்டல் மயமாக்க முன்னேற்றத்தினையும் மையப்படுத்துவதை நோக்கி தொழிற்படுகின்றது. அதேவேளை, *பிராந்திய கைத்தொழில் பேட்டை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின்* கீழ் கட்டுநாயக்கவின் களுதியாவெல பிரதேசத்தில் கைத்தொழில் வலயமொன்றினை தாபிப்பதற்கும் களுத்துறை கைத்தொழில் பேட்டையினை விரிவுபடுத்துவதற்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. கனிமம் அடிப்படையிலமைந்த கைத்தொழில்களின் நோக்கெல்லையினை விரிவுபடுத்துவதற்கான அரசாங்கத்தின் இலக்கிற்கமைவாக அரசாங்க, தனியார் பங்குடமையாக வரையறுக்கப்பட்ட இலங்கை கனிய மணல் நிறுவனத்தினால் அகழ்வு செய்யப்படுகின்ற *கனிய மணலுக்கான பெறுமதி சேர்த்தல் செயற்றிட்டமொன்றினை* தொடங்குவதற்கான ஆரம்பகட்ட பணிகள் முன்னெடுக்கப்பட்டன. அதேவேளை, வாகனம் தயாரித்தல், பொருத்துதல், உதிரிப்பாகங்களைத் தயாரித்தல் கைத்தொழிலுக்கான நியம தொழிற்படுத்தல் நடைமுறை வழிகாட்டல்கள் ஆண்டு காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்டன. 2021 இறுதியளவில் 13 தயாரித்தல் கம்பனிகள் நியம தொழிற்படுத்தல் நடைமுறையின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்த அதேவேளை 2,361 வாகனங்கள் பொருத்தப்பட்டன. மேலும், நாட்டின் ஏற்றுமதித் தளத்தினை மேம்படுத்தக்கூடிய அதேபோன்று அறிவைப் பகிர்ந்துகொள்வதை தோற்றுவிக்கக்கூடிய முன்னேற்றகரமான தொழில்நுட்பத்துடன் புதிய கூட்டுமுயற்சிகளின் வடிவில் வெளிநாட்டு முதலீடுகளைக் கவரும் நோக்குடன் தொழில்நுட்ப அமைச்சின் மேற்பார்வையின் கீழ் காலி, குருநாகல், கண்டி, நுவரெலியா மற்றும் ஹபரன ஆகிய பிரதேசங்களில் 5 தொழில்நுட்பப் பூங்காக்களை நிறுவுவதற்கு அமைச்சரவையின் அனுமதி வழங்கப்பட்டது. ஆண்டுகாலப்பகுதியில் பெண் தொழில்முயற்சியாளர்களின் தொழில்நுட்பம் சார்ந்த இயலளவினை மேம்படுத்துவதனை இலக்காகக்கொண்டு நிதி அமைச்சும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்காக மெய்நிகரான தளமொன்றினை தாபிப்பதைத் தொடங்கியது. தேசிய புத்தாக்க அமைப்பு முறையினை மேம்படுத்தி நிலைநிறுத்தும் நோக்குடன் 2021 நவெம்பரில் திறன் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சின் கீழ் தேசிய புத்தாக்க முகவராண்மை தாபிக்கப்பட்டது. *தேசிய புத்தாக்க முகவராண்மையானது* பொருளாதாரத்திலுள்ள அனைத்து துறைகளுக்குமிடையில் புத்தாக்கங்களைப் பயன்படுத்திக் கொள்வதற்கும் வர்த்தகமயமாக்கத்தினை இயலச்செய்வதற்கும் தொழிற்துறை, கல்வித்துறையிலுள்ளோர் மற்றும் அரசாங்கம் என்பவற்றிக்கிடையிலான கூட்டிணைவுகளை வசதிப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது. திறன் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சானது கைத்தொழில் துறையின் கல்விசார் தேவைகளுக்கு சேவையளிப்பதற்கு பல்வேறு வழிமுறைகளை மேற்கொண்டது. ஆண்டுகாலப்பகுதியில் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களில் தொழிற்கல்வி பயிலுனர்களுக்கு ரூ.4,000 மாதாந்த கொடுப்பனவு வழங்குவதற்காக *நிபுணத்தா சிசு திரிய* கல்வி உதவுத்தொகை திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. மேலும், தொழில்நுட்பக் கல்லூரிகளை நவீனமயப்படுத்துவதற்கும் தொழிற்கல்வி பயிற்சி நிலையங்களை மேம்படுத்துவதற்கும் *டெக் உதான நிகழ்ச்சித்திட்டத்தின்* கீழ் பல உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

**முதலீட்டுச் சபையும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையும் உள்நாட்டு தயாரிப்புக் கைத்தொழிலுக்காக வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முதலீட்டினை வசதிப்படுத்துவதற்குரிய பல்வேறு அபிவிருத்தி முயற்சிகளில் ஈடுபட்டன.** ஆண்டுகாலப்பகுதியில் உள்நாட்டு மற்றும் பன்னாட்டுச்

சந்தை இரண்டுக்கும் சேவையளிப்பதற்கு இலங்கையின் மருந்தாக்கல் தொழிற்துறையினை வலுப்படுத்தும் நோக்குடன் அம்பாந்தோட்டையின் அரபொக்க என்ற இடத்தில் நவீன மருந்துப் பொருள் தயாரித்தல் வலயம் தாபிக்கப்பட்டது. இது இரு கட்டங்களாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளதுடன் ஒவ்வொரு கட்டமும் ஒரு கட்டத்தில் 20 கம்பனிகளுக்கு வசதியளிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. உள்நாட்டில் துணி பெறக் கூடிய வசதியுடன் உற்பத்தி செய்யப்படும் கால அளவினையும் செலவையும் குறைப்பதற்கு ஏறாவூரில் புடைவைத் தயாரிப்பு வலயமொன்று தாபிக்கப்பட்டது. இத்துணி தயாரித்தல் பிரதேசம் ஐ.அ.டொலர் 35 மில்லியன் தொகையுடைய முதலீடுகளை ஏற்கனவே கவர்ந்துள்ளது. மேலும், உபாயரீதியான அபிவிருத்திச் செயற்றிட்டமொன்றாக அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகத்தில் பாரியளவிலான டயர் தயாரிப்புத் தொழிற்சாலையொன்றினை விருத்தி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டது. இச் செயற்றிட்டமானது டயர் தயாரிப்புக்கு உள்நாட்டு இறப்பர் மூலங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது. ஆண்டு காலப்பகுதியில் படகு கட்டுதல் கைத்தொழிலை செய்வதற்கான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை உருவாக்குவதனை ஏற்றுமதி அபிவிருத்தி சபை நிறைவுசெய்துள்ளது. மேலும், ஐந்து வருட காலப்பகுதிக்காக முக்கிய 24 ஏற்றுமதித் துறைகளை உள்ளடக்கி 1979இன் 40ஆம் இலக்க ஏற்றுமதி அபிவிருத்திச்சபைச் சட்டத்தின் கீழ் ஏற்றுமதி ஆலோசனைக் குழுக்கள் நியமிக்கப்பட்டன. இவ்வாலோசனைக் குழுக்கள், சந்தைச் சவால்கள் மற்றும் வாய்ப்புக்களை இனங்காண்கின்ற அதேவேளை போட்டித்தன்மையினை வலுப்படுத்தி தேவையான கொள்கைகளை வரைவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம் மற்றும் தனியார் துறைகளுக்கான கூட்டிணைவுகளை தோற்றுவிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், மூன்றாம் நிலை தொழிற்கல்வி ஆணைக்குழுவுடனான கூட்டுமுயற்சியுடன் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையானது ஏற்றுமதியினை நோக்காகக் கொண்ட நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளையும் அவ்வாறான பெண் தொழில்முயற்சியாளர்களையும் ஊக்குவித்து இயலளவை விருத்திசெய்வதற்கு கருத்தரங்குகள், செயலமர்வுகள், சந்திப்புக்கள் மற்றும் கொள்வனவாளர் தொடர்பு ஒன்றுகூடல்கள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றவற்றை ஒருங்கிணைத்தது. ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது சாத்தியமான வர்த்தகச் செயற்பாடுகளை வசதிப்படுத்துவதற்கு துறைசார்ந்த புத்துயிரளித்தல் நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குதல், முறைசார்ந்த உதவிக்கருமபீடம், ஏற்றுமதியாளர் மன்றங்கள் மற்றும் இலத்திரனியல்-சந்தை மையம் போன்றவற்றினூடாக கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட ஏற்றுமதி வணிகங்களுக்கு தொடர்ந்தும் ஆதரவளித்தது.

**பிராந்தியத்தினுள் முன்னணி இரத்தினக்கல் மையமான இலங்கையின் அந் நிலையினை தக்கவைத்துக் கொள்வதை இயலுமைப்படுத்துவதற்குரிய பல்வேறு நடவடிக்கைகளை தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை முன்னெடுத்திருந்தது.** அதற்கமைய, ஆண்டுகாலப்பகுதியில் தீட்டாத இரத்தினக்கற்களை இலங்கைக்கு இறக்குமதி செய்து பெறுமதி சேர்ப்பதற்காக மடகஸ்கார், தன்சானியா மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளுடன் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. பயன்படுத்தப்படாத நிலத்தடி இரத்தினக்கல் மூலங்களுக்கான பல்வேறு உரிமங்களை மற்றும் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளும் செயன்முறையினை எளிமைப்படுத்துவதற்கு *ஒரே இடத்திலான சேவை மையமொன்றினை* தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தியது. இரத்தினக்கல் மற்றும் ஆபரண விற்பனையினை ஊக்குவிப்பதற்காக இரத்தினக்கல் அகழ்வுக் கட்டுப்பாடுகளையும் அதனோடு இணைந்த கட்டணங்களையும் தளர்த்துவதற்கான வழிமுறையினை அதிகாரசபை மேற்கொண்டது. மேலும், தயாரித்தலை ஊக்குவிப்பதற்காக இரத்தினக்கல் ஆபரணத் தொழிலதிபர்களால் ஈட்டப்படும் இலாபங்கள் மீது விதிக்கப்படும் 14 சதவீத வரி 2021 ஏப்பிறலில் தள்ளுபடி செய்யப்பட்ட அதேவேளை மெய்நிகர் தளங்கள் ஊடாக விற்பனை செய்யக்கூடிய இரத்தினக்கல் பெறுமதி அடிப்படையளவு அதிகரிக்கப்பட்டது. மேலும், இரத்தினபுரியில் சர்வதேச இரத்தினக்கல் கோபுரத்துடன் தொடர்புடைய கட்டுமானப் பணி ஆண்டுகாலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.

**கைத்தொழில் துறைக்கும் கொள்கை வகுப்பிற்கும் ஏனைய அரசாங்க அதிகாரசபைகள் தொடர்ந்தும் நிறுவனசார் ஆதரவினை வழங்கின.** தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை, 2021ஆம் ஆண்டில் பல்வேறு வர்த்தக சந்தைகளூடாக *இலங்கைத் தயாரிப்பு* முத்திரையினைப் பிரபல்யப்படுத்துவதற்கு தொடர்ந்தும் அதன் முயற்சிகளை மேற்கொண்டது. ஆண்டு காலப்பகுதியில் 37 நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்கள் அவற்றின் உற்பத்திகள் உயர்வான பெறுமதி சேர்த்தல்களை உள்ளடக்கியமையினை அங்கீகரித்து அத்துடன் உலகளவில் சந்தைப்படுத்தத்தக்க விதத்தில் அத்தகைய உற்பத்திகளை ஊக்குவித்து தரமுயர்த்தும் நோக்குடன் இம்முத்திரைகளைத் தரமுயத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்டது. மேலும், நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு கிடைக்கப்பெறுகின்ற சந்தை வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கு *இலங்கைத் தயாரிப்பு* வியாபாரத்திலிருந்தான வியாபாரத்திற்கு (B2B) இணையவழி வணிக வாயில் 2021 திசெம்பரில் தொடங்கி வைக்கப்பட்டது. ஆண்டின் இறுதியளவில் 346 வியாபாரிகள் இவ்வாயிலுடன் பதிவுசெய்து கொண்டனர். தொழில்முயற்சியாண்மைகளை ஊக்குவித்து வெற்றிகரமான தொழில்முயற்சியாளர்களாக பல்கலைக்கழக பட்டதாரிகளை உருவாக்குவதற்கான விருத்திப்பாதைகளை உருவாக்குகின்ற *பிராந்திய தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும்*

*பட்டதாரி தொழில்முயற்சி உதயம் நிகழ்ச்சித்திட்டம்* 2021ஆம் ஆண்டில் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டது. அதற்கமைய, 5,179 பிராந்திய மட்ட தொழில்முயற்சியாளர்களும் 71 பல்கலைக்கழக பட்டதாரிகளும் இந் நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக மானியங்களை பெற்றுக்கொண்டனர். அதேவேளை தென்மாகாணத்தில் கைத்தொழில் அபிவிருத்தியை ஊக்குவிக்கின்ற அதேவேளை அப்பிரதேசத்தில் முன்முயற்சிகளை வசதிப்படுத்துவதற்கு அம்பாந்தோட்டை பிரதேசத்திற்கான வினைத்திறன்மிக்க *ஒரே இடத்திலான மையம்* என்ற வசதிப்படுத்தல் நிலையத்தினை கைத்தொழில் அபிவிருத்திச் சபை நிறுவியது. ஆண்டுகாலப்பகுதியில் கைத்தொழில் அபிவிருத்திச்சபையானது சிறியளவிலான தொழில்முயற்சியாளர்களுக்கு வலுவூட்டி ஆதரவளிப்பதற்கு *தெயட்ட புனருதயக் - கர்மாந்தயட ஜீவயக் நிகழ்ச்சித்திட்டத்தையும்* தொடங்கியது. சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை வலுவூட்டுவதனூடாக மக்களை மையப்படுத்திய பொருளாதாரத்தை உருவாக்கும் நோக்குடன் தேசிய உற்பத்தித்திறன் செயலகமானது மாவட்ட மற்றும் நிறுவனசார் மட்ட உற்பத்தித்திறன் மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களைத் தொடர்ந்தும் முன்னெடுத்தது.

**ஆற்றல்வாய்ந்த கைத்தொழில் துறைக்கு அத்தியாவசியமானதென இனங்காணப்பட்டு வருகின்ற தொழில் நுட்பவியல் புத்தாக்கத்தினை உயர்த்தும் நோக்குடன் தொழில்நுட்பத்தினால் தூண்டப்படும் முயற்சிகளை பல்வேறு நிறுவனங்களும் தொடர்ந்தும் வசதிப்படுத்தின.** அதற்கமைய கைத்தொழில் துறையில் தொழில்நுட்பத்தினையும் ஆராய்ச்சியையும் பிரயோகிப்பதை வசதிப்படுத்துவதற்கு தேசிய அடிப்படைக் கற்கைகள் நிறுவனம் தொழில்நுட்ப பரிமாற்றல் கொள்கையொன்றினை தயாரிப்படுத்துவதைத் தொடங்கி வைத்தது. மேலும், ஆண்டுகாலப்பகுதியில் காப்புரிமை விழிப்புணர்வு, தொழில்நுட்பப் பரிமாற்றல் மற்றும் வர்த்தகமயப்படுத்தல் என்பவற்றுடன் தொடர்புடைய மெய்நிகர் பயிற்சி மற்றும் கல்விசார் அமர்வுகள் உலக புலமைச் சொத்து அமைப்புடனான கூட்டிணைப்பில் விஞ்ஞானம், தொழில்நுட்பம், புத்தாக்கம் என்பவற்றுக்கான ஒருங்கிணைப்பு செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது. மேலும், இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையமானது பிரம்பு, பித்தளை, மட்பாண்ட, தளபாட அத்துடன் கிராமிய கைத்தொழில் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சுடன் இணைந்து உலகளாவிய நோய்த்தொற்றுக்கு மத்தியில் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் அபிவிருத்தியினை வசதிப்படுத்துவதற்கு பல மெய்நிகர் தொழில்நுட்ப பரப்புதல் கருத்தரங்குகளை நடாத்தியது. அதேவேளை, இலங்கை நனோ தொழில்நுட்ப நிறுவனமானது உள்நாட்டு காரியம், அறுவடைக்குப்பிந்திய தொழில்நுட்பம், நனோ வளமாக்கி, கொவிட்-19 இற்கு எதிரான நூதனமான சுகாதார கவனிப்பு புத்தாக்கங்கள் உள்ளடங்கலாக தோற்றம்பெற்று வருகின்ற ஆய்வுத் துறைகள் தொடர்பில் அதன் தொழில்நுட்ப பரிமாற்றல் மற்றும் வர்த்தகமயமாக்கல் முயற்சிகளை தொடர்ந்தும் முன்னெடுத்தது. சுகாதாரம், வேளாண்மை, பொறியியல் மற்றும் கல்வி உள்ளடங்கலாக பல்துறைகளுக்கும் 11 புதிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மானியங்களை வழங்குவதனூடாக தேசிய விஞ்ஞான மன்றமானது உள்நாட்டு தயாரிப்புத் துறையின் அபிவிருத்தியினை வசதிப்படுத்தியது. ஆண்டுகாலப்பகுதியில் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனமானது மருந்துப் பொருள் ஆய்வுகூடம், உராய்வுநீக்கி மற்றும் பெற்றோலிய எண்ணெய் பரிசோதனை ஆய்வுகூடம் மற்றும் பொறியியல் பரிசோதனை ஆய்வுகூடம் உள்ளடங்கலாக பல புதிய ஆய்வுகூடங்களுடன் தொடர்புடைய பரிசோதனைச் சேவைகளைத் தொடங்கியது. மேலும், ஆண்டுகாலப்பகுதியில் நுண்பிளாத்திக்கு பரிசோதனை ஆய்வுகூடமும் கடல்சார் கழிவுத் தரவுத்தளமும் நிறுவப்பட்டன. ஆண்டுகாலப்பகுதியில் தொழில்நுட்பப் பங்குடமையினை தாபிப்பதற்கும் கூட்டுமுயற்சி கல்விசார் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளை வசதிப்படுத்துவதற்கும் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனமானது பல்வேறு அமைச்சுக்கள், கைத்தொழில்கள், பன்னாட்டு பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய அதிகாரசபைகள் என்பவற்றுடன் 10 புரிந்துணர்வு உடன்படிக்கைகளையும் கைச்சாத்திட்டது.

**இலங்கைக் கைத்தொழில்களின் போட்டித் தன்மையினை அதிகரிப்பதற்கு கைத்தொழில் சம்மேளனங்கள் தொடர்ந்தும் பயிற்சி மற்றும் ஊக்குவிப்புக்களை வழங்கின.** ஆண்டு காலப்பகுதியில் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றிலிருந்து தோற்றம்பெற்ற சமகால பிரச்சனைகளையும் சவால்களையும் வெற்றி கொள்வதற்கு இறக்குமதியாளர்களுக்கும் ஏற்றுமதியாளர்களுக்கும் வசதியளிப்பதை நோக்காகக் கொண்டு இலங்கையின் தேசிய வர்த்தக சம்மேளனம் பல்வேறு பயிற்சி மற்றும் அறிவுப் பகிர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்திய அதேவேளை இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கான வர்த்தக வாய்ப்புக்களை உருவாக்குவதற்கு வியாபாரத்திலிருந்து வியாபாரத்திற்கான மெய்நிகர் அமர்வுகள் மற்றும் வணிக மன்றங்கள் உள்ளடங்கலாக சர்வதேச மட்டங்களில் வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களும் நடாத்தப்பட்டன. மேலும், இலங்கையின் தேசிய வர்த்தக சம்மேளனமானது 2021 காலப்பகுதியில் பிராந்திய மற்றும் பன்னாட்டு நிறுவனங்களுடன் பல புரிந்துணர்வு உடன்படிக்கையினை கைச்சாத்திட்டு இதனூடாக இணைத்தரப்பு அமைப்புக்களுடன் வலையமைப்புகள் நிறுவப்பட்டன. இலங்கை வர்த்தக சம்மேளனமானது சர்வதேசப் பங்காளரொருவருடனான கூட்டிணைப்பில் 2021 இறுதியளவில் *ஏற்றுமதியாளர் பொதுவான சந்தை எண்ணப்பாங்கு கணக்கெடுப்பினை*நடைமுறைப்படுத்தியது. இக் கணக்கெடுப்பானது ஏற்றுமதியாளர்களின் நோக்கங்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஆண்டுக்கு இருமுறை நடாத்தப்படுகின்றது. மேலும், வர்த்தகம் மற்றும் வியாபார ஊக்குவிப்பிற்கு வசதியளித்து இலங்கை வர்த்தக சம்மேளனம் பன்னாட்டு இணையவழி கருத்தரங்குகள், வியாபாரத்திலிருந்து வியாபாரத்திற்கான அமர்வுகள் மற்றும் உள்நாட்டு அத்துடன் வெளிநாட்டு இராஜதந்திரிகளுடனான சந்திப்புக்கள் போன்றவற்றைக் கொண்ட நிகழ்வுகளையும் நடாத்தியது. மேலும், கைத்தொழில்த் துறைகளுக்கான

2

நிறுவனசார் ஒத்துழைப்பினை மேம்படுத்தும் நோக்குடன் இலங்கை வர்த்தக சம்மேளனம் ஆண்டு காலப்பகுதியில் பன்னாட்டு மட்ட சம்மேளனங்களுடன் 6 புரிந்துணர்வு உடன்படிக்கைகளைக் கைச்சாத்திட்டது. அதேவேளை இலங்கை சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்கள் சம்மேளனம் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்கு இயலளவு விருத்தி மற்றும் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்களையும் நடாத்தியது.

**சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு அவசியமான நிதியியல் ஆதரவு வழங்கப்படுவதனை உறுதிசெய்வதற்கான தேசியக் கொள்கை கட்டமைப்பிற்கிணங்க பல கடன்திட்டங்கள் 2021இல் அறிமுகப்படுத்தப்பட்டன.** சிறிய மற்றும் நடுத்தரளவு பாற்பண்ணையாளர்களை வலுவூட்டுவதை இலக்காகக் கொண்டு ஆண்டுகாலப்பகுதியில் ஆண்டுக்கு 7.5 சதவீத சலுகை வட்டிவீதத்தில் ஒவ்வொருவருக்கும் ரூபா 1 மில்லியன் தொகையுடைய கடன்களை வழங்குகின்ற *கிரி சக்தி* கடன்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதற்கமைய, இக்கொடுகடன் திட்டத்தின் கீழ் 739 கடன் வழங்கப்பட்டு 2021ஆம் ஆண்டில் ரூ.400.4 மில்லியன் தொகை பகிர்ந்தளிப்பதற்கு வழிவகுத்தது. மேலும், சேதன வளமாக்கி, பீடைநாசினிகள் மற்றும் களைநாசினிகள் தயாரிப்பாளர்களுக்கு நிதியியல் ஆதரவினை வழங்குவதற்கான அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைவாக புதிய கடன்திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. அதேவேளை, கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள், சுயதொழில் செய்வோர் மற்றும் தனிப்பட்டவர்களை புத்துயிர்பெறச்செய்வதற்கு கடனை காலம்தாழ்த்திச் செலுத்தும் வசதி மற்றும் தொழிற்படு மூலதனக் கடன் வசதிகள் என்பவற்றை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் நிதியியல் நிறுவனங்களுக்கு மத்திய வங்கியினால் வழிகாட்டல்களும் அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன. ஆண்டுகாலப்பகுதியில் நிதி அமைச்சானது சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை வலுப்படுத்துவதற்கு தேசிய கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தினைத் தாபிப்பதனையும் துரிதப்படுத்தியது. மேலும், *கூரைமீது பொருத்தப்பட்ட சூரிய சக்தி உற்பத்தித் தொடர் கொடுகடன் திட்டமும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி கொடுகடன் திட்டங்களும்* கொடையாளி முகவராண்மையின் நிதியியல் ஆதரவுடன் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டன. 2021 இறுதியளவில் இவ்விரு கொடுகடன் திட்டங்களின் கீழ் ரூ.23.4 பில்லியன் வழங்கப்பட்டிருந்தது.

## கட்டடவாக்கம், மற்றும் சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல்

**உண்மைச் சொத்து மற்றும் வீடமைப்புக்கான புதுப்பிக்கப்பட்ட கேள்வி மற்றும் கருத்திட்டங்களை மீளத்தொடங்கியமை என்பன மூலம் வலுப்பெற்று, கட்டடவாக்க சேர்க்கப்பட்ட பெறுமதி 2020இல் பதிவாகிய 13.2 சதவீத சுருக்கத்திலிருந்து மீட்சியடைந்து 2021இல் 1.9 சதவீதத்தினால் படிப்படியாக உயர்வடைந்த போதிலும் மூலப்பொருள் பற்றாக்குறைகள் இத்துறை முழுமையாக மீட்சியடைவதை தடைப்படுத்தின.** கட்டடவாக்கத்துடன் தொடர்புபட்ட குறிகாட்டிகளைக் கருத்திற்கொள்கையில், 2021 காலப்பகுதியில் நாட்டின் மொத்த சீமெந்து கிடைக்கப்பெறும் தன்மையானது சிறிய வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்த அதேவேளை, கட்டடப்பொருட்கள் இறக்குமதிகள் அதிகரிப்பினைப் பதிவுசெய்தன. அதேவேளை, தனிப்பட்ட வீடமைப்பு, கட்டடவாக்க நடவடிக்கைகள் உள்ளடங்கலாக கட்டடவாக்க நடவடிக்கைகளுக்காக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடனும் 2021 திசெம்பர் இறுதியிலுள்ளவாறு வளர்ச்சியினைப் பதிவுசெய்து கட்டடவாக்க நடவடிக்கைகளுக்காக அதிகரித்த நிதியங்கள் கிடைக்கப்பெறும் தன்மையினைச் சுட்டிக்காட்டுகின்றது. எனினும், ஆண்டின் இரண்டாம் மற்றும் மூன்றாம் காலாண்டுப்பகுதியில் வெளிப்பட்ட உலகளாவிய நோய்த்தொற்றின் மூன்றாம் அலை, உலகளாவிய மற்றும் உள்நாட்டு வழங்கல் சங்கிலிகளிலான இடையூறுகள் என்பன கட்டடவாக்கம் தொடர்புபட்ட நடவடிக்கைகளை வெகுவாகப் பாதித்தன. வழங்கல்பக்க தடைகள் விசேடமாக, சீமெந்து, உருக்கு மற்றும் ஓடுகள் போன்ற முக்கிய மூலப்பொருட்கள் பற்றாக்குறை மற்றும் சடுதியான விலை அதிகரிப்புக்கள் என்பன கட்டடவாக்க நடவடிக்கைகளின் விரிவுபடுத்தலில் தாக்கம் செலுத்தி தொழில்துறையின் முழுமையான உள்ளார்ந்த ஆற்றலையும் தடைப்படுத்தின என மத்திய வங்கியினால் நடாத்தப்படும் கட்டடவாக்கம் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய வியாபாரக் அளவீடுகள் குறிப்பிட்டன. அதேவேளை, மணல் அகழ்தல் போன்ற கட்டுமான நடவடிக்கைகளுக்கு உள்ளீடுகளை வழங்குகின்ற அகழ்வு நடவடிக்கைகளை பிரதானமாக உள்ளடக்குகின்ற சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் நடவடிக்கைகளும் 2020இல் பதிவாகிய 12.5 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் கட்டடவாக்க நடவடிக்கைகளில் மீட்சியிலிருந்து பெருமளவு நன்மையடைந்து 2021இல் 2.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியினைப் பதிவுசெய்தது. சுரங்கமகழ்தல் தொடர்புபட்ட ஏனைய குறிகாட்டிகளை பொறுத்தவரை பொசுபேற்று உற்பத்தி 2021இல் அதிகரிப்பினைப் பதிவுசெய்து சுரங்கமகழ்வு நடவடிக்கைகளில் சாதகமான செயலாற்றத்தினை எடுத்துக்காட்டியது. இரத்தினக்கல் அகழ்தலுடன் தொடர்புபட்ட குறிகாட்டிகளைக் கருத்திற்கொள்கையில், இரத்தினக்கல் ஏற்றுமதி அளவுகள் 2021இல் அதிகரிப்பினைப் பதிவுசெய்தன.

## மின்வலு, நீர் மற்றும் கழிவுச் சுத்திகரிப்பு


**மின்வலு மற்றும் எரிவாயு வழங்கல் தொடர்புபட்ட நடவடிக்கைகளினால் பிரதானமாகத் தூண்டப்பட்டு மின்வலு, நீர் மற்றும் கழிவுச் சுத்திகரிப்பு சேர்க்கப்பட்ட பெறுமதி 2020இல் பதிவாகிய 0.8 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2021இல் 3.9 சதவீதம் மீளெழுச்சி பெற்றது.** இவ்வகையில் மேம்படுதலுக்கு பாரியளவில் பங்களிப்புச்செய்த மின்வலு, எரிவாயு, நீராவி மற்றும் வாயுச்சீராக்கி வழங்கல் நடவடிக்கைகள் 2020இல் பதிவாகிய 1.6 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில்

ஆண்டுகாலப்பகுதியில் 6.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. மின்வலு உற்பத்தித் தரவுகளைக் கருத்திற்கொள்கையில், பொருளாதாரத்தில் ஏற்பட்ட மீட்சியுடன் கைத்தொழில் துறையிலிருந்து கிடைத்த உயர்வான கேள்வியினைப் பிரதான காரணமாகக் கொண்டு மொத்த மின்வலு உற்பத்தி குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. இவ்வகையினுள் உள்ள ஏனைய துணைப் பொருளாதார நடவடிக்கைகளுக்கு மத்தியில் நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல் நடவடிக்கைகள் 2020இன் 4.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் ஆண்டுகாலப்பகுதியில் 4.3 சதவீதத்தினால் வளர்ச்சியுற்றன. எனினும், கழிவுநீர், கழிவுச் சுத்திகரிப்பு மற்றும் கழிவகற்றுதல் நடவடிக்கைகள் 2020இல் பதிவாகிய 1.0 சதவீத வீழ்ச்சிக்கு மேல் 2021இல் 3.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.

## பணிகள்

**பொருளாதார நடவடிக்கைகள் மீளக்கட்டியெழுப்பப்பட்டு வீட்டலகு நுகர்வு படிப்படியாக உயர்வடைந்தமையுடன், பணிகளின் சேர்க்கப்பட்ட பெறுமதி 2020இன் 1.6 சதவீத சரிவிலிருந்து 2021இல் 3.0 சதவீதத்தினால் உயர்வடைந்தது.** நிதியியல் பணிகளில் விரிவடைதல், இம்மீட்சிக்கு உறுதுணையளித்த அதேவேளை, மொத்த மற்றும் சில்லறை வர்த்தக நடவடிக்கை அத்துடன் உண்மைச் சொத்து நடவடிக்கைகள் என்பன உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்புபட்ட கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதிலிருந்து நன்மையடைந்து ஆண்டுகாலப்பகுதியில் விரிவடைந்தன. மேலும், உலகளாவிய நோய்த்தொற்றினால் தூண்டப்பட்ட கேள்வியினால் துணையளிக்கப்பட்டு தகவல் தொழில்நுட்ப செய்நிரலாக்கல், தொலைத்தொடர்பு மற்றும் சுகாதார நடவடிக்கைகள் என்பனவும் ஆண்டுகாலப்பகுதியில் விரிவடைந்தன. மேலும், ஏனைய தனிப்பட்ட நடவடிக்கைகள், மற்றும் தொழில்சார் பணிகள், காப்புறுதி மற்றும் போக்குவரத்துப் பணிகள் என்பவற்றில் ஏற்பட்ட மீட்சியானது பொது நிர்வாகம், கல்விப் பணிகள், அஞ்சல் மற்றும் துரித அஞ்சல் பணிகள் என்பவற்றுடன் ஒன்றிணைந்து ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு சாதகமாகப் பங்களித்தது. மேலும், தங்குமிடம், உணவு மற்றும் குடிபான பணி நடவடிக்கைகள், தொடர்ச்சியாக இரண்டு ஆண்டு சுருக்கத்திற்குப் பின்னர், ஆண்டுகாலப்பகுதியில் மீளெழுச்சியுற்று மிதமான வளர்ச்சியினைப் பதிவுசெய்தன. மத்திய வங்கியினால் மாதாந்தம் தொகுக்கப்படுகின்ற பணிகள் நடவடிக்கைகளுக்கான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண், மாதத்திற்கு மாத அடிப்படையில் பணிகள் செயலாற்றத்தினைப் பிரதிபலிக்கின்ற ஒட்டுமொத்த விரிவடைதலொன்றினை எடுத்துக்காட்டியது. மேலும், பணிகள் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய வியாபாரத் தோற்றப்பாட்டு அளவீட்டின் கேள்வி மற்றும் விற்பனை துணைச் சுட்டெண்கள், ஆண்டுகாலப்பகுதியில் சராசரியாக அதிகரிப்பொன்றினைக் குறித்துக்காட்டி, பணிகள் நடவடிக்கைகளில் உயர்வடைதலினை எடுத்துக்காட்டின.


வரைபடம் 2.11
பணிகள் நடவடிக்கைகளின் வளர்ச்சி வீதங்கள் (அ)




(அ) மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது (2010 அடியாண்டு)

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

வரைபடம் 2.12
கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள் (அ)




(அ) கொ.மு.சுட்டெண்ணானது கடந்த மாதத்துடன் ஒப்பிட்டு மாதாந்த அபிவிருத்திகளை வெளிக்காட்டும் மனோபாவ அளவீட்டு அடிப்படையில் அமைந்ததாகும். இது ஓர் வியாபித்தல் சுட்டெண் (diffusion index) ஆவதுடன் 0 மற்றும் 100 இற்கு இடையிலான பெறுமதியை கொண்டிருப்பதோடு நடுநிலையான 50இற்கு மேலான சுட்டெண் பெறுமதி பொருளாதார நடவடிக்கைகளில் ஓர் விரிவாக்கத்தைக் குறிக்கும் அதேவேளையில் 50இற்க கீழான சுட்டெண் பெறுமதியானது சுருக்கத்தினையும் குறிக்கின்றது.

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

## மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம்

**கொள்கைசார் தூண்டல்கள் மற்றும் நடமாட்டக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமை என்பன மூலம் தூண்டப்பட்டு மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தக நடவடிக்கைகள் 2020இல் பதிவாகிய 1.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2021இல் சேர்க்கப்பட்ட பெறுமதி நியதிகளில் 2.0 சதவீத மிதமான வளர்ச்சியினைப் பதிவுசெய்தன.** நாடு 'புதிய இயல்பு' இன் கீழ் தொழிற்பாடுகளைக் கொண்டு நடாத்துவதற்கு படிப்படியாக பின்பற்றியமை மூலம் வர்த்தக நடவடிக்கைகள் உறுதியடைந்தன. மேலும், நிதியியல் உதவி, நுகர்வோரின் செலவிடத்தக்க வருமானத்தினை மிதக்கவிடுதல் போன்றன வாயிலாக அரசாங்கமும் காலமுறையான திரவத்தன்மை ஆதரவினை வழங்கியது. முதலீட்டு மற்றும் இடைநிலைப் பொருட்கள் இறக்குமதிகள் காரணமாக ஆண்டுகாலப்பகுதியில் இறக்குமதிகளைப் பிரதான காரணமாகக் கொண்டு ஆண்டுகாலப்பகுதியில் மொத்த இறக்குமதி அளவுச் சுட்டெண் அதிகரிப்பினைப் பதிவுசெய்த

2

அதேவேளை, இறக்குமதிசெய்யப்பட்ட நுகர்வோர் பொருட்களின் அளவு சிறிய வீழ்ச்சியொன்றினையே பதிவுசெய்தது. இதற்கு மேலதிகமாக, மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தக நடவடிக்கைகளுக்காக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கடன்களும் முற்பணங்களும் 2020 இறுதியுடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியில் கணிசமாக அதிகரித்தன.

### போக்குவரத்தும் களஞ்சியப்படுத்தலும்

**அவ்வப்போது நடமாட்டக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டமையுடன் போக்குவரத்து நடவடிக்கைகளின் சேர்க்கப்பட்ட பெறுமதி 2020இல் பதிவுசெய்யப்பட்ட 6.8 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 0.6 சதவீதத்தினால் சிறிதளவு மீட்சியடைந்தது.** உலகளாவிய நோய்த்தொற்று தொடங்கியதிலிருந்து வெகுவாகப் பதிக்கப்பட்ட போக்குவரத்து நடவடிக்கைகள் 2021 இன் ஆரம்ப காலப் பகுதியில் மேம்பாடொன்றை எடுத்துக்காட்டிய, போதிலும், உலகளாவிய நோய்த்தொற்றின் மூன்றாம் அலை தோற்றம் பெற்றதன் பின்னர் குறைவடைந்தது. எனினும், நான்காவது காலாண்டின் தொடக்கத்திலிருந்து நடமாட்டக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தியமை போக்குவரத்து நடவடிக்கைகள் புத்துயிர்பெறுவதற்கு நன்மையளித்தன. நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட காலப்பகுதியில் பொதுப் போக்குவரத்து குறைவாகப் பயன்படுத்தப்பட்டமை அத்துடன் மட்டுப்படுத்தப்பட்டளவில் கிடைக்கப்பெற்றமை என்பன காரணமாக பயணிகள் போக்குவரத்து மோசமாகப் பாதிக்கப்பட்ட போதிலும் அத்தியாவசியச் சேவையொன்றாக பொருட் போக்குவரத்து முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021 காலப்பகுதியில் பரந்தளவில் தடங்கலற்றுக் காணப்பட்டது. உலகளாவிய வழங்கல் சங்கிலிகள் நீங்கியமைக்கு மத்தியில் துறைமுகங்களின் தொழிற்பாடுகளும் ஆண்டுகாலப்பகுதியில் உயர்வடைந்தன. அதற்கமைய, கொள்கலன் கையாளுதலில் (இருபது அடிக்குச் சமமான அலகு நியதிகளில்), கப்பற்பொருள் கையாளுதலில் ஆண்டு காலப்பகுதியில் அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. மேலும், சிறிலங்கன் எயார்லைன்ஸ் மூலம் கொண்டுசென்ற பொருட் போக்குவரத்து கி.மீற்றர் தூரங்கள் 2021இல் அதிகரித்தன. எனினும், இலங்கைப் போக்குவரத்துச் சபை, தனியார் பேருந்து தொழிற்படுத்துநர்கள் மற்றும் சிறிலங்கன் எயார்லைன்ஸ் மூலம் தொழிற்படுத்தப்பட்ட பயணி கி.மீற்றர் தூரங்கள் 2021 காலப்பகுதியில் தொடர்ந்தும் சுருக்கமடைந்தன.

### தங்குமிட வசதி மற்றும் உணவுப் பணி நடவடிக்கைகள்

**சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் மற்றும் விடுமுறையைக் கழித்தல் என்பவற்றில் படிப்படியான அதிகரிப்பு, தங்குமிடவசதி, உணவு மற்றும் குடிபான பணி நடவடிக்கைகளின் சேர்க்கப்பட்ட பெறுமதிக்கு செயலூக்கத்தினை வழங்கி 2020இல் பதிவாகிய 39.4 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2021இல் 1.9 சதவீதத்தினால் மீட்சிபெற்றது.** பன்னாட்டு மற்றும் உள்நாட்டு பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டமையின் காரணமாக சுற்றுலா தொடர்புபட்ட நடவடிக்கைகள் உலகளாவிய நோய்த்தொற்றினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. கவர்ச்சிகரமான சுற்றுலாப் பயணப் பொதிகளுடன் இணைத்து பன்னாட்டு சுற்றுலாப் பயணிகளுக்காக குறைந்தளவு மக்கள் மாத்திரம் அணுகக்கூடிய இடத்தில் தனிமைப்படுத்தப்பட்ட குழுவாகவிருத்தலை அறிமுகப்படுத்தியதன் மூலம் உள்வருகின்ற பயணத்தடைகளை நாடு படிப்படியாக தளர்த்தியமை ஆண்டின் இறுதிப் பாகத்தினை நோக்கி சுற்றுலாப் பயணி வருகைகளில் வலுவான மாதத்திற்கு மாத வளர்ச்சியொன்றினை ஏற்படுத்தியது. மேலும், உள்நாட்டு பயணிகளுக்காக பல விடுதிகள் பிரத்தியேகமான தள்ளுபடிகளை வழங்கியமையினால் ஆண்டுகாலப்பகுதியில் உள்நாட்டு சுற்றுலா நடவடிக்கைகளும் மீளெழுச்சிபெற்றன. எவ்வாறாயினும், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் மூன்றாம் அலையினால் தங்குமிடவசதி, உணவு மற்றும் குடிபானப் பணி நடவடிக்கைகளின் மீட்சி பெருமளவு தடைப்பட்டிருந்தது.

### நிதியியல், காப்புறுதி மற்றும் வதிவிடச் சொத்துடமை உள்ளிட்ட உண்மைச் சொத்து நடவடிக்கைகள்

**நிதியியல் பணிகளில் தொடர்ச்சியான அதிகரிப்பானது நிதியியல், காப்புறுதி மற்றும் வதிவிடச் சொத்துடமை உள்ளிட்ட உண்மைச் சொத்து நடவடிக்கைகளின் சேர்க்கப்பட்ட பெறுமதியை வழிநடாத்தியது, இது, 2020இல் பதிவாகிய 4.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2021இல் 5.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.** அதற்கமைய, நிதியியல் பணிகள் நடவடிக்கைகள் மற்றும் துணை நிதியியல் பணிகள் என்பன 2020இன் 10.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 7.5 சதவீதத்தினால் விரிவடைந்தன. சவால்மிக்க சூழலுக்கு மத்தியிலும் நிதியியல் பணிகளின் தொடர்ச்சியான விரிவடைதலினைப் பிரதிபலித்து, வங்கிகள் மற்றும் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் கடன் அளவு ஆண்டுகாலப்பகுதியில் கணிசமாக அதிகரித்த அதேவேளை, வைப்புத் தளமும் விரிவடைந்தது. மேலும், காலாண்டு அடிப்படையில் மத்திய வங்கியினால் நடாத்தப்படுகின்ற கொடுகடன் வழங்கல் அளவீட்டில் குறித்துக்காட்டப்பட்டவாறு குறைவான வட்டி வீதச் சூழலின் காரணமாக கொடுகடனுக்கான கேள்வி உயர்வான மட்டங்களில் காணப்பட்ட அதேவேளை, அநேகமான காலப்பகுதியில் நிலவிய மிகையான திரவத்தன்மையின் காரணமாக கடன் வழங்குவதற்கான விருப்பமும் ஆரோக்கியமான மட்டங்களில் காணப்பட்டன. அதேவேளை, காப்புறுதி, மீள்காப்புறுதி மற்றும் ஓய்வூதிய நிதியிடல் நடவடிக்கைகள் 2020இல் பதிவாகிய 3.3 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2021இல் 5.1 சதவீதத்தினால் மீட்சியடைந்த அதேவேளை, வதிவிடச் சொத்துடமை உள்ளடங்கலாக உண்மைச் சொத்து நடவடிக்கைகள் 2020இல் எதிர்கொண்ட 1.2 சதவீத சுருக்கதிலிருந்து மீட்சிபெற்று 2021இல் 3.1 சதவீதத்தினால் வளர்ச்சியுற்றன.

### தகவல் மற்றும் தொடர்பூட்டல்

**உலகளாவிய நோய்த்தொற்றிலிருந்து கிடைத்த வாய்ப்புகளிலிருந்து நன்மையடைந்து தொடர்பூட்டல் மற்றும் தகவல்தொழில்நுட்ப செய்நிரலாக்கல் அத்துடன் ஆலோசனைச் சேவைகள் என்பவற்றின் சேர்க்கப்பட்ட பெறுமதி 2020இல் அடையப்பெற்ற 14.1 சதவீதத்திற்கு மேல் 17.5 சதவீதம் கொண்ட ஆரோக்கியமான வீதத்தில் வளர்ச்சியடைந்து 2021இல் தொடர்ந்தும் உத்வேகமடைந்தது.** தொலைத்தொடர்பு தொழில்துறையானது, உலகளாவிய நோய்த்தொற்று காலப்பகுதியில் சமூகப் பொருளாதார இடைத்தொடர்பை பேணுவதில் முக்கிய பங்காற்றியது. இது, வீட்டிலிருந்து பணியாற்றுதல் ஏற்பாடுகள், இணையவழிக் கல்வி மற்றும் பொழுதுபோக்கு என்பன மீது அதிகரித்தளவில் தங்கியிருத்தலுடன் இணைந்து குரல் மற்றும் தரவு என்பவற்றுக்கான உலகளாவிய நோய்த்தொற்றினால் தூண்டப்பட்ட மேலதிகக் கேள்வியிலிருந்து கணிசமானளவு நன்மையடைந்தது. அதற்கமைய, தொலைத்தொடர்பு நடவடிக்கைகள், 2020இன் 15.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் ஆண்டுகாலப்பகுதியில் 16.2 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியுற்றது. இத் தொழில்த்துறையானது, செயற்பரப்பு மற்றும் இயலளவு மட்டங்களை விரிவுபடுத்தல், சேவைத்தரத்தினை மேம்படுத்தல் மற்றும் வீட்டிலிருந்து பணியாற்றுதல் அத்துடன் வீட்டிலிருந்து கற்றல் ஏற்பாடுகள் போன்ற தேவைகளுக்கு சேவையளிப்பதற்கு விசேட பொதிகளை அறிமுகப்படுத்தல் என்பனவாயிலாக வலுவான விதத்தில் பதிலிறுத்தியது. அதேவேளை, தகவல் தொழில்நுட்ப செய்நிரலாக்கல் ஆலோசனை மற்றும் அதனோடிணைந்த நடவடிக்கைகளும் டிஜிட்டல் ஊடகம், வலையமைப்பை ஏற்படுத்தல், இணையப் பாதுகாப்பு, கேள்வியின் மீது பெற்றுக்கொள்ளகூடிய கணனிச் சேவைகள் (கிளவுட் கணனிப் பணிகள்), செயற்கை நுண்ணறிவு மற்றும் தானியக்கப்படுத்தல் போன்ற தொழில்நுட்பம் அடிப்படையலமைந்த தீர்வுகளுக்கான கேள்வியில் தீடீர் அதிகரிப்பின் மூலம் உந்தப்பட்டு, 2020இல் 10.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2021இல் 21.7 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியடைந்தது.

### ஏனைய பணி நடவடிக்கைகள்

**கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் முதல் இரண்டு அலைகளினதும் பாதகமான தாக்கங்களின் காரணமாக 2020இல் மந்தமடைந்த ஏனைய பணிகளுடன் தொடர்புபட்ட பொருளாதார நடவடிக்கைகளில் அநேகமானவை மீண்டெழுந்த அலைகளிலிருந்தான இடையூறுகளுக்கு மத்தியில் 2021இல் மீட்சிபெற இயலுமாகவிருந்தன.** அதற்கமைய, 2020இல் 6.5 சதவீதத்தினால் சுருக்கமடைந்த கலைகள், பொழுதுபோக்கு மற்றும் ஓய்வு, துணி துவைத்தல் பணிகள், முடி திருத்துதல் மற்றும் ஏனைய அழகுசார்ந்த செயற்பாடுகள் அத்துடன் மரணச்சடங்கு மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகள் போன்ற தனிப்பட்ட பணிகளை உள்ளடக்குகின்ற ஏனைய தனிப்பட்ட பணிகள் ஒப்பீட்டுரீதியான சாதகமான சூழலின் காரணமாக 2021இல் 1.4 சதவீதத்தினாலும் 1.1 சதவீதத்தினாலும் வளர்ச்சியுற்றன. மேலும் தொழில்சார் பணிகள் 2020இல் பதிவுசெய்த 2.7 சுருக்கத்திலிருந்து மீண்டு 2021இல் 1.4 சதவீதத்தால் அதிகரித்தது. மேலும், பொது நிர்வாகமும் பாதுகாப்பு நடவடிக்கைகளும் 2020இல் அவதானிக்கப்பட்ட 1.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2021இல் 1.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த அதேவேளை, உலகளாவிய நோய்த் தொற்றுக் காலப்பகுதியில் முனைப்புடன் காணப்பட்ட மனித சுகாதார நடவடிக்கைகள் 2020இல் பதிவாகிய 4.3 சதவீதத்திற்கு மேல் 2021இல் 5.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. மேலும், கல்வி, அஞ்சல் மற்றும் விரைவுப் பொதி பணிகள் மற்றும் நிகழ்ச்சிகள் மற்றும் ஒலிபரப்பு நடவடிக்கைகள் ஆண்டுகாலப்பகுதியில் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கு சாதகமாகப் பங்களித்தன.

## 2.5 செலவினம்

**பொருளாதாரத்தின் நுகர்வு மற்றும் முதலீட்டுச் செலவினத்தை உள்ளடக்குகின்ற மொத்த உள்நாட்டுச் செலவினமானது நுகர்வு மற்றும் முதலீடு இரண்டினதும் செலவினத்தில் ஏற்பட்ட விரிவடைதலினால் துணையளிக்கப்பட்டு 2020இன் 0.5 சதவீதம் கொண்ட சிறிய வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2021இல் நடப்பு விலைகளில் 13.1 சதவீதம் கொண்ட உயர்வான வீதத்தினால் வளர்ச்சியுற்றது.** தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலை அதேபோன்று இறைக் கொள்கை தூண்டல்கள் என்பன இறுதி நுகர்வுச் செலவினத்தை வலுப்படுத்தின. அதற்கமைய, மொத்த உள்நாட்டுச் செலவினத்திற்கு முக்கியமாகப் பங்களிக்கின்ற நுகர்வுச் செலவினம் 2021இல் 9.9 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்த அதேவேளை, முதலீட்டுச் செலவினமும் 2021இல் 23.2 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்து மீளெழுச்சியுற்றது. வெளிநாட்டுப் பக்கத்தில், நடப்பு விலையில் தேறிய வெளிநாட்டுக் கேள்வி 2020இல் பதிவாகிய 5.1 சதவீதச் சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2021இல் 31.6 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு சுருக்கமடைந்தது. இக்காலப்பகுதியில் நிலவிய உயர்வான இறக்குமதி விலைகளின் பகுதியளவான காரணத்தினால் பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதியில் 23.3 சதவீதத்தினை விஞ்சிச்சென்ற பொருட்கள் மற்றும் பணிகள் இறக்குமதியில் 25.7 சதவீதம் கொண்ட வளர்ச்சி இதற்குக் காரணமாக அமைந்தது. அதற்கமைய, மொத்த உள்நாட்டுச் செலவினத்தினதும் தேறிய வெளிநாட்டுக் கேள்வியினதும் கூட்டாகக் காணப்படுகின்ற மொ.உ.உற்பத்தி நடப்பு விலைகளில் 2020இன் 0.2 சதவீதம் கொண்ட சிறிதளவான வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2021இல் 11.9 சதவீதம் கொண்ட வளர்ச்சியினைப் பதிவுசெய்தது. நிலையான விலைகளிலான மதிப்பீடுகளைக் கருத்திற்கொள்கையில், நுகர்வு மற்றும் முதலீட்டுச் செலவினம் ஆகியன 2021இல்

சிறப்புக்குறிப்பு 4

## நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளை வளர்ச்சியைத் தூண்டுபவைகளாக ஊக்குவித்தல் மற்றும் சவால்கள்


2

### அறிமுகம்

உலகெங்கிலுமுள்ள பெரும்பாலான நாடுகளில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் முக்கிய மையத் தொழில்களாகத் தொடர்ந்தும் விளங்கி, தொழில்முயற்சிகளின் பாரிய பெரும்பான்மைக்கு வகைகூறிய அதேவேளையில், தொழில் வாய்ப்பில் பாரிய மூலத்தினை வழங்குமொன்றாகவும் வெளியீட்டில் கணிசமான விகிதத்தினை விளைவிப்பனவாகவும் காணப்படுகின்றன. பெரும்பாலான நாடுகளின் தொழில் வாய்ப்பில் இவை மூன்றிலிரண்டு பங்கிற்கு வகைகூறுவதுடன் மொ.உ.உற்பத்தியில் 50 சதவீதத்திற்கும் கூடுதலான பங்கிற்கும் பங்களிக்கின்றன.[1] பொருளாதார வெளியீட்டிற்கு நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் துறையின் பங்களிப்பு நடுத்தர மற்றும் குறைந்த வருமான நாடுகளிலும் பார்க்க உயர்ந்த வருமான நாடுகளில் உயர்வாக இருக்குமென பொதுவாகக் கண்டறியப்பட்டுள்ளதுடன் வளர்ச்சிக்கான அவற்றின் பங்களிப்பினது உள்ளார்ந்த ஆற்றல், குறிப்பாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் தெளிவாக எடுத்துக்காட்டப்படுகிறது (கொன்சேல்ஸ், ஹோம்ஸ் மற்றும் லோரா, 2014).

வரைபடம் சி.கு. 4.1

நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் மற்றும் பாரிய நிறுவனங்களின் சராசரிப் பங்குகள் (சதவீதம்)




*மூலம்:* நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சி நாட்டு குறிகாட்டிகள் பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனம் (கொன்சேல்ஸ், ஹோம்ஸ் மற்றும் லோரா 2014) 2019 இலிருந்து புதிய தரவுகள் நுண்பாக, சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சி பொருளாதார குறிகாட்டிகளின் சிறிய நடுத்தர தொழில்முயற்சி நிதியியல் மன்றத்தில் கிடைக்கின்றன (https://www.smefinanceforum.org)[1]

பொதுவாக, நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் சமூகக் கொத்தணியின் கிராமிய மற்றும் தாழ்ந்த வருமான துறைகள் உட்பட அனைத்து வடிவங்களிலும் பரந்து காணப்படுவதுடன், அத்தகைய நிறுவனங்களில் பெரும்பங்கு முறைசாரா நிறுவனங்களாகக் காணப்படுகின்றன. தோற்றம்பெற்றுவரும் நாடுகளில் ஏறத்தாழ 365 - 445 மில்லியன் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் காணப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ள வேளையில், அத்தகைய நிறுவனங்களில் நான்கில் மூன்று பங்கு முறைசாரா நிறுவனங்களாகக் காணப்படுகின்றன. (பன்னாட்டு தொழிலாளர் அமைப்பு 2016). நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் குறைந்த வருமான குடும்பங்களின் வருமான மட்டங்களை அதிகரிப்பதற்குப் பங்களிப்பதுடன் இது வருமானப் பங்கீட்டில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகள் குறைவடையவும் பங்களிக்கிறது. மேலும், அவற்றின் சிறிய அளவின் காரணமாகவும் வாடிக்கையாளரின் செறிவுமிகுந்த வியாபார மாதிரியாகவும் விளங்குவதனால், சிறிய வியாபாரங்கள் மிக நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்தனவாகவும் சூழலில் ஏற்படும் மாற்றங்களுக்கு வளைந்து கொடுக்கும் தன்மை கொண்டிருப்பதன் மூலம் பொருளாதாரத் தோற்றப்பாட்டில் ஏற்படும் மாற்றங்களுக்குச் சிறந்த முறையில் ஈடுகொடுப்பனவாகவும் காணப்படுகின்ற வேளையில், தொழில்நுட்பத்தில் காணப்படும் புதிய முன்னேற்றங்களை விரைவில் பின்பற்றக்கூடிய ஆற்றலைக் கொண்டிருப்பதனை எடுத்துக்காட்டுவனவாகவுமுள்ளன. ஆகவே, நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் பொருளாதாரமொன்றின் தாக்குப்பிடிக்கும் தன்மையினை குறிப்பிட்டளவிற்கு மேம்படுத்துமென்பதுடன் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் வழிவகுக்கும்.

### வளர்ச்சியைத் தூண்டுபவைகளாக நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள்

இறுதியில், நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் பாரிய நிறுவனங்களாக பரிணாமமடையும் என்பதனைக் கருத்திற்கொள்கையில், பொருளாதார வளர்ச்சிக்கான அவற்றின் பங்களிப்பு தவிர்க்க முடியாததாகக் காணப்படுகிறது. கண்டறியப்பட்ட விடயங்களும் அவதானிப்புக்களும் நாட்டிற்கு நாடு வேறுபட்ட போதும், நுண்பாக, சிறிய நடுத்தரளவு மற்றும் தொழில்முயற்சிகளின் முக்கியத்துவத்திற்கும் நாடொன்றின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்குமிடையே நேர்க்கணியமான தொடர்புகள் காணப்படுவதனை நிரூபிப்பதற்கு கணிசமான புள்ளிவிபரச் சான்றுகள் காணப்படுகின்றன. நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் தொழில் வழங்குநராக, வளர்ச்சியைத் தூண்டுபவராக, பாரிய நிறுவனங்களுக்கான நன்னிலமாக, புத்தாக்கங்களுக்கான வசதியளிப்பவராக தேசிய பொருளாதாரத்திற்கு முக்கியமான பங்களிப்பாளராக விளங்குவதன் மூலம் அனைத்தையுமுள்ளடக்கிய சமச்சீரான வளர்ச்சிக்கு இட்டுச்செல்வதாகக் காணப்படுகிறது.

**பாரிய நிறுவனங்கள் வளர்ச்சி பெறுவதற்கான நன்னிலம்:** வெற்றிபெற்ற பெரும்பாலான பொருளாதாரங்கள் பாரிய மற்றும் சிறிய நிறுவனங்கள் இரண்டையும் கொண்ட ஆரோக்கியமான கலப்பான தன்மையொன்றினை உள்ளடக்கியிருந்தன. பாரிய நிறுவனங்கள் உண்மையில் கூடியளவு உற்பத்தித்திறன் கொண்டனவாகவும் மூலதனச் செறிவினைக் கொண்ட செயற்றிட்டங்களில் முதலீடு செய்வதற்கான இயலாற்றலைக் கொண்டனவாகவும் பாரியளவில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கு வசதியளிப்பதாகவும் விளைவு வளர்ச்சிப் பிரிவுகளுக்கு புதிய அறிவினைப் பங்களிக்கக்கூடிய விதத்தில் அவற்றினை நோக்கி வசதியைத் திருப்புவனவாகவும்

1 சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சி நிதியியல் மன்றத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ள நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சி பொருளாதாரக் குறிக்காட்டிகளின் தரவுத்தளம் 2019இலிருந்தான தரவினை அடிப்படையாகக் கொண்டதுடன் (https://www.sas.com/en_us/insights/big-data/what-is-big-data.html) இது 176 நாடுகளிலுள்ள பதிவுசெய்யப்பட்ட நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் இரண்டாந்தரத் தரவினை உள்ளடக்குகிறது. கிடைக்கத்தக்க பிந்திய ஆண்டிற்கான தகவல்கள் பரிசீலனையில் கொள்ளப்பட்டுள்ளதுடன் இது எல்லா நாடுகளுக்கும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. மூலவளங்களிலும் நேரத்திலும் காணப்படும் வேறுபாடு காரணமாக தரவுகள் நியமப்படுத்தப்படவில்லை. இதன் காரணமாக நாடுகளுக்கிடையிலான ஒப்பீடு ஓரளவிற்கு மட்டுப்படுத்தப்படுகிறது. கிடைப்பனவின் அடிப்படையில், சராசரி பெறுமதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு பயன்படுத்தப்பட்ட தரவுப் புள்ளிகளின் எண்ணிக்கை தொழில்நிலை பங்குகளுக்கு 80 ஆகவும் பெறுமதிகூட்டப்பட்ட பங்குகளுக்கு 38 ஆகவும் காணப்படுகிறது.

காணப்படுகின்றன. மறுபுறுத்தல் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் அத்தகைய பாரிய நிறுவனங்கள் வளர்வதற்கான நன்னிலமாகத் தொழிற்படுவதன் மூலம் முக்கிய பங்கொன்றினை ஆற்றுவதன் வாயிலாக வழங்கல் சங்கிலியை விரிவுபடுத்துவதன் மூலம் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் வியாபாரம் மேம்படுத்தப்படுகிறது. மிக நவீனத்துவமான உலகின் பாரிய இராட்சத வியாபார நிறுவனங்களான சாம்சுங், அப்பிள், மைக்ரோசொவ்ற், பேஸ்புக் போன்றவை அவற்றின் தொழிற்பாடுகளைச் சிறிய வியாபாரங்களாக ஆரம்பித்து தற்போதைய அவற்றின் நிலைக்கு அபிவிருத்தி செய்திருப்பது எந்தவொரு அளவிற்கும் மாற்றியமைத்துக் கொள்ளக்கூடியவாறான உள்ளார்ந்த வளத்தினை நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் கொண்டிருப்பதனையும் இறுதியில் தொடர்பான தேசிய மற்றும் பிராந்திய பொருளாதாரங்களுக்குத் தூண்டுதலளிப்பனவாக இருப்பதனையும் எடுத்துக்காட்டுகின்றன. மேலும், ஆரோக்கியமான நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சித் துறையொன்று நாட்டின் பொதுமக்களிடையே தொழில்முயற்சியாண்மைத் தேர்ச்சியை மேம்படுத்தப் பங்களிக்க முடியும். இதன் மூலம் நீடித்துநிலைத்திருக்கத்தக்க வளர்ச்சிக்கு முற்தேவைப்பாடாக விளங்கும் மனித மூலதனத்தினைப் பெருக்க முடியும்.

**நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் தொழில்நிலையினையும் பொருளாதாரமொன்றிலுள்ள ஒட்டுமொத்த வெளியீட்டினையும் அதிகரிக்கின்றது:** நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளில் பாரிய பிரிவு குறிப்பிடத்தக்களவு பாரிய எண்ணிக்கை கொண்ட தொழில்முயற்சிகளுடன் தொடர்புபட்டனவாக இருப்பனதால் குடித்தொகையில் பெரும் பங்கினருக்கு தொழில் வாய்ப்பினையும் வழங்குகிறது. இதன் மூலம் இது பொதுமக்களின் செலவிடல் சக்தியை அதிகரித்து, நுகர்வினைத் தூண்டி, ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சியையும் உத்வேகப்படுத்துகிறது. நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் பொருளாதாரத்தின் பல்வேறு துறைகள் முழுவதிலும் பரந்து காணப்பட்டமையின் காரணமாக பெரும் எண்ணிக்கையான மக்களுக்கு வலுவூட்டுவதுடன் சமத்துவமின்மை குறைவடையவும் பங்களிக்கிறது. இந்நிறுவனங்கள் நீடித்துநிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தி இலக்குகளை எய்துவதில் முக்கியமானதொரு வகிபாகத்தினைக் கொண்டிருப்பதுடன் அதன் வாயிலாக தொடர்பான பொருளாதாரம் நீடித்துநிலைத்திருக்கக்கூடிய வளர்ச்சியைப் பதிவுசெய்வதற்கும் ஆதரவளித்தது. மேலும், நீடித்துநிலைத்திருக்கும் அபிவிருத்தி இலக்கின் சாதனையொன்றாகப் பொதுவாக நாட்டின் சாத்தியமான தோற்றப்பாடொன்றினை வழங்குவதன் மூலம் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் துறையானது, முதலீட்டாளர் மனோபாவத்தினை மேம்படுத்துவதன் மூலம் பொருளாதாரத்திற்கு ஆதரவளிப்பதற்கு மறைமுகமான பங்களிப்பொன்றை ஆற்றுகிறது.

**நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள், நிறுவனங்களிடையே போட்டித்தன்மையினை அதிகரிக்கின்றன:** நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் சிறிய பெறுமதிகூடிய நிலைகளை முன்னாய்வுகளை அடையாளம் காண்பதன் மூலம் அவை தொடர்பான வியாபாரச் சூழல்களில் போட்டித்தன்மையினை அதிகரிக்கின்றன. இயலுமைப்படுத்துகின்ற சூழலொன்றின் கீழ், நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளினால் உருவாக்கப்பட்ட போட்டித்தன்மையின் அதிகரித்த மட்டங்கள் நீடித்துநிலைத்திருக்கும் வளர்ச்சிப் பாதையின் இன்றியமையாத மூலமொன்றாக விளங்கும் புதிய புத்தாக்க யோசனைகளை ஊக்குவிக்கும். பகிரப்பட்ட பயணங்கள் மற்றும் வீடுகளிலேயே தங்கியிருப்பதற்கு வசதியளிக்கும் எயார்நப் போன்ற புதிய யோசனைகளுக்குக் கிடைத்த அண்மைய வெற்றிகள் மற்றும் அதேபோன்ற பல்வேறுபட்ட முறைமைகள் பின்பற்றப்பட்டமை நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் புத்தாக்க இயலாற்றலுக்கான சான்றுகளையும் வழமையாக பாரிய பாரம்பரிய நிறுவனங்களின் பகுதியொன்றாக இராத பெரும் எண்ணிக்கையான ஆர்வலர்களின் வாழ்க்கையை எவ்வாறு உயர்த்த முடியும் என்பதற்கான சான்றுகளையும் அவைகளால் வழங்க முடியும்.

**அபிவிருத்தியடைந்து வருகின்ற மற்றும் தோற்றம்பெற்று வருகின்ற பொருளாதாரங்களில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் முக்கியத்துவம்**

அபிவிருத்தி செய்முறைக்கான நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் பங்களிப்பு தோற்றம் பெற்று வருகின்ற மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்களில் மிக முக்கியமானவையாகும். ஏனெனில் அவை நீடித்து நிலைத்திருக்கும் அபிவிருத்தி மற்றும் புத்தாக்க வசதிப்படுத்தல்களின் ஊடாக வறுமை ஒழிப்பின் மீது காத்திரமான பங்களிப்பினை ஆற்றுவதேயாகும். உலக வங்கியின் மதிப்பீடுகளின் படி வளர்ந்துவரும் குடித்தொகையினருக்கு வசதியளிக்கும் பொருட்டு 2030 அளவில் ஏறத்தாழ 600 மில்லியன் வேலை வாய்ப்புக்கள் தேவைப்படுகின்றன. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் குடித்தொகை வளர்ச்சியில் காணப்படும் உயர்ந்த மட்டங்களைக் கருத்திற் கொள்கையில், தொழில் வழங்குநர் என்ற ரீதியில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் வகிபாகம் மிக முக்கியத்துவம் வாய்ந்தனவாக மாறியிருக்கின்றன. இது தொடர்பில், நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் பொதுவாக கூடியளவிற்கு தொழில்செறிவு கொண்டனவாகவும் அபிவிருத்தியடைந்து வருகின்ற மற்றும் தோற்றம்பெற்ற வருகின்ற நாடுகளின் பாரிய தொழிற்படையினை ஈர்த்துக் கொள்ளக்கூடிய உள்ளார்ந்த வளங்களைக் கொண்டிருப்பவையாவும் காணப்படுகின்றன. மேலும், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் பெண்களின் தொழிற்படைப் பங்கேற்பினை மேம்படுத்த உதவும் குறைப்பயன்பாட்டினைக் கொண்ட இயற்கை மூலவளங்களைக் காத்திரமான முறையில் பயன்படுத்தவும் மற்றும் பல்வேறுபட்ட துறைகளுக்குமிடையே பொருளாதார நடவடிக்கைகளைப் பன்முகப்படுத்துவதற்கும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளைப் பயன்படுத்த முடியும். அதேநேரம், இயலுமைப்படுத்துகின்ற நிபந்தனைகளைக் கருத்திற் கொள்கையில், நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் புத்தாக்க இயலளவு, வளர்ச்சி தேக்கமடைவதனைத் தவிர்ப்பதற்கு அபிவிருத்தியடைந்து வருகின்ற மற்றும் தோற்றம்பெற்று வருகின்ற பொருளாதாரங்களுக்கு உதவமுடியும் என்பதுடன் உயர்ந்த வருமானம் பெறும் நாடுகளாக அவை உயர்வடையவும் அவர்களை இயலுமைப்படுத்தும். கடந்த ஒரு சில தசாப்தங்களாக, தொடர்பான வியாபார சூழல்களில் போட்டித்தன்மையுடையனவாக இருப்பதற்கு புத்தாக்கம் தேவைப்படுகின்ற நாடுகளான கொரியா, கொங்கொங், மலேசியா, இந்தோனேசியா, தாய்லாந்து போன்ற தென்கிழக்காசிய நாடுகளினால் ஆரோக்கியமான வளர்ச்சி வீதங்கள் பதிவுசெய்யப்பட்டமைக்கு நுண்பாக, சிறிய

2

மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் தூண்டுதல்களே காரணமாகும் என வாதிடப்படுகிறது (ஆசியான் உற்பத்தியாக்க அமைப்பு 2015).

**நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளினால் எதிர்நோக்கப்படும் சவால்கள்**

குறிப்பிட்ட சில பண்புகள், உதாரணமாக, நுண்பாக, சிறிய, நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் சிறிய அளவு சில துறைகளைக் பொறுத்தவரை அனுகூலமானவையாக இருக்கக்கூடும். நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் தன்மை சில சமயங்களில் பிரச்சனைக்குரியதாக மாறி கீழே ஆராயப்படுகின்றவாறு கணிசமான சவால்களுக்கு இட்டுச்செல்லலாம் என்பதுடன் இறுதியில் பாரிய நிறுவனங்களுடன் ஒப்பிடுகையில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் குறைந்த உற்பத்தித்திறனுக்கும் வழிவகுக்கும்.

**நிதியினை அணுகுவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட வசதி:** அநேகமான நாடுகளில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளினால் எதிர்நோக்கப்படும் முக்கிய தடைகளிலொன்றாக நிதியினை அணுகுவதில் காணப்படும் இடர்ப்பாடுகள் காணப்படுகின்றன. ஆய்வுகளில் நிரூபிக்கப்பட்டவாறு, நிதியினைப் பெறுவதற்கு காணப்படும் அத்தகைய வரையறைகள் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் வளர்ச்சிக்கு முக்கிய தடையாகத் தொடர்ந்தும் காணப்படுகின்றது. இதன் விளைவாக, இந்நிறுவனங்களில் பெரும்பாலானவற்றிற்கு மூலதனச் செறிவுமிக்க செயற்றிட்டங்களை மேற்கொள்வது கடினமாகக் காணப்படுகின்றது. முறைசார்ந்த நிதியியல் நிறுவனங்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் இடர்ப்பாடுகளுக்கு எடுத்துக்காட்டப்படுகின்ற காரணங்கள் மற்றைய விடயங்களுடன் சமச்சீரற்ற தகவல்கள் பிணையுறுதிகளின் மட்டுப்படுத்தப்பட்ட கிடைப்பனவு மற்றும் குறைந்த தரம், நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் குறைந்த நிதியியல் அறிவு, கடமை தவறும் வீதம் உயர்வாக இருத்தல் மற்றும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளை மதிப்பிடுவதில் கடன் வழங்குபவர்களின் நிபுணத்துவம் குறைவாக இருத்தல் என்பனவற்றையும் உள்ளடக்குகின்றன. நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளிற்குக் காணப்படும் இவ்வரையறைகளின் விளைவாக வங்கிகளுக்கூடாக நிதியிடலைக் குறிப்பாக, செயற்றிட்ட நிதியிடலைப் பெறுவது, அதுவும் பிணையுறுதியின்றி பெறுவது இடர்ப்பாடானதாக மாறியிருக்கிறது.

**மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரத் தேர்ச்சி மற்றும் முக்கிய ஊழியர்களை நிரந்தரமாக வைத்திருக்கும் இயலாற்றல்:** எந்தவொரு வியாபார முயற்சியின் வெற்றிக்கும் தவிர்க்க முடியாத கூறாக விளங்கும் நிதி, கணக்கீடு, வரி விதிப்பு, மனிதவள முகாமைத்துவம், சந்தைப்படுத்தல் போன்றவை நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளில் அவதானிக்கப்பட்ட முக்கிய பிரச்சனைகளாகத் தொடர்ந்தும் காணப்பட்டன. மேலும், நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் இயல்பாகவே பாரிய இழப்புக்களைக் ஈர்த்துக் கொள்வதற்குப் போதுமான தாங்கிருப்புக்களைக் கொண்டிருப்பதில்லை. எனவே, அவை வியாபார சுழற்சி மற்றும் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு துறைகளிலிருந்து தோன்றுகின்ற அதிர்வு என்பனவற்றினால் உயர்ந்தளவிற்குப் பாதிக்கப்படும் தன்மையினைக் கொண்டிருக்கின்றன. முக்கிய ஊழியர்களை நிரந்தரமாக வைத்திருக்க இயலாமை நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் முன்னேற்றத்தினைத் தடுக்கின்ற கரிசனைக்குரிய விடயமாக நோக்கப்படுகிறது. அநேக சந்தர்ப்பங்களில், நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளினால் வழங்கப்படும் தொழில் வாய்ப்புக்கள் தற்காலிகமாக இருக்குமென்பதனால் அது ஊழியர்கள் வேறு தொழில் வாய்ப்புக்களை நாடிச் செல்வதற்குத் தொடர்ச்சியாகத் தூண்டுகிறது. அதேநேரம் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் குறிப்பாக தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களுக்குப் பாரிய நிறுவனங்களினால் வழங்கப்படும் சம்பளம் மற்றும் நன்மைகளுடன் போட்டியிட முடியாமலிருப்பது உயர்ந்த தொழிலாளர் புரள்வுகளைத் தோற்றுவிப்பதுடன் சிறிய வியாபாரங்களின் அபிவிருத்தியைத் தூண்டும் இயலாற்றலைக் கொண்ட அத்தகைய தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களை நிரந்தரமாக வைத்திருப்பதையும் இயலாததாக்குகிறது. இதன் விளைவாக, அத்தகைய வியாபாரங்களில் பெரும்பாலானவை சொந்தக்காரர்களினாலேயே முகாமை செய்யப்பட்டு தொழிற்படுத்தப்படுவதுடன் இதன் விளைவாக வெற்றிகரமான தொழில்முயற்சிகளில் கூட முகாமைத்துவம், ஆளுகை, நிதி மற்றும் உறுதித்தன்மை என்பனவற்றில் பிரச்சனைகள் ஏற்படுகின்றன.

**ஒழுங்குமுறைப்படுத்தல் தடைகள் மற்றும் முரண்பாடான கொள்கைகள்:** அநேகமான நாடுகளில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் வியாபாரப் பிரிவு, தரம் மற்றும் சூழல் சார்ந்த தரங்கள், அறிக்கையிடும் தேவைப்பாடுகள் வரி விதிப்பு போன்ற பல்வேறுபட்ட அம்சங்கள் தொடர்பில் காணப்படும் ஒழுங்குமுறைப்படுத்தல் தடைகளின் காரணமாக இடர்ப்பாடுகளை எதிர்நோக்குகின்றன. எனினும், நாடுகளைப் பொறுத்து, இவ்விடர்ப்பாடுகளும் அவற்றின் தாக்கமும் வேறுபடுகின்றன. உதாரணமாக, கடந்த ஒரு தசாப்த காலமாக அல்லது அதற்கும் மேலாக பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான அமைப்பு நாடுகளின் ஒழுங்குமுறைப்படுத்தல் தடைகள் பெருமளவிற்கு குறைக்கப்பட்டிருந்த போதும் அத்தகைய தடைகள் தொடர்பான சிக்கல் தன்மை நாடுகள் முழுவதிலும் தொடர்ந்தும் பரந்து காணப்படுகிறது (பொ.ஒ.அ.நா 2018). தேர்ச்சி மற்றும் நிதியின் கிடைப்பனவு குறைவாக உள்ளமையின் காரணமாக, உண்மையில் சிறிய வியாபாரங்கள் ஒழுங்குமுறைப்படுத்தலின் சிக்கலான தன்மை பற்றி காத்திரமான முறையில் ஆராய்வதற்கான இயலாற்றலைக் கொண்டிருப்பதில்லை. இதன் விளைவாக, வியாபாரம் செய்யும் சூழலில் காணப்படும் ஒட்டுமொத்த வரையறைகள் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளை பல்வேறுபட்ட இடர்ப்பாடுகளுக்கு இட்டுச்செல்லக்கூடும். குறிப்பாக, அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் இவை ஒப்பீட்டு ரீதியில் பலயீனமான நிறுவன ரீதியான கட்டமைப்பில் தொழிற்படுவதனால் இத்தகைய நிலைமைகளைக் காணமுடியும். மேலும், நிலையான கொள்கைகள் இல்லாமையும் குறைந்த வெளிப்படைத் தன்மையும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளினால் எதிர்நோக்கப்படும் இவ்வொழுங்குமுறைப்படுத்தல் தடைகளை மேலும் அதிகரிக்கின்றன.

**குறைந்த சந்தைப் பங்கு மற்றும் சந்தையை அணுகும் மட்டுப்படுத்தப்பட்ட தன்மை:** சந்தைப் பங்குகள் மற்றும் சந்தைகளை அணுகுகின்ற தன்மைகள் குறைவாக இருப்பதன் காரணமாக நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் வருமானமளிக்கும் வழிகளைப்

பேணுவதில் சவால்களை எதிர்நோக்குவதுடன் பொதுவாக குறைந்த விற்பனைகளாலும் பாதிக்கப்படுகின்றன. இதற்கு மற்றைய காரணிகளுடன் சேர்ந்து பாரிய விளம்பரப்படுத்தல் வரவுசெலவுத் திட்டத்திற்கான பெருமளவு தொகையினைச் செலவிட முடியாமலுள்ளமை, மட்டுப்படுத்தப்பட்ட வலையமைப்பு மார்க்கங்கள் சமூக வலைத்தளங்களின் மட்டுப்படுத்தப்பட்ட பயன்பாடு, மட்டுப்படுத்தப்பட்ட இணையவழி பிரசன்னம் மற்றும் புதிய தொழில்நுட்பவியலைப் பின்பற்றுவதில் காணப்படும் பலயீனங்கள் போன்ற பல்வேறு காரணங்கள் ஒப்பீட்டு ரீதியில் குறைவான சந்தை அணுகுவசதிகளுக்கு இட்டுச்செல்வதற்குப் பங்களிக்கின்றன.

**நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் தொடர்பான போதுமானதற்ற தகவல்கள் மற்றும் தரவுகள்:** அநேகமான நாடுகளில், குறிப்பாக அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்களில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் தொடர்பான தகவல்களைப் பெறுவது உண்மையில் இடர்ப்பாடானதாகக் காணப்படுகிறது. தகவல்களை வெளியிட வேண்டியிருக்கின்ற பாரிய நிறுவனங்களைப் போலன்றி, குறிப்பாக, நிதியியல் தரவுகள் தொடர்பில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் வழமையாக அத்தகைய தேவைப்பாடுகளைக் கொண்டிராமையினால், தகவல்கள் தனிப்பட்ட முறையில் வைத்திருக்கப்படுவதனால் கடன் வழங்குபவர்கள் நம்பகமான தகவல்களைப் பெறுவதற்கு அவர்களுக்கு மேலதிகச் செலவுகள் ஏற்படுவதன் காரணமாக அது அவர்களை நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளுக்கு கடன் வழங்குவதனை ஊக்கமிழக்கச் செய்கிறது (ஜொசினோ மற்றும் ரகிசிசடேவ் - கெசாறி 2016). இது நிதியியல் நிறுவனங்கள் இவ்வியாபாரத்தினை மதிப்பிடுவதனை தடுப்பது மட்டுமன்றி நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் துறையின் கிடைப்பனவு, தரம் மற்றும் நேரகாலம் என்பனவற்றினையும் மட்டுப்படுத்தி விடுமென்பதனால் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் அபிவிருத்திக்கும் முட்டுக்கட்டையாக அமைகிறது.

**உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கமும் ஏனைய நிகழ்வுகளும்:** உலகம் முழுவதிலுமுள்ள நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் போது ஏற்பட்ட இடர்ப்பாடுகளைச் சகித்துக் கொள்ள வேண்டியிருந்ததுடன் இது பாரிய வருமான இழப்புக்களை உருவாக்குவதுடன் நிச்சயமற்ற தன்மையினையும் அதிகரிக்கிறது. அரசாங்கங்களினாலும் ஏனைய அதிகாரிகளினாலும் முன்னொருபோதுமில்லாத அளவிற்கு கொள்கை ஆதரவுகள் வழங்கப்பட்டமையானது இவ்வியாபாரங்கள் இவ்விடர்ப்பாடான காலப்பகுதியில் தமது வியாபாரங்களைக் கொண்டு நடத்த உதவிய போதும் அவை இன்னமும் முழுமையாக மீட்சிபெறவில்லை. ருஷியா - உக்ரேன் மோதல் காரணமாக உலகளாவிய அரசியல் தோற்றப்பாடுகளில் காணப்படும் நிச்சயமற்ற தன்மை நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளுக்கு, குறிப்பாக பெறுமதிச் சங்கிலி மற்றும் ஏற்றுமதி வியாபாரங்களுடன் இணைக்கப்பட்டுள்ளவைகளுக்கும் சுற்றுலா போன்ற பணிகள் வர்த்தகத்திலுள்ளவற்றுக்கும் இடர்ப்பாடுகளைத் தோற்றுவிக்கக்கூடும்.

**பால் அடிப்படையிலான சமமின்மைகள்:** நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளிலுள்ள பெண் தொழில்முனைவோரின் பங்கேற்பு நாட்டிற்கு நாடு வேறுபடுவதனைக் காணமுடியும். முறைசார்ந்த சிறிய வியாபாரங்களில் ஏறத்தாழ மூன்றிலொரு பங்கு பெண்களுக்குச் சொந்தமாக இருப்பதனை ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்ற போதும், இப்பங்கானது கிழக்காசியா மற்றும் பசுபிக்கின் 40 சதவீதத்திற்கும் கூடுதலான உயர் பங்கிலிருந்து தென்னாசியாவின் 10 சதவீதத்திற்கும் குறைவான பங்கு வரை வேறுபடுகிறது (ப.நி. கூட்டுத்தாபனம் 2014). சிறிய வியாபாரங்களினால் எதிர்நோக்கப்படும் பொதுவான சவால்களுக்குப் புறம்பாக பெண்களுக்குச் சொந்தமான நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் முட்டுக்கட்டைகள், கலாச்சார பாரபட்சங்களின் மீது தங்கியிருக்கும் தன்மை மற்றும் ஒப்பீட்டு ரீதியில் அளவு மற்றும் வலையமைப்புக்களின் குறைந்தமட்டம் என்பனவற்றைக் கூடுதலாக எதிர்நோக்குகின்றன. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கமும் பெண்களுக்குச் சொந்தமான நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில் முயற்சிகளில் விகிதசமமற்ற விதத்தில் காணப்பட்டமையினை அவதானிக்க முடிந்ததுடன், இதில் பெண்களுக்குச் சொந்தமான வியாபாரங்கள் உலகளாவிய நோய்த் தொற்றினால் பாதிக்கப்பட்டிருந்தமையினைக் காணமுடிந்ததுடன், தாக்குப்பிடிக்கக்கூடியதாகவும் அவை இருக்கவில்லை போல் தெரிகிறது (ஐக்கிய நாடுகள் 2021). எனினும், கிடைக்கத்தக்கதாகவுள்ள சான்றுகள் பெண்களுக்குச் சொந்தமான நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் சிறந்த செயலாற்றத்தினைக் கொண்ட துறையாக இருந்த போதும் நிதியியல் நிறுவனங்களினால் அவை அடிக்கடி கவனிக்கப்படாது விடப்படுகின்றன (ப.நி.கூட்டுத்தாபனம் 2014). பெண்கள் குடும்பங்களிலும் சமூகங்களிலும் மீள் முதலீடு செய்வது கூடுதலாகவுள்ளமை கண்டறியப்பட்டுள்ளமையினால் பெண்களின் தொழில்முயற்சிகள் அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் சிறந்த நிலையில் காணப்படுகின்றன (பன்னாட்டு வர்த்தக மையம் 2014). எனவே, அனைத்தையுமுள்ளடக்கிய வளர்ச்சியை எய்துவதற்கு பாலியல் அடிப்படையிலான சமச்சீரற்ற தன்மையினைக் கட்டுப்படுத்துவதற்குத் தொடர்ச்சியான கடப்பாடுகளை எடுப்பது முக்கியமானதாகும்.

### நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறையினை மேம்படுத்துவதற்கு உலகளாவிய ரீதியில் பின்பற்றப்பட்ட வெற்றிகரமான உபாயங்கள்

நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில் முயற்சிகளினால் எதிர்நோக்கப்படும் பொதுவான பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவதற்கு வேறுபட்ட நாடுகளினால் வேறுபட்ட உபாயங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

**நிதியிடல் இடர்ப்பாடுகளைக் கட்டுப்படுத்தல்:** அநேகமான நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் முறைசார்ந்த மார்க்கங்களிலிருந்து நிதிகளைப் பெற்றுக்கொள்வதில் இடர்ப்பாடுகளைக் கொண்டிருந்தமையினால் இவ்வரையறைகளைக் குறைப்பதற்கான உபாயங்கள் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் வளர்ச்சிக்குப் பங்களிக்க முடியும். மேலும், சிறிய தொழில்களினால் எதிர்நோக்கப்பட்ட வேறு பல சவால்களும் நிதியிடல் இடர்ப்பாடுகளின் விளைவாக குறைந்த இயலாற்றலுடன் இணைக்கப்பட்டிருந்தன. இது தொடர்பில் வேறுபட்ட நாடுகளினால் மேற்கொள்ளப்பட்ட வெற்றிகரமான உபாயங்களில் சில நிதியியல் நிறுவனங்களினால் பிணையுறுதியை அடிப்படையாகக் கொண்ட கடன்வழங்கலின் வரையறைகளைக் கட்டுப்படுத்துகின்ற கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களை அறிமுகப்படுத்தல் (உதாரணமாக

யப்பானிலுள்ள பல்வேறுபட்ட கொடுகடன் உத்தரவாதக் கூட்டுத்தாபனங்கள், கொரியாவின் கொடுகடன் உத்தரவாத நிதியம், கொரியாவிலுள்ள கொரிய தொழில்நுட்பவியல் நிதிக் கூட்டுத்தாபனம், மலேசியாவிலுள்ள கொடுகடன் உத்தரவாதக் கூட்டுத்தாபனம், மலேசியா பேர்காட் போன்றன). இலாபம் சாராத நோக்கத்தினைக் கொண்ட உயர் இடர்நேர்வினைக் கொண்ட செயற்றிட்டங்களுக்கு கடன் வழங்குவதன் மீது சிறப்பியல்பு வாய்ந்த அபிவிருத்தி வங்கிகளை நிறுவுதல் (உதாரணமாக சீனாவிலுள்ள சீன அபிவிருத்தி வங்கி, ஜேர்மனியிலுள்ள கிறடிட்ரான்சோல்ட் புர் வீடெடுப்பூ (கேஎவ்டபிள்யூ பான்கென்ரூபே) கொரியாவிலுள்ள கொரிய அபிவிருத்தி வங்கி, போன்றவை), சிறிய வியாபாரங்களுக்கு முறைசார்ந்த நிதியியல் நிறுவனங்களினால் கடன் வழங்கப்படுவதனைத் தூண்டுவதற்கு கடன்வழங்கல் இலக்குகளைத் தூண்டுதல் போன்ற கொள்கை வழிமுறைகளை நடைமுறைப்படுத்தல்; பல்தேசிய முகவர்களூடாக கொடை நிதியிடல்; நிதியிடலை ஏற்படுத்தல், ஏன்ஜல் முதலீட்டாளர் போன்ற நிதியிடல்கள் மாற்று ஏற்பாட்டு மார்க்கங்களுக்கான அணுகு வசதிகளை மேம்படுத்தல் மற்றும் கடன்வழங்குநர்களினால் தேவைப்படுத்தப்பட்ட தகவல்களுடன் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் தரவுத்தளத்தினை அபிவிருத்தி செய்தல் போன்ற சீரற்ற தகவல்களைக் குறைப்பதற்கான வழிமுறைகள் (உதாரணமாக, பெரும் எண்ணிக்கையான சிறிய வியாபாரங்களின் நிதியியல் தகவல்களுடன் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளுக்கு கடன்வழங்கலின் வினைத்திறனை அதிகரிக்கும் நோக்குடன் யப்பானின் கொடுகடன் இடர்நேர்வுத் தரவுத்தளம் நிறுவப்பட்டது).

**ஆதரவளிக்கின்ற வெற்றியாளர்கள்:** நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் நிதியியல் இடர்ப்பாடுகள் பற்றிய கரிசனைகளைக் கட்டுப்படுத்துவதற்குப் புறம்பாக, இத்துறையிலுள்ள நிறுவனங்களுக்கு ஒட்டுமொத்த உதவிகளை வழங்குவதற்காக உலகளாவிய ரீதியில் வேறு பல நிகழ்ச்சித்திட்டங்களும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. உதாரணமாக, கொரியா போன்ற சில நாடுகள் 'வெற்றியாளர்களைத் தெரிவுசெய்யும் அணுகுமுறை' இனைப் பயன்படுத்துகின்றவிடத்து, தேசிய முன்னுரிமைகளுடன் சேர்த்து, வளர்ச்சி வாய்ப்பு மற்றும் அமைப்பியல் ரீதியான இயலாற்றலின் வளர்ச்சியுடன் கைத்தொழில்களுக்கும் வியாபாரங்களுக்கும் உதவியளிப்பது இலக்கிடப்படுகிறது. எனினும், இது துணைத் தேர்வு மூலவள ஒதுக்கிற்கு வழிவகுக்கக்கூடுமென்பதனால் அத்தகைய கொள்கைகள் விமர்சனத்திற்குள்ளாகி வருகின்றன. இருப்பினும் கூட, விரும்புகின்ற துறைகளுக்கு மூலவளங்களை வழிப்படுத்தக்கூடியதாக, குறிப்பாக, சந்தைத் தூண்டல் ஒதுக்குகள், வளர்ச்சி வாய்ப்புக்களைக் கொண்ட பிரதேசங்களுக்குச் சென்றடையாத காலப்பகுதியில், இக்கொள்கையினைப் பயன்படுத்த முடியும்.

**கொத்தணிப்படுத்தல் மற்றும் இணைப்புக்களை மேம்படுத்தல்:** உலகளாவிய சந்தை தாராளமயப்படுத்தலும் உலகமயமாக்கலும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளை பிரதிகூலமான நிலைமையொன்றிற்கு இட்டுச்செல்லக்கூடும். ஏனெனில் பன்னாட்டு தொழிற்பாட்டாளர்களுடன் பொருந்தும் விதத்தில் அவர்களின் இயலாற்றல் இருப்பதில்லை. இது தொடர்பில் வியாபார கொத்தணிகளை உருவாக்கி நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள், மலேசியாவிலுள்ளது போன்று கைத்தொழில் இணைப்பு நிகழ்ச்சித்திட்டம் போன்ற பாரிய அமைப்புக்களின் பெறுமதிச் சங்கிலிகளுடன் இணைப்பது. இது பன்னாட்டு வர்த்தகத்தில் போட்டியிடுவதற்கு நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளுக்கு உதவும். மேலும், பாரிய தொழில்முயற்சிகளுக்கும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளுக்குமிடையிலான துணை ஒப்பந்த இணைப்புக்கள் கைத்தொழிலின் உற்பத்தித்திறனை உயர்த்துகின்ற வேளையில் புதிய தொழில்நுட்பங்களை இலகுவாகப் பெற்றுக்கொள்ளல், முகாமைத்துவ முறை, சந்தைப்படுத்தல், உள்ளீட்டு மூலப்பொருட்கள் மற்றும் உற்பத்தி நுணுக்கங்கள் போன்ற நியதிகளில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளுக்கு நன்மைகள் வழங்கப்படுகின்றன (விஜேசிங்க 2011).

**இலக்கிடப்பட்ட ஆதரவு:** தாய்லாந்திலுள்ளது போன்று நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சி ஊக்குவிப்புத் திட்டம் போன்ற தேசிய முன்னுரிமையளித்தல் நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் பொருளாதாரப் பங்களிப்பு உயர்வடையும் என எதிர்பார்க்கப்படுகின்றமையானது (பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்தி அமைப்பு/ ஐரோப்பிய ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கமுறை, 2018) நாடொன்றிலுள்ள நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளுக்கு ஆதரவளிக்கின்ற முயற்சிகளையும் ஒழுங்குமுறைப்படுத்தும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளினால் குறைந்தளவில் பயன்படுத்தப்படும் தகவல் தொழில்நுட்பம் மேம்படுத்தப்பட வேண்டிய முக்கிய துறையாக அடிக்கடி எடுத்துக்காட்டப்படுகின்றது. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் விளைவாக எவ்விதமான மெய்நிகர் பிரசன்னத்தினையும் கொண்டிராத வியாபாரங்கள் கூட வாடிக்கையாளர்களையும் வழங்குநர்களையும் அடைவதற்கு இணையவழிக் கருவிகளை தொடங்குவதற்கான வரவேற்கத்தக்க நிலைமையினைத் தோற்றுவித்திருக்கிறது. எனினும், நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் அவற்றின் வியாபாரங்களுக்குள் தகவல் தொழில்நுட்பச் சாதனங்களையும் பணிகளையும் இணைத்துக் கொள்வதன் மூலம் கூடுதலான நன்மைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய நிலையில் காணப்படுகின்றன. இது தொடர்பில், நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளினால் தகவல் தொழில்நுட்பவியல் அதிகளவில் கைக்கொள்ளப்படுவதனை நோக்கமாகக் கொண்ட இந்தியாவிலுள்ள டிஜிட்டல் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சித் திட்டம் போன்ற நிகழ்ச்சித்திட்டங்கள் வாயிலாக, தகவல் தொழில்நுட்பவியலைப் பயன்படுத்துகின்ற அநுகூலங்கள் தொடர்பில் விழிப்புணர்வுகளை மேம்படுத்துவதன் மூலம் அரசாங்கமும் ஆதரவுக் குழுக்களும் இன்றியமையாத வகிபாகமொன்றினை ஆற்றமுடியும்.[2] பல்புடை கொடை முகவர்களும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் இயலாற்றல் அபிவிருத்திக்கு உதவியளிக்கின்றனர். இதன் மூலம் இத்தொழில்முயற்சிகளின் வியாபாரத் தேர்ச்சி மேம்படுத்துவதற்கு பங்களிக்கப்படுகிறது. மேலும், உலகெங்கிலுமுள்ள பெரும்பாலான அரசாங்கங்கள் மற்றும் சமூகங்களின் காலநிலை மாற்றங்களைக் கட்டுப்படுத்தும் முயற்சிகள் தொடர்பான கடப்பாடுகளைக் கருத்திற்கொள்கையில், 'பசுமை நடவடிக்கைகளில்' ஈடுபட்டுள்ள தொழில்துறைகளும் நீடித்து நிலைத்திருக்கும் வியாபார நடைமுறைகளை ஊக்குவிப்பவர்களும் பல்வேறுபட்ட அரச, தனியார் மற்றும் பல்தேசிய முகவர்களிடமிருந்து ஆதரவினைப் பெற்றுக்கொள்ள முடிகின்ற வேளையில் அவர்கள் மேம்பட்ட சந்தைப் பிரசன்னத்தினையும் அனுபவிக்கக்கூடியதாக இருக்கிறது.

2 நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் அமைச்சு, இந்திய அரசாங்கம்.

ஒட்டுமொத்தமாக, நீடித்துநிலைத்திருக்கும் வளர்ச்சியினை வசதிப்படுத்துகின்ற வழிமுறைகள் வளர்ச்சித் தேக்கநிலையினை நாடுகள் தவிர்ப்பதற்கு அனுமதித்து, நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சித் துறையினது அபிவிருத்திக்கும் வழிவகுக்கிறது. உதாரணமாக, புதியறிவினை விருத்திசெய்வதன் முக்கியத்துவத்துடன் பொருளாதாத்தின் அடிப்படையிலமைந்த அறிவை உருவாக்குவதற்கான முயற்சிகள் கொரிய பொருளாதாரத்தினதும் அதன் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சித் துறையினதும் முக்கிய வெற்றிக் காரணியொன்றாகக் கருதப்படுகிறது (கிறெகறியும் மற்றையவர்களும் 2002). அதேபோன்று, ஜேர்மனிய நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளது வெற்றிக்கான பிரதான உந்து சக்தியாக அறிக்கையிடப்பட்டுள்ள (ஹெர் மற்றும் நெட்டிகோவன், 2018) தொழிற்கல்விப் பயிற்சியினூடாக வியாபாரங்களுடன் தொடர்புடைய திறன்களை விருத்திசெய்வதில் முனைப்புடன் கல்வி முறைமைக்கான மேம்படுத்தல்கள் நவீன உலகமயப்படுத்தப்பட்ட சந்தைகளில் போட்டியிடுவதற்கு அவசியமான திறன்களுடன் வலுப்படுத்தப்பட்ட சிறிய வியாபாரங்களை உருவாக்குவதற்குப் பங்களிக்க முடியும்.

**இலங்கையில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள்[3]**

நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் குடித்தொகையில் பெரும் விகிதத்தினருக்கு தொழில் வாய்ப்பினை வழங்குவதன் மூலம் இலங்கையின் அபிவிருத்திச் செய்முறையில் பெரும்பங்கினை ஆற்றிய வேளையில், மேலே ஆராயப்பட்ட அவற்றின் அபிவிருத்திக்கு பொதுவாக தடையாகவுள்ள அநேக விடயங்கள் இலங்கை நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளினால் எதிர்நோக்கப்படுகின்றன. நாட்டின் பொருளாதார வெளியீட்டிற்கான அவற்றின் முக்கியத்துவம் 50 சதவீதத்திலும்[4] கூடுதலானது என அறிவிக்கப்பட்டிருந்த போதும் இலங்கையின் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளில் பெரும்பாலானவை அவற்றின் உண்மையான உள்ளார்ந்த வளத்தினை இன்னமும் அடையவில்லை. இதற்கு மட்டுப்படுத்தப்பட்டளவிலான இயலாற்றல் (நிதியினை அணுகுவதற்கு மட்டுப்படுத்தப்பட்டளவிலான இணைப்பு) குறைந்தளவிலான தொழில்நுட்பம் பின்பற்றப்படுவது மற்றும் உள்நாடு மற்றும் வெளிநாடு இரண்டுடனுமான பெறுமதிச் சங்கிலியின் மட்டுப்படுத்தப்பட்ட இணைப்புக்கள் என்பன காரணங்களாக அமைந்தன. இத்தொழில்களுக்கு ஆதரவளிப்பதற்கு அரசாங்கத்தினாலும் அரசசாரா அமைப்புக்களினாலும் வேறுபட்ட நேரங்களில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. உதாரணமாக, கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் (2016) நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளுக்கான தேசிய கொள்கைக் கட்டமைப்பு அபிவிருத்தி நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் துறையின் அபிவிருத்திக்கான விபரமான நடவடிக்கைத் திட்டங்களை உள்ளடக்கியிருந்தது. எனினும், அத்தகைய கொள்கைகளின் நடைமுறைப்படுத்தலும் இணைப்பும் தொடர்ந்தும் பலயீனமாக இருந்தமை எதிர்காலத்தில் மேலும் முன்னேற்றங்களைத் தேவைப்படுத்தியது. மத்திய வங்கியும் பிரதேச அபிவிருத்தியின் அதன் முகவர் தொழிற்பாடுகளின் கீழ் சிறு தொழில்களுக்கு ஆதரவளிப்பதில் முக்கியமான வசதிப்படுத்தல் வகிபாகத்தினை ஆற்றியவிடத்து, பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் மற்றும் அநேக மூலவள வழங்குநர்களுடனும் சேர்ந்து நிதி மற்றும் நிதியல்லா ஆதரவுகள் இரண்டும் வழங்கப்பட்டன. அதேவேளை உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட பாரிய கொள்கை ஆதரவுகள் இடர்ப்பாடான காலப்பகுதியில் துறை உறுதியாக இருப்பதற்கு உதவியிருக்கக்கூடும். உலகளாவிய மற்றும் உள்நாட்டு பொருளாதார நடவடிக்கை தொடர்பில் தற்போது நிலவுகின்ற நிச்சயமற்ற தன்மை நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளுக்கு கடுமையான தீங்கினை ஏற்படுத்தலாம் என்பதனால் இது மீட்பு மற்றும் தடுப்புக் கொள்கைகளைத் தேவைப்படுத்துகிறது. முன்னோக்கிப் பார்க்கையில் சவால்மிக்க நேரத்தினூடாக நீடித்ததும் செழிப்பானதுமான நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளுக்குத் தேவையான நீடித்துநிலைத்திருக்கும் ஆதரவினை வழங்கும் பொருட்டு உத்தேச கொடுகடன் உத்தரவாத நிறுவனத்தின் விரைவான முறையில் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் தன்மை இதற்கே உரித்தான சிறப்பு அபிவிருத்தி வங்கியொன்றினை நிறுவுதல் உட்பட 'இயலுமைப்படுத்துநர்' களை நடைமுறைப்படுத்துவதற்குச் சரியான நேரத்திலான வழிமுறைகள் தேவைப்படுகின்றன. பொதுவாக நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளைப் பிரதான தொழில் நீரோட்டச் சூழலுக்கு கொண்டு வரும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளை வளர்ப்பதற்குத் தேசிய தூண்டுதல்களை வழங்கும் விதத்தில் கொள்கை முன்னெடுப்புக்களை இணைப்பது அவசியமாக இருக்கிறது.

3 இலங்கையின் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் தொடர்பான விபரமான ஆய்வு அத்தியாயம் 1இலுள்ள பிரச்சனைகள் மற்றும் கொள்கைகளில் தரப்பட்டுள்ளது.

4 கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு, இலங்கை.

**உசாத்துணைகள்**


1. Asian Productivity Organization (2015). Innovation and SME Financing in Selected Asian Economies.
2. Gonzales, E., Hommes, M. and Laura, M.M. (2014). MSME Country Indicators 2014: Analysis Note.
3. Gregory, G., Harvie, C., and Lee, H.H. (2002). 'Korean SMEs in the 21st Century: Strategies, Constraints, and Performance in a Global Economy', SMEs in a Global Economy Conference - Sustaining SME Innovation, Competitiveness and Development in the Global Economy, 272–290.
4. Herr, H. and Nettekoven, Z.M. (2018). The Role of Small and Medium-Sized Enterprises in Development: What Can be Learned from the German Experience?, Global Labour University Working Paper No. 53.
5. IFC (2014). Women-Owned SMEs: A Business Opportunity for Financial Institutions.
6. International Labour Organization (2016). Role of Finance in Driving Formalization of Informal Enterprises.
7. International Trade Centre (2014). SMEs Drive World Trade and Economic Growth.
8. Ministry of Industry and Commerce (2016). National Policy Framework for Small and Medium Enterprises (SMEs) Development: Action Plan.
9. OECD (2018). Improving the Business Environment for SMEs Through Effective Regulation, Policy Note, 2018 SME Ministerial Conference, OECD.
10. OECD/ERIA (2018). SME Policy Index: ASEAN 2018: Boosting Competitiveness and Inclusive Growth. SME Policy Index, OECD Publishing, Paris/ERIA, Jakarta.
11. United Nations (2021). Micro-, Small and Medium-Sized Enterprises Day, 27 June.
12. Wijesinha, A. (2011). SME Development Strategies for Sri Lanka: Learning Lessons from Neighbouring Countries, Talking Economics, Institute of Policy Studies of Sri Lanka.
13. Yoshino, N. and Taghizadeh-Hesary, F. (2016). Major Challenges Facing Small and Medium-Sized Enterprises in Asia and Solutions for Mitigating Them, ADBI Working Paper Series No. 564.

முறையே 3.5 சதவீதத்தினாலும் 3.0 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்தன. இதனைத்தொடர்ந்து, மொத்த உள்நாட்டுச் செலவினம் 2020இன் 4.6 சதவீதம் கொண்ட சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2021இல் 3.4 சதவீத மிதமான வீதத்தினால் வளர்ச்சியுற்றது. அதேவேளை, நிலையான (2010) விலைகளில் தேறிய வெளிநாட்டுக் கேள்வியானது ஏற்றுமதி அளவுகளில் உயர்வான வளர்ச்சியிலிருந்து நன்மையடைந்து 2021இல் 0.4 சதவீதம் கொண்ட சிறிதளவு சுருக்கத்தினை மாத்திரம் பதிவுசெய்தது. இதன்விளைவாக, நிலையான (2010) விலைகளில் மொ.உ.உற்பத்தி 2020இன் 3.6 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2021இல் 3.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.

### நுகர்வு

**நடப்பு விலைகளில் பொருளாதாரத்தின் மொத்தச் செலவினத்தில் 74.3 சதவீதத்திற்கு வகைகூறும் நுகர்வுச் செலவினமானது நுகர்வோர் செலவிடுவதற்கான விரிபடுத்தப்பட்ட வசதியுடன் நுகர்வுக் கேள்வியில் மீளெழுச்சியினால் ஊக்குவிக்கப்பட்டு 2020இல் பதிவாகிய 2.0 சதவீதம் கொண்ட மிதமான வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் ஆண்டுகாலப்பகுதியில் 9.9 சதவீதம் கொண்ட சாதகமான வீதத்தில் வளர்ச்சியடைந்தது.** நுகர்வுச் செலவினத்தில் வளர்ச்சிக்கு மொத்த நுகர்வுச் செலவினத்தில் 88.0 சதவீதத்திற்கு வகைகூறிய முக்கிய நுகர்வுச் செலவின வகையான தனிப்பட்ட நுகர்வுச் செலவினம் கணிசமான வளர்ச்சியடைந்த அதேவேளை, அநேகமான நுகர்வோர் பொருட்கள் வகைகளில் குறிப்பாக, ஆண்டின் பிந்திய காலப்பகுதியில் உயர்வடைந்த விலைகள் இதற்கு காரணமாக அமைந்தது. அதே சந்தர்ப்பத்தில், அரசாங்க நுகர்வுச் செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021இல் மிதமான வீதத்தில் வளர்ச்சியடைந்தது.

**பொருளாதாரம் திறக்கப்பட்டதைத் தொடர்ந்து நுகர்வோர்கள் செலவிடுவதற்கு ஆர்வம் காட்டியமையுடன் இணைந்து நடப்பு விலைகளில் தனியார் நுகர்வுச் செலவு, 2020இல் 1.0 சதவீத சிறிய வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2021இல் 10.8 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவுசெய்தது.** உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்புபட்ட கட்டுப்பாடுகள் படிப்படியாகத் தளர்த்தப்பட்டமையுடன் இறை அதேபோன்று நாணயக் கொள்கைத் தூண்டல்கள் ஒன்றிணைந்து வாடிக்கையாளர்கள் சந்தைகளுக்குத் திரும்புவதை ஊக்குவித்தது. இது, போக்குவரத்து, உணவகங்கள் மற்றும் விடுதிகள், ஆடைகள் மற்றும் காலணி போன்ற அநேகமான தனிப்பட்ட நுகர்வுச் செலவின வகைகளில் அதிகரிப்புக்களை ஊக்குவித்தது. மேலும், உணவு மற்றும் வெறியமல்லாக் குடிவகைகள், வீடமைப்பு, நீர், மின்வலு, எரிவாயு மற்றும் ஏனைய எரிபொருட்கள், சுகாதாரம் மற்றும் தொலைத்தொடர்பு வகைகள் மீதான தனிப்பட்ட நுகர்வுச் செலவினம் போன்ற அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் பணிகளை உள்ளடக்குகின்ற தனிப்பட்ட நுகர்வுச் செலவின வகைகளும் ஆண்டுகாலப்பகுதியில் விரிவடைந்தன.

**அரசாங்கத்தின் கூட்டான இறுதி நுகர்வு செலவினத்தையும் தனிப்பட்ட இறுதி நுகர்வு செலவினத்தையும் உள்ளடக்குகின்ற நடப்பு விலைகளிலான அரசாங்க நுகர்வுச் செலவினம் 2020இன் 9.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2021இல் 3.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.** சுகாதாரம் மற்றும் கல்வி மீதான அரசாங்க செலவிடலை குறிப்பாக, உள்ளடக்குகின்ற அரசாங்கத்தின் தனிப்பட்ட நுகர்வுச் செலவினம் 2020இல் அறிக்கையிடப்பட்ட 17.8 சதவீதம் கொண்ட உயர்வான வளர்ச்சிக்கு மேல் 2021இல் 1.0 சதவீதத்தினால் மிதமாக விரிவடைந்தது. மேலும், பாதுகாப்பு, அரசாங்க சேவைகள் மற்றும் சமூகப் பாதுகாப்பு போன்ற

அட்டவணை 2.9
மொத்த கேள்வி (அ)

| விடயம் | நடைமுறைச் சந்தை விலைகள் (ரூ.மில்) | | | நிலையான (2010) விலைகள் (ரூ.மில்) | | |
|---|---|---|---|---|---|---|
| | 2019 (ஆ) | 2020 (ஆ)(இ) | 2021 (இ) | 2019 (ஆ) | 2020 (ஆ)(இ) | 2021 (இ) |
| அ. உள்நாட்டுக் கேள்வி | | | | | | |
| நுகர்வு | 11,971,144 | 12,214,284 | 13,425,152 | 7,786,374 | 7,601,213 | 7,870,841 |
| (% மாற்றம்) | 8.0 | 2.0 | 9.9 | 4.5 | -2.4 | 3.5 |
| மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் | 3,945,423 | 3,779,064 | 4,655,829 | 3,082,250 | 2,766,593 | 2,848,458 |
| (% மாற்றம்) | -7.5 | -4.2 | 23.2 | -11.6 | -10.2 | 3.0 |
| **மொத்த உள்நாட்டு கேள்வி** | **15,916,567** | **15,993,349** | **18,080,981** | **10,868,624** | **10,367,806** | **10,719,300** |
| **(% மாற்றம்)** | **3.7** | **0.5** | **13.1** | **-0.7** | **-4.6** | **3.4** |
| ஆ. வெளிநாட்டுக் கேள்வி | | | | | | |
| பொருட்களினதும் பணிகளினதும் ஏற்றுமதிகள் | 3,472,337 | 2,418,541 | 2,981,613 | 1,845,686 | 1,666,522 | 1,952,033 |
| (% மாற்றம்) | 5.5 | -30.3 | 23.3 | 7.2 | -9.7 | 17.1 |
| பொருட்களினதும் பணிகளினதும் இறக்குமதிகள் | 4,391,746 | 3,384,516 | 4,253,285 | 2,823,843 | 2,501,420 | 2,789,936 |
| (% மாற்றம்) | 0.9 | -22.9 | 25.7 | -5.8 | -11.4 | 11.5 |
| **தேறிய வெளிநாட்டுக் கேள்வி** | **-919,410** | **-965,975** | **-1,271,672** | **-978,157** | **-834,898** | **-837,903** |
| **(% மாற்றம்)** | **13.4** | **-5.1** | **-31.6** | **23.3** | **14.6** | **-0.4** |
| **இ. மொத்த கேள்வி** | **14,997,157** | **15,027,374** | **16,809,309** | **9,890,468** | **9,532,909** | **9,881,397** |
| **(% மாற்றம்)** | **4.9** | **0.2** | **11.9** | **2.3** | **-3.6** | **3.7** |

(அ) தரவானது மொ.உ.உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2010 அடியாண்டு)
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 2.10
நடைமுறைச் சந்தை விலைகளில் தனியார் நுகர்வுச் செலவினத்தின் உள்ளமைப்பு (அ)

| வகை | மொத்த தனியார் நுகர்வுச் செலவினத்தின் சதவீதமாக (%) | | | வளர்ச்சி (%) | |
|---|---|---|---|---|---|
| | 2019 (ஆ) | 2020 (ஆ)(இ) | 2021 (இ) | 20/19 (ஆ)(இ) | 21/20 (இ) |
| 1. உணவு மற்றும் வெறியமல்லா குடிபானங்கள் | 27.9 | 30.9 | 31.3 | 11.6 | 12.4 |
| 2. வெறியமுள்ள குடிபானங்கள், புகையிலை மற்றும் போதைப்பொருள் | 3.4 | 3.2 | 3.4 | -4.7 | 15.5 |
| 3. புடவையும் காலணியும் | 4.5 | 3.7 | 3.9 | -15.6 | 15.0 |
| 4. வீடமைப்பு, நீர், மின்சாரம், எரிவாயு, மற்றும் ஏனைய எரிபொருட்கள் | 10.1 | 10.4 | 10.0 | 3.6 | 6.7 |
| 5. தளபாடமிடுதல், வீட்டுச் சாதனங்கள் மற்றும் வழமையான வீட்டுத்துறையின் பராமரிப்பு | 1.0 | 1.0 | 1.1 | -2.1 | 24.3 |
| 6. நலம் | 2.8 | 2.8 | 3.4 | 1.7 | 33.1 |
| 7. போக்குவரத்து | 24.1 | 20.2 | 19.3 | -15.2 | 5.9 |
| 8. தொடர்பூட்டல் | 0.7 | 0.7 | 0.8 | 0.1 | 20.9 |
| 9. பொழுதுபோக்கு மற்றும் கலாசாரம் | 1.6 | 1.7 | 1.7 | 7.6 | 8.4 |
| 10. கல்வி | 1.7 | 1.7 | 1.6 | 0.0 | 3.0 |
| 11. விடுதிகள் மற்றும் உணவகங்கள் | 3.9 | 2.6 | 2.9 | -34.2 | 24.4 |
| 12. பல்வகைப் பொருட்களும் பணிகளும் | 21.5 | 21.4 | 21.4 | 0.7 | 10.8 |
| 13. வதிவோரினால் நேரடி வெளிநாட்டு கொள்வனவுகள் | 2.9 | 0.9 | 0.3 | -68.7 | -68.4 |
| 14. கழிக்குக: வதிவற்றோரினால் உள்நாட்டு சந்தையில் நேரடி கொள்வனவுகள் | 6.2 | 1.2 | 0.9 | -80.1 | -17.2 |
| **மொத்த தனியார் நுகர்வுச் செலவு** | **100.0** | **100.0** | **100.0** | **1.0** | **10.8** |

(அ) தரவானது மொ.உ. உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2010 அடியாண்டு)
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

ஒட்டுமொத்தமாக சமூகத்திற்கு நன்மையளிக்கின்ற பணிகள் மீதான பொதுவான அரசாங்கத்தின் செலவினத்தை உள்ளடக்குகின்ற கூட்டான நுகர்வுச் செலவினம் 2020இன் 5.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2021இல் 5.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றைக் கட்டுப்படுத்துவதில் அரசாங்கத்தின் ஈடுபாடு இறைக் கொள்கைத் தலையீடுகளும் அரசாங்க நுகர்வுச் செலவினத்தில் விரிவடைதலுக்குப் பங்களித்தன.


## முதலீடு

**பொருளாதார நடவடிக்கைகளில் படிப்படியான மீளெழுச்சி மற்றும் மீட்சி விரைவுபடுத்துவதற்கு இலக்கிடப்பட்ட கொள்கைத் தூண்டல்கள் என்பவற்றிலிருந்து நன்மையடைந்து முதலீட்டுச் செலவினமானது நடப்பு சந்தை விலைகளில் 2020இல் பதிவாகிய 4.2 சதவீத சுருக்கத்திலிருந்து மீட்சியடைந்து 2021இல் 23.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.** முன்னைய ஆண்டில் 6.0 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2021இல் 14.5 சதவீதத்தினால் மொத்த நிலையான மூலதன உருவாக்கத்தில் கணிசமான வளர்ச்சியினால் இம்மீட்சி பெருமளவில தூ ண்டப்பட்டு இஒஒஒஒஒஒருந்தது. அதற்கமைய, கட்டடவாக்கம், போக்குவரத்து சாதனங்கள் மற்றும் பொறி மற்றும் கருவிகள் போன்ற மொத்த நிலையான மூலதன உருவாக்க முக்கிய சொத்து வகைகள் 2020இன் பின்னடைவிலிருந்து மீட்சியடைந்து 2021இல் விரிவடைந்தன. மேலும், தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்ப சாதனங்கள் புலமைச் சொத்து உற்பத்திகள் போன்ற வகைகள் மீதான முதலீட்டுச் செலவினமும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் விரிவடைந்தது. அதேவேளை, இருப்புக்களில் மாற்றங்கள் மற்றும் கையகப்படுத்தல்கள் என்பன பெறுமதி வாய்ந்தவைகளின் கையுதிர்த்தல்களைக் கழித்து 2021இல் கணிசமான அதிகரிப்பினைப் பதிவுசெய்தன.

**முதலீட்டுச் சபை கம்பனிகளுக்கு கிடைக்கப்பெற்ற கடன்கள் உள்ளடங்கலாக வெளிநாட்டு நேரடி முதலீடுகள் 2020ஆம் ஆண்டில் பதிவாகிய ஐ.அ.டொலர் 687.0 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 780.2 மில்லியனுக்கு[5] 13.6 சதவீதத்தினால்**

5 இது முதலீட்டுச் சபையுடன் பதிவுசெய்யப்பட்ட கம்பனிகளுக்கான கடன்கள் உட்பட்ட பெறுகைகளை உள்ளடக்குவதுடன் முதலீட்டுச் சபையல்லா கம்பனிகளுக்கான வெளிநாட்டு நேரடி முதலீடுகள் உள்ளடக்கப்படுவதன் காரணத்தால் அத்தியாயம் 5இல் காட்டப்பட்டுள்ள மதிப்பீடுகளிலிருந்து வேறுபடலாம். அதற்கிணங்க, 2021இல் மொத்த வெளிநாட்டு நேரடி முதலீடுகள் ஐ.அ.டொலர் 784 மில்லியனாகும்.

வரைபடம் 2.13
முதலீட்டுச் சபை தொழில் முயற்சிகளின் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (அ) (ஐ.அ.டொ.மில்லியன்)




(அ) கடன்கள் உள்ளடங்கலாக

*மூலம்:* இலங்கை முதலீட்டுச் சபை

2

அட்டவணை 2.11
இலங்கை முதலீட்டுச்சபை மற்றும் கைத்தொழில் அமைச்சு என்பவற்றின் கீழ் பதிவு செய்யப்பட்ட தொழில் முயற்சிகளிலுள்ள முதலீடும் தொழில் நிலையும்

| | செயற்றிட்ட எண்ணிக்கை | | மதிப்பிடப்பட்ட முதலீடுகள் (ரூ. மில்லியன்) | | | | | | மதிப்பிடப்பட்ட தொழிலாளர் (எண்ணிக்கை) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2020 (அ) | 2021 ஆ) | 2020 (அ) | | | 2021 (ஆ) | | | 2020 (அ) | 2021 (ஆ) |
| | | | வெளிநாடு | உள்நாடு | மொத்தம் | வெளிநாடு | உள்நாடு | மொத்தம் | | |
| முதலீட்டுச்சபை (1978ம் ஆண்டு 4ம் இல. சட்டத்தின் கீழ்) | | | | | | | | | | |
| ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் | 162 | 144 | 300,608 | 123,178 | 423,786 | 348,926 | 168,451 | 517,377 | 14,376 | 26,463 |
| பிரிவு 17இன் கீழ் (இ) | 161 | 139 | 299,236 | 123,178 | 422,413 | 347,933 | 168,002 | 515,935 | 14,256 | 26,290 |
| பிரிவு 16இன் கீழ் | 1 | 5 | 1,373 | - | 1,373 | 993 | 449 | 1,442 | 120 | 173 |
| பிரிவு 17இன் கீழ் ஒப்பந்தமளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் (இ) | 122 | 93 | 131,342 | 165,858 | 297,201 | 42,397 | 74,144 | 116,542 | 15,856 | 16,477 |
| பிரிவு 17இன் கீழ் அடையப்பட்ட முதலீடுகள் (ஈ)(உ) | 1,943 | 1,875 | 2,105,156 | 1,812,278 | 3,917,434 | 2,258,989 | 2,021,406 | 4,280,395 | வி.கி | வி.கி |
| வர்த்தகத் தொழிற்பாடுகளின் செயற்றிட்டங்கள் (ஈ) | 2,651 | 2,735 | 606,527 | 975,024 | 1,581,551 | 651,662 | 1,057,348 | 1,709,010 | 441,936 | 459,828 |
| பிரிவு 17இன் கீழ் (இ) | 2,116 | 2,216 | 580,734 | 966,286 | 1,547,021 | 626,170 | 1,046,161 | 1,672,331 | 413,280 | 431,550 |
| பிரிவு 16இன் கீழ் | 535 | 519 | 25,793 | 8,738 | 34,530 | 25,492 | 11,187 | 36,679 | 28,656 | 28,278 |
| கைத்தொழில் அமைச்சு | | | | | | | | | | |
| பதிவு செய்யப்பட்ட கம்பனிகள் (ஈ) | 3,020 | 3,259 | - | - | 208,934 | - | - | 209,366 | - | வி.கி |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) விரிவாக்கப்பட்ட செயற்றிட்டங்கள் உள்ளடங்கலாக
(ஈ) ஆண்டின் இறுதியில் ஒன்று சேர்ந்த தொகை
(உ) ஒன்றுசேர்ந்த உண்மையான முதலீடுகளின் பெறுமதி வழங்கப்பட்டுள்ளது

*மூலங்கள்:* இலங்கை முதலீட்டுச் சபை
கைத்தொழில் அமைச்சு

குறிப்பு : முதலீட்டுச் சபையின் 17ஆம் பிரிவின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட மற்றும் ஒப்பந்தமளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் முதலீட்டு மட்டம் அல்லது வேறு ஏதேனும் குறிப்பிட்ட தேவைப்பாடுகளின் பூர்த்திக்குட்பட்டு சுங்கம் மற்றும் செலாவணி கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகளில் இருந்து விலக்களிக்கப்பட்டன.

**அதிகரித்து காணப்பட்டது.** தயாரிப்புத் துறை, பணிகள் துறை, மற்றும் உட்கட்டமைப்பு வசதி செயற்றிட்டங்கள் உள்ளடங்கலாக முக்கிய துறைகளில் வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் மீட்சியொன்று பதிவாகிய அதேவேளை வேளாண்மைத் துறைக்கான வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் 2021ஆம் ஆண்டில் தொடர்ந்தும் குறைவாகக் காணப்பட்டது. மேலும், ஆண்டுகாலப்பகுதியில் 1978இன் 4ஆம் இலக்க முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 16ஆம் மற்றும் 17ஆம் பிரிவின் கீழ் முதலீட்டுச் சபையினால் அனுமதிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் மொத்தப்பெறுமதி ரூ.517.4 பில்லியனாக மதிப்பிடப்பட்டு, 2020 உடன் ஒப்பிடுகையில் 22.1 சதவீத விரிவடைதலைப் பதிவுசெய்தது. முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 16 ஆம் மற்றும் 17ஆம் பிரிவுகளின் கீழ் வர்த்தக ரீதியான தொழிற்பாடுகளைத் தொடங்கிய செயற்றிட்டங்களின் மதிப்பிடப்பட்ட முதலீட்டுப் பெறுமதி முறையே ரூ.1,672.3 பில்லியனாகவும் ரூ.36.7 பில்லியனாகவும் காணப்பட்டு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டில் ஒட்டுமொத்தமாக 8.1 சதவீத விரிவடைதலினைப் பதிவுசெய்தது.

## மூலவளங்களின் கிடைப்பனவு மற்றும் பயன்பாடு

**பொருளாதாரத்தின் மூலவளங்களின் கிடைப்பனவு 2020இல் பதிவாகிய 5.0 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் நடப்பு விலைகளில் 14.4 சதவீதத்தினால் 2021இல் விரிவடைந்தது.** இந்நோக்கில் உள்நாட்டு மூலவளங்களையும் அதேபோன்று வெளிநாட்டு மூலவளங்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற இறக்குமதிகளையும் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற மொ.உ.உற்பத்தியானது நடப்பு மற்றும் நிலையான இரு விலைகளிலும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021இல் விரிவடைந்தது. கிடைக்கப்பெறுகின்ற மூலவளங்களைக் கருத்திற்கொள்கையில், மூலவளங்களில் பெரும்பாலானவை நுகர்வு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டன. இது, 2021இல் மொத்த மூலவளப் பயன்பாட்டின் 63.7 சதவீதத்திற்கு வகைகூறியது, அதேவேளை, நடப்பு விலைகளில் ஏற்றுமதி மற்றும் முதலீட்டு நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்ட மூலவளங்களின் பங்கு ஆண்டு காலப்பகுதியில் அதிகரித்த அதேவேளை, நிலையான விலைகளில் ஏற்றுமதி நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட மூலவளங்களின் பங்கு அதிகரித்து இறக்குமதி நோக்கங்களுக்கானவை குறைவடைந்தது.


அட்டவணை 2.12
நடைமுறைச் சந்தை விலைகளில் மொத்த மூலவளங்களும் அவற்றின் பயன்பாடும் (அ)(ஆ)

| விடயம் | சதவீதப் பங்கு % | | வளர்ச்சி % | |
|---|---|---|---|---|
| | 2020 (இ) | 2021 | 2020 (இ) | 2021 |
| அ. மூலவளங்கள் | | | | |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி | 81.6 | 79.8 | 0.2 | 11.9 |
| பொருட்கள் மற்றும் பணிகளினது இறக்குமதிகள் | 18.4 | 20.2 | -22.9 | 25.7 |
| **மொத்தம்** | **100.0** | **100.0** | **-5.0** | **14.4** |
| ஆ. பயன்பாடு | | | | |
| நுகர்வு | 66.3 | 63.7 | 2.0 | 9.9 |
| மொத்த நிலையான மூலதனவாக்கம் | 20.7 | 20.8 | -6.0 | 14.5 |
| பெறுமதியானவற்றின் விற்பனையைக் கழித்த கையேற்புக்கள் மற்றும் இருப்புக்களின் மாற்றம் | -0.2 | 1.4 | 67.9 | 874.2 |
| பொருட்கள் பணிகளினது ஏற்றுமதி | 13.1 | 14.2 | -30.3 | 23.3 |
| **மொத்தம்** | **100.0** | **100.0** | **-5.0** | **14.4** |

(அ) தரவானது மொ.உ.உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2010 அடியாண்டு)
(ஆ) தற்காலிகமானது
(இ) திருத்தப்பட்டது

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 2.14
2021இல் பொருளாதாரம் (நடைமுறைச் சந்தை விலைகளில்) (அ)




(அ) மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது (2010 அடியாண்டு)

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

## சேமிப்புக்கள்

**பொருளாதாரத்தின் உள்நாட்டு மற்றும் தேசிய சேமிப்புக்கள் இரண்டும் நடப்பு விலைகளில் 2021இல் மீளெழுச்சிபெற்றன.** அதற்கமைய, ஆண்டுகாலப்பகுதியில் தனிப்பட்ட சேமிப்புகளில் அதிகரிப்பினால் பெருமளவில் தூண்டப்பட்டு, உள்நாட்டுச் சேமிப்புக்கள் 2021இல் 20.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. அதேவேளை, குறைவான அரசாங்க வருவாயினைப் பிரதான காரணமாகக் கொண்டு அரசாங்கச் சேமிப்பு கரைதலில் கணிசமான திடீர் அதிகரிப்பு அறிக்கையிடப்பட்டது. இதன்விளைவாக, மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக உள்நாட்டுச் சேமிப்புக்கள் 2021இல் 20.1 சதவீதத்திற்கு அதிகரித்தன. அதேசந்தர்ப்பத்தில் ரூபா நியதிகளில் தேறிய முதலாந்தர வருமானம் 2021இல் மேம்படுதலொன்றினைப் பதிவுசெய்த அதேவேளை, உலகின் ஏனைய பகுதிகளிலிருந்தான தேறிய நடப்பு மாற்றல்கள் சுருக்கமடைந்தன. இதனைத் தொடர்ந்து, உள்நாட்டுச் சேமிப்புக்களில் மீளெழுச்சியினை பிரதான காரணமாகக் கொண்டு தேசிய சேமிப்புக்கள் 2021இல் 13.2 சதவீதத்தினால் அதிகரித்தன. அதற்கமைய, மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக தேசிய சேமிப்புக்கள் 2021இல் 23.8 சதவீதத்திற்கு அதிகரித்தது. மேலும், தேசிய சேமிப்பு - முதலீட்டு இடைவெளி 2020இன் மொ.உ.உற்பத்தியின் 1.6 சதவீதத்திலிருந்து 2021இல் மொ.உ.உற்பத்தியின் 3.9 சதவீதத்திற்கு விரிவடைந்தது. முதலீட்டுச் செலவினத்தில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி இதற்கு பெருமளவில் காரணமாக அமைந்தது.

## 2.6 வருமானம்

**பொருளாதாரத்தின் வருமானக் கூறுக்கிடையில், மொத்த தொழிற்பாட்டு மிகைகள் ஆண்டுகாலப்பகுதியில் தொடர்ந்தும் பாரியளவு பங்களித்து அதனைத் தொடர்ந்து ஊழியர்களுக்கான இழப்பீடும் உற்பத்தி மீதான உதவுதொகை கழித்த வரிகளும் காணப்பட்டன.** மொத்த தொழிற்பாட்டு மிகைகள், உள்நாட்டு உற்பத்தியின் 64.4 சதவீதத்திற்கு வகைகூறி 2021இல் நடப்பு விலைகளில் 13.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. இவ்வளர்ச்சிக்கு பிரதானமாக ஆண்டுகாலப்பகுதியில் தேறிய தொழிற்பாட்டு மிகைகளில் விரிவடைதல் காரணமாக அமைந்தது. வருமானத்தின் ஏனைய முக்கிய மூலங்களைக்

அட்டவணை 2.13
நடைமுறைச் சந்தை விலைகளில் நுகர்வு, முதலீடு மற்றும் சேமிப்பு (அ)(ஆ)

| விடயம் | ரூ.மில்லியன் | | வளர்ச்சி (%) | | மொ.உ.உ.இன் சதவீதமாக (%) | |
|---|---|---|---|---|---|---|
| | 2020 (இ) | 2021 | 2020 (இ) | 2021 | 2020 (இ) | 2021 |
| 1. சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி | 15,027,374 | 16,809,309 | 0.2 | 11.9 | 100.0 | 100.0 |
| 2. நுகர்வுச் செலவினம் | 12,214,284 | 13,425,152 | 2.0 | 9.9 | 81.3 | 79.9 |
| தனியார் | 10,661,955 | 11,814,865 | 1.0 | 10.8 | 71.0 | 70.3 |
| அரசு | 1,552,329 | 1,610,287 | 9.9 | 3.7 | 10.3 | 9.6 |
| 3. முதலீடுகள் | 3,779,064 | 4,655,829 | -4.2 | 23.2 | 25.1 | 27.7 |
| 4. உள்நாட்டுச் சேமிப்புக்கள் | 2,813,090 | 3,384,158 | -7.0 | 20.3 | 18.7 | 20.1 |
| தனியார் | 3,993,489 | 4,674,599 | 12.2 | 17.1 | 26.6 | 27.8 |
| அரசு | -1,180,399 | -1,290,441 | -121.2 | -9.3 | -7.9 | -7.7 |
| 5. உள்நாட்டுச் சேமிப்புக்கள் - முதலீட்டு இடைவெளி | -965,975 | -1,271,672 | -5.1 | -31.6 | -6.4 | -7.6 |
| 6. வெளிநாட்டிலிருந்தான தேறிய முதலாந்தர வருமானம் | -423,063 | -406,605 | 4.2 | 3.9 | -2.8 | -2.4 |
| 7. வெளிநாட்டிலிருந்தான தேறிய நடைமுறை மாற்றல்கள் (ஈ) | 1,150,789 | 1,030,321 | 11.7 | -10.5 | 7.7 | 6.1 |
| 8. தேசிய சேமிப்புக்கள் | 3,540,816 | 4,007,874 | -2.1 | 13.2 | 23.6 | 23.8 |

(அ) தரவானது மொ.உ. உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2010 அடியாண்டு)
(ஆ) தற்காலிகமானது
(இ) திருத்தப்பட்டது
(ஈ) சென்மதி நிலுவை மதிப்பீடுகளுடனான வேறுபாடுகளிற்கு தொகுத்தலில் ஏற்படுகின்ற காலதாமதமே காரணமாகும்

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
நிதி அமைச்சு

2

அட்டவணை 2.14
நடைமுறைச் சந்தை விலைகளில் நிறுவனத்துறைகளின் வருமான கூறுகள் (அ)(ஆ)

| விடயம் | சதவீதப்பங்கு (%) 2020 (இ) நிதியல்லா கூட்டுத் தாபனம் | நிதிக் கூட்டுத் தாபனம் | பொது அரசாங்கம் | வீட்டு அலகுகள் மற்றும் வீட்டு அலகுகளுக்குப் பணியாற்றும் இலாபமீட்டா நிறுவனங்கள் | மொத்த பொரு ளாதாரம் | 2021 நிதியல்லா கூட்டுத் தாபனம் | நிதிக் கூட்டுத் தாபனம் | மத்திய அரசாங்கம் | வீட்டு அலகுகள் மற்றும் வீட்டு அலகுகளுக்குப் பணியாற்றும் இலாபமீட்டா நிறுவனங்கள் | மொத்த பொரு ளாதாரம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஊழியர்களின் நட்டஈடு | 33.1 | 7.5 | 30.3 | 29.1 | 100.0 | 34.4 | 7.5 | 28.6 | 29.4 | 100.0 |
| மொத்த தொழிற்பாட்டு மிகை | 34.3 | 5.8 | 1.5 | 58.4 | 100.0 | 35.1 | 6.4 | 1.8 | 56.7 | 100.0 |
| தேறிய தொழிற்பாட்டு மிகை | 36.8 | 6.5 | 0.7 | 56.0 | 100.0 | 38.0 | 7.3 | 0.6 | 54.1 | 100.0 |
| கலப்பு வருமானம் | - | - | - | 100.0 | 100.0 | - | - | - | 100.0 | 100.0 |
| நிலையான மூலதனத்தின் நுகர்வு | 45.9 | 6.0 | 8.2 | 40.0 | 100.0 | 44.7 | 5.7 | 10.8 | 38.9 | 100.0 |
| உற்பத்தி மீதான மானியங்களை கழித்த ஏனைய வரிகள் | 85.5 | 14.2 | - | 0.3 | 100.0 | 84.7 | 15.1 | - | 0.2 | 100.0 |
| அடிப்படை விலைகளில் பெறுமதி சேர்ப்பு | 34.0 | 6.4 | 10.9 | 48.7 | 100.0 | 35.0 | 6.8 | 10.2 | 48.0 | 100.0 |

(அ) தரவானது மொ.உ. உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2010 அடியாண்டு)
(ஆ) தற்காலிகமானது
(இ) திருத்தப்பட்டது

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

கருத்திற்கொள்கின்ற போது ஊழியர்களுக்கான இழப்பீடும் அதேபோன்று உற்பத்தி மீதான உதவுதொகைகளைக் கழித்த வரிகளும் ஆண்டுகாலப்பகுதியில் வளர்ச்சியினைப் பதிவுசெய்தன. அதேவேளை, வீட்டுத்துறை மற்றும் இலாபமீட்டாத நிறுவனங்களில் பணியாற்றுகின்ற வீட்டுத் துறை நிறுவனசார் வருமான வகைப்படுத்தலினுள் வருமானத்திற்கு பாரிய பங்களிப்பாளராக தொடர்ந்தும் இருந்ததுடன் அதனைத் தொடர்ந்து நிதியல்லா நிறுவனங்கள், பொது அரசாங்கம் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் காணப்பட்டன.

## 2.7 குடித்தொகை, தொழிற்படை மற்றும் தொழில்நிலை

### குடித்தொகை

**பதிவாளர் நாயகத்தின் திணைக்களத்தினால் தொகுக்கப்படும் நடுவாண்டு குடித்தொகை மதிப்பீடுகளிற்கு அமைவாக இலங்கையின் நடுவாண்டுக் குடித்தொகை 2021இல் 22.156 மில்லியன் என மதிப்பீடு செய்யப்பட்டது.** அதற்கமைய, குடித்தொகை வளர்ச்சி வீதம் 2020இல் பதிவாகிய 0.5 சதவீதத்திலிருந்து 2021இல் 1.1 சதவீதத்திற்கு கணிசமாக அதிகரித்தது. குடித்தொகை வளர்ச்சிக்கு மேல் மாகாணம் பெருமளவு பங்களித்ததுடன் அதனைத் தொடர்ந்து கிழக்கு மாகாணம் காணப்பட்டது. அதேவேளை, ஊவா மற்றும் வட மாகாணங்களிலிருந்து குடித்தொகை வளர்ச்சிக்கு ஆகக்குறைந்த பங்களிப்புக்களே காணப்பட்டன. 2021இல் மேல் மாகாணம் 28.1 சதவீதம் கொண்ட நடுவாண்டு குடித்தொகையின் அதிஉயர்வான பங்கிற்கு தொடர்ந்தும் வகைகூறி அதனைத் தொடர்ந்து நடுவாண்டு குடித்தொகையின் முறையே 12.7 சதவீதம் மற்றும் 12.2 சதவீதம் கொண்ட பங்கிற்கு மத்திய மற்றும் தென் மாகாணங்கள் வகைகூறி தொடர்ந்தும் அதேபோக்கு அவதானிக்கப்பட்டது. அதேவேளை, வட மாகாணம் 5.3 சதவீதம் கொண்ட நடுவாண்டு குடித்தொகையின் ஆகக்குறைந்த பங்கிற்கே தொடர்ந்தும் வகைகூறியது. குடித்தொகை வளர்ச்சிக்கு அமைவாக குடித்தொகை அடர்த்தியும் 2020இன் ஒரு சதுரக் கி.மீற்றருக்கு 350 மக்களிலிருந்து 2021இல் ஒரு சதுர கி.மீற்றருக்கு 353 மக்களாக அதிகரித்தது. அண்மைய ஆண்டுகளில் அவதானித்ததைப் போன்று பெண்கள் குடித்தொகை ஆண்கள் குடித்தொகையினைவிட தொடர்ந்தும் உயர்வாகவே காணப்பட்டதுடன் முதியோர் குடித்தொகையின் பங்கு மீளாய்வுக்கு உட்படுகின்ற காலப்பகுதியில் அதே குறிப்பிடத்தக்க மட்டத்திலேயே இருந்தது.

அட்டவணை 2.15
மாகாண அடிப்படையிலான குடித்தொகை மற்றும் அடர்த்தி (அ)(ஆ)

| மாகாணம் | 2020 குடித்தொகை '000 நபர்கள் | 2020 அடர்த்தி | 2021 குடித்தொகை '000 நபர்கள் | 2021 அடர்த்தி |
|---|---|---|---|---|
| மேல் | 6,165 | 1,716 | 6,219 | 1,731 |
| மத்திய | 2,781 | 499 | 2,811 | 504 |
| தென் | 2,669 | 496 | 2,696 | 501 |
| வடக்கு | 1,152 | 139 | 1,165 | 141 |
| கிழக்கு | 1,746 | 187 | 1,783 | 190 |
| வடமேல் | 2,563 | 341 | 2,592 | 345 |
| வடமத்திய | 1,386 | 142 | 1,402 | 144 |
| ஊவா | 1,387 | 166 | 1,400 | 168 |
| சப்ரகமுவ | 2,070 | 421 | 2,088 | 424 |
| **மொத்தம்** | **21,919** | **350** | **22,156** | **353** |

(அ) தற்காலிகமானது
(ஆ) நடுவாண்டுக் குடித்தொகையானது 2012ஆம் ஆண்டின் குடித்தொகை மதிப்பீடு மற்றும் வீடமைப்பு மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது

மூலம்: பதிவாளர் நாயகம் திணைக்களம்

## தொழிற்படை

**பொருளாதார ரீதியில் செயற்பாட்டிலுள்ள குடித்தொகையான தொழிற்படை,[6] 2020இல் பதிவாகிய 8.467 மில்லியனிலிருந்து 2021இல் 8.553 மில்லியனுக்கு அதிகரித்து 1.0 சதவீத வளர்ச்சியினைப் பதிவுசெய்தது.** இவ்வளர்ச்சியானது அனைத்து மூன்று துறைகளிலும் அதாவது நகரம், கிரமம் மற்றும் தோட்டம் ஆகியவற்றிலுள்ள தொழிற்படையில் அதிகரிப்புக்களால் தூண்டப்பட்டிருந்தது. அதேவேளை, பொருளாதார ரீதியாக செயற்பாடற்ற குடித்தொகையானது முனைப்பாகத் தொழில் தேடுதலில் ஆர்வம் குறைந்தமை அத்துடன் வழமையான செயற்பாடுகள் மீது நோய்த்தொற்றினால் தூண்டப்பட்ட குழப்ப நிலைகளுடன் 2020இல் 8.273 மில்லியனிலிருந்து 2021இல் 8.581 மில்லியனுக்கு குறிப்பிடத்தக்களவு மேலும் அதிகரித்தது. இவ்வதிகரிப்பானது பெருமளவில் கிராமியத் துறையில் குறிப்பாக கிராமியப் பெண்கள் தொடர்பில் செயற்பாடற்றவர்களில் அதிகரிப்பினால் தூண்டப்பட்டிருந்தது. தொழிற்படை மற்றும் தொழில்புரியாத குடித்தொகை இரண்டிலும் அதிகரிப்பினைத் தொடர்ந்து வீட்டுத்துறைக் குடித்தொகைக்கான தொழிற்படையின் விகிதாசாரமான தொழிற்படை பங்கேற்றல் வீதம் 2020இன் 50.6 சதவீதத்திலிருந்து 2021இல் 49.9 சதவீத்திற்குக் குறைவடைந்தது. அதற்கமைய, ஆண், பெண் தொழிற்படைப் பங்கேற்பு வீதமும் 2020இன் முறையே 71.9 சதவீதம் மற்றும் 32.0 சதவீதத்திலிருந்தும் 2021இல் முறையே 71.0 சதவீதத்திற்கும் மற்றும் 31.8 சதவீதத்திற்கும் குறைவடைந்தது. சாதகமாக நோக்குகையில் தொழிற்படை பங்கேற்பு வீதத்தில் பாலின இடைவெளி 2020இன் 39.8 சதவீதத்திலிருந்து 2021இல் 39.2 சதவீதத்திற்குக் குறைவடைந்த போதிலும் எவ்வாறாயினும், நோய்த்தொற்றுக்கு முன்னைய மட்டங்களை எட்டியிருக்கவில்லை.

6 ஆய்விற்குட்படுத்தப்பட்ட ஒரு வாரக் காலப்பகுதியில் தொழிலிலுள்ள அல்லது தொழிலற்ற (15 வயதும் அதற்கு மேலும்) ஆட்களை குறிப்பிடுவதே தற்போதைய பொருளாதாரத்தில் செயற்பாட்டில் உள்ள குடித்தொகை ஆகும்.

## தொழில்நிலை

**தொழில்புரியும் குடித்தொகை[7] நோய்த்தொற்றுக்கு முந்திய தொழில்நிலை மட்டங்கள் வரை இன்னமும் மீட்சிபெற்றிருக்காத போதிலும் 2020இன் 7.999 மில்லியனிலிருந்து 2021இல் 8.114 மில்லியனுக்கு அதிகரித்தது.** தொழில்நிலையில் அதிகரிப்பானது பிரதானமாக வேளாண்மை மற்றும் பணிகள் நடவடிக்கைகளுடன் தொடர்புபட்ட தொழில்வாய்ப்புக்களின் அதிகரிப்பினால் தூண்டப்பட்டிருந்தது. அதற்கமைய, வேளாண்மையில் காணப்படும் தொழில்நிலை 2020இன் 2.170 மில்லியனிலிருந்து 2021இல் 2.213 மில்லியனுக்கு அதிகரித்த அதேவேளை, பணிகள் துறையிலுள்ள தொழில்நிலை 2020இன் 3.677 மில்லியனிலிருந்து 2021இல் 3.791 மில்லியனுக்கு அதிகரித்தது. எனினும், எதிர்கொண்ட விடாப்பிடியான பாதகமான நிலைமைகளுக்கு மத்தியில் கைத்தொழில் துறையின் தொழில்நிலை 2020இல் 2.153 மில்லியனிலிருந்து 2021இல் 2.109 மில்லியனுக்கு தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தது. அதற்கமைய, வேளாண்மை மற்றும் பணிகள் துறைகளின் தொழில்நிலையின் பங்குகள் 2020இன் முறையே 27.1 சதவீதம் மற்றும் 46.0 சதவீதத்திலிருந்து 2021இல் முறையே 27.3 சதவீதம் மற்றும் 46.7 சதவீதத்திற்கு அதிகரித்த அதேவேளை, கைத்தொழில் துறையின் தொழில்நிலைப் பங்கு 2020இல் 26.9 சதவீதத்திலிருந்து 2021இன் 26.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

**மத்திய வங்கியினால் நடாத்தப்படுகின்ற பொதுத் துறை தொழில்நிலை அளவீட்டின் பிரகாரம் மொத்த பொதுத் துறை தொழில்நிலை 2020இன் 1.461 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021இன் இறுதியில் 1.493 மில்லியனுக்கு அதிகரித்தது.** இது, அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாவட்டச் செயலகங்கள், பிரதேச செயலகங்கள், மாகாண சபைகள் அத்துடன் அரசசார் நிறுவனங்கள் என்பனவற்றிலுள்ள ஊழியர்களை உள்ளடக்குகின்றது. பொதுத் துறை தொழில்நிலையில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்பிற்கு வேலையற்ற பட்டதாரிகள்

7 தொடர்பான காலப்பகுதியில் குறைந்தபட்சம் ஒரு மணித்தியாலமாவது கொடுப்பனவு பெறும் ஊழியராக, தொழில்தருநராக, சொந்தத் தொழில்புரிபவராக அல்லது பங்களிக்கின்ற குடும்ப உறுப்பினராகவுள்ள பணியாற்றும் ஆட்கள் தொழில்புரிபவர் எனக் குறிப்பிடப்படுவர். இது தொழிலிலுள்ள ஆட்களை உள்ளடக்குகிறது எனினும் தொடர்பான காலப்பகுதியில் தொழில்புரியாத ஆட்களை உள்ளடக்காது.

2

அட்டவணை 2.16

குடும்ப அலகுகளின் குடித்தொகை, தொழிற்படை மற்றும் தொழிற்படை பங்கேற்பு (அ)

| விடயம் | 2020 | 2021 (ஆ) | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | கா1 | கா2 | கா3 | கா4 | ஆண்டு (இ) |
| **குடும்ப அலகுகளின் எண்ணிக்கை ‘000 ஆட்கள்** | **16,739** | **17,025** | **17,092** | **17,158** | **17,260** | **17,134** |
| **தொழிற்படை ‘000 ஆட்கள்** | **8,467** | **8,673** | **8,515** | **8,487** | **8,538** | **8,553** |
| தொழிலுள்ளோர் | 7,999 | 8,181 | 8,082 | 8,044 | 8,146 | 8,114 |
| தொழிலற்றோர் | 468 | 492 | 432 | 444 | 392 | 440 |
| **தொழிற்படை பங்கேற்பு வீதம் (ஈ)** | **50.6** | **50.9** | **49.8** | **49.5** | **49.5** | **49.9** |
| ஆண் | 71.9 | 71.7 | 71.1 | 71.0 | 70.2 | 71.0 |
| பெண் | 32.0 (உ) | 33.4 | 30.9 | 30.9 | 32.0 | 31.8 |

(அ) 15 வயதிற்கும் அதற்கு மேற்பட்ட குடும்ப அலகுகளின் எண்ணிக்கை
(ஆ) தற்காலிகமானது
(இ) 2021இன் நான்கு காலாண்டுகளினதும் சராசரி
(ஈ) குடும்ப அலகுகளின் எண்ணிக்கையின் சதவீதமாக தொழிற்படைப் பங்கேற்பு
(உ) திருத்தப்பட்டது

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

அட்டவணை 2.17

பொதுத்துறை தொழில்நிலை

| துறை | 2020 (அ) | 2021 (ஆ) | சதவீத மாற்றம் 2021/ 2020 (ஆ) |
|---|---|---|---|
| அரசு (இ) | 1,223,617 | 1,258,440 | 2.8 |
| அரசசார் (ஈ) | 237,454 | 235,032 | -1.0 |
| **பொதுத்துறை** | **1,461,071** | **1,493,472** | **2.2** |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) மத்திய அரசாங்கம், உள்ளூராட்சி மன்றம் மற்றும் மாகாண சபைகள்
(ஈ) அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சபைகள் மற்றும் அரச அதிகாரசபைகள்

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

மற்றும் பல பணி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் தொடர்ச்சியான ஆட்சேர்ப்பு அத்துடன் ஆயுதப்படை மற்றும் பொலிஸ் அலுவலர்கள் மற்றும் சுகாதாரத் துறை தொடர்புபட்ட ஆட்சேர்ப்புகள் காரணமாக அமைந்தன. தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற காலாண்டுத் தொழிற்படை அளவீட்டின் குறிப்பிடப்பட்டவாறு பொதுத் துறை ஊழியர்கள், தொழில்தருநர்கள், சுயதொழில்புரிவோர் 2020 உடன் ஒப்பிடுகையில் 2021இல் குறிப்பிடத்தக்களவு அதிகரித்த அதேவேளை தனியார் துறை தொழில்நிலையானது உலகளாவிய நோய்த்தொற்று காரணமாக தனியார் துறைக் கம்பனிகள் எதிர்கொண்ட அவ்வப்போதான இடர்பாடுகளுக்கு மத்தியில் தொடர்ச்சியான பணி முடிவுறுத்தல்களுக்கமைவாக சிறிதளவு வீழ்ச்சியடைந்தது. எவ்வாறாயினும், 2021 காலப்பகுதியில் தனியார் துறையானது, 42.0 சதவீதம் கொண்ட பாரிய பங்கினைப் பிரதிநிதித்துவப்படுத்தி பிரதான தொழில் உருவாக்குநராக தொடர்ந்தும் விளங்கியதுடன் அதனைத்தொடர்ந்து மொத்த தொழில்நிலையில் 33.4 சதவீதத்திற்கு சுயதொழில்புரிவோர் வகைகூறினர்.


## தொழிலின்மை

**தொழிலின்மை வீதமானது புதிய தொழில்வாய்ப்புகளின் உருவாக்கத்திற்கு அமைவாக 2020இல் பதிவாகிய 5.5 சதவீதத்திலிருந்து 2021இல் 5.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.** அதற்கமைய, தொழிலற்ற குடித்தொகை[8] 2020இன் பதிவாகிய 0.468 மில்லியனிலிருந்து 2021இல் 0.440 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. இதன்விளைவாக, ஆண், பெண் தொழிலின்மை வீதங்கள் 2020இன் முறையே 4.0 சதவீதம் மற்றும் 8.5 சதவீதத்திலிருந்து 2021இல் முறையே 3.7 சதவீதத்திற்கும் 7.9 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தன. மேலும், க.பொ.த.உ.த மற்றும் அதற்கு மேற்பட்ட வகையினரின் தொழிலின்மை வீதம் 2020இன் பதிவாகிய 9.8 சதவீதத்திலிருந்து 2021இல் 9.1 சதவீதத்திற்கு கணிசமாக வீழ்ச்சியடைந்தது. எவ்வாறாயினும், இளைஞர் (15-24 வருடங்கள்) தொழிலின்மை

8 தொழிலுக்குக் கிடைக்கத்தக்க அத்துடன் அல்லது தொழிலை எதிர்பார்த்திருக்கும் ஆட்கள் என்பதுடன் தொழில்புரியாத மற்றும் கடந்த நான்கு வாரங்களில் தொழிலைப் பெறுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்ட அத்துடன் அடுத்த இரண்டு வார காலப்பகுதியில் தொழில்வாய்ப்புக்களை ஏற்றுக்கொள்ளத் தயாராகவுள்ள ஆட்கள் தொழிலற்றவர்கள் எனக் குறிப்பிடப்படுவர்.

வரைபடம் 2.15

தொழிலின்மை வீதம் (சதவீதம்)




(அ) 2021இன் நான்கு காலாண்டுகளினதும் சராசரி


*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

வீதம் 2020 உடன் ஒப்பிடுகையில் 2021இல் 26.5 சதவீதமாக மாற்றமின்றிக் காணப்பட்டு ஆரம்ப மட்டத்தில் தொழில்வாய்ப்புகள் தொடர்ச்சியாகக் குறைவடைந்தமையினை எடுத்துக்காட்டியது. மேலும், ஒட்டுமொத்த தொழிலின்மை வீதமானது 2021இல் உருவாக்கப்பட்ட தொழில்வாய்ப்புக்கள் 2020 இலும் தொடர்ச்சியாக 2021 இலும் இடம்பெற்ற கணிசமான எண்ணிக்கையான பணி முடிவுறுத்தல்களை திரும்பலடையச் செய்வதற்குப் போதாமையாக இருந்தமையினால் உலகளாவிய நோய்த்தொற்றுக்கு முந்திய மட்டங்களுக்கு மேலேயே இன்னும் காணப்படுகின்றது.

## வெளிநாட்டுத் தொழில்வாய்ப்பு


**வெளிநாட்டு தொழில்வாய்ப்புகளுக்கான புறப்படுகைகள், ஆண்டின் பிந்திய பகுதியை நோக்கி புறப்படுகைகளின் குறிப்பிடத்தக்க மேம்படுதலுக்கிசைவாக 2020இன் 53,711 இலிருந்து 2021இல் 121,795 இற்கு 126.8 சதவீத குறிப்பிடத்தக்க வளர்ச்சியினைப் பதிவுசெய்தது.** அதற்கமைய, 2021இன் இறுதிக் காலாண்டில் வெளிநாட்டு தொழில்வாய்ப்பிற்கான புறப்படுகைகள் 2016 மூன்றாம் காலாண்டிலிருந்து அறிக்கையிடப்பட்ட ஒருபோதுமில்லாதளவு அதிகூடிய 61,447 புறப்படுகைகளைப் பதிவுசெய்தது. தளர்த்தப்பட்ட பயணக் கட்டுப்பாடுகள் மற்றும் தொழிலாளர்களைப் பெற்றுக்கொள்கின்ற நாடுகளில் தொழில்வாய்ப்புகளில் அதிகரிப்பு, தொழிலுக்காக வெளிநாடுகளுக்கு பயணிப்பதற்குக் காத்திருந்த புலம்பெயர் பணியாளர்களாகச் செல்லக்கூடியவர்களின் அதிகரித்த எண்ணிக்கை அத்துடன் புலம்பெயர் பணியாளர்களாகச் செல்லக்கூடியவர்களுக்கு துரித தடுப்புமருந்தேற்றல் என்பன வெளிநாட்டுத் தொழிலுக்கான புறப்படுகைகளில் குறிப்பிடத்தக்க இவ்வதிகரிப்பினைச் செலுத்தியது. அதற்கமைய, வெளிநாட்டுத் தொழிலுக்கான வெளிநாட்டு தொழில் மொத்தப் புறப்படுகைகளுக்கான ஆண் மற்றும் பெண் புறப்படுகைகளின் பங்கு முறையே 66.2 சதவீதமாகவும் 33.8 சதவீதமாகவும் காணப்பட்டது. வெளிநாட்டுத் தொழிலுக்கான மொத்தப் புறப்படுகைகளில் இவ்வதிகரிப்புகளுக்கமைவாக அனைத்து

வரைபடம் 2.16
திறமை அடிப்படையில் வெளிநாட்டு தொழில்நிலைக்கான வெளிச்செல்கைகள்




*மூலம்:* இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

வரைபடம் 2.17
முக்கிய நாடுகளின் அடிப்படையில் வெளிநாட்டு தொழில்நிலைக்கான வெளிச்செல்கைகள்




*மூலம்:* இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

வகைகளின் கீழும் அதாவது தொழில்சார், மத்திய மட்ட, எழுதுவினைஞர் மற்றும் தொடர்புபட்டவை, தேர்ச்சிபெற்ற, ஓரளவு தேர்ச்சிபெற்ற, தேர்ச்சிபெறாத அத்துடன் வீட்டுப் பணிப்பெண் என்பனவற்றுக்கான புறப்படுகைகள் மேம்பட்டன. இதில், பாரிய பங்களிப்புகள் தேர்ச்சிபெற்ற, தேர்ச்சிபெறாத அத்துடன் வீட்டுப் பணிப்பெண் வகைகளிலிருந்தே கிடைக்கப்பெற்றன. மத்திய கிழக்குப் பிராந்தியம் 2021ஆம் ஆண்டிலும் முக்கிய வெளிநாட்டுத் தொழில் அடைவிடமாக தொடர்ந்தும் முன்னணி வகித்து கட்டார், சவூதி அரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம், குவைட் ஆகிய நாடுகளின் 87.7 சதவீதத்துடன் வெளிநாட்டுத் தொழிலுக்கான மொத்தப் புறப்படுகைகளின் 84.8 சதவீதத்திற்கு வகைகூறியது. அதேவேளை, 2022 முதல் காலாண்டுப்பகுதியில் அவதானிக்கப்பட்ட மேலதிக மேம்பாடுகளுக்கு மத்தியில் 2022ஆம் ஆண்டுக்காக வெளிநாட்டுத் தொழிலுக்கான புறப்படுகைகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு எதிர்பார்க்கப்படுகின்றது.

## தொழிலாளர் உற்பத்தித்திறன்

**வேலை செய்த மணித்தியாலமொன்றிற்கு சேர்க்கப்பட்ட மொத்தப் பெறுமதி நியதிகளில் அளவிடப்படுகின்ற (2010 விலைகளில்) தொழிலாளர் உற்பத்தித்திறன் 2020இல்[9] வேலைசெய்த மணித்தியாலமொன்றிற்கு ரூ.577.36 இலிருந்து 2021இல் வேலைசெய்த மணித்தியாலமொன்றிற்கு ரூ.562.15 இற்கு 2.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.** 2020 உடன் ஒப்பிடுகையில் 2021இல் அனைத்து மூன்று நடவடிக்கைகள் அதாவது, தனியே வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகள் தொடர்பில் சேர்க்கப்பட்ட மொத்தப் பெறுமதியில் அதிகரிப்புக்கள் அவதானிக்கப்பட்ட போதிலும் ஆண்டு காலப்பகுதியில்

9 2020இல் தொழிலாளர் உற்பத்தித்திறனின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பிற்கு கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் பரவலினைக் கட்டுப்படுத்துவதற்கு நடைமுறையிலிருந்த இறுக்கமான நடமாட்டக் கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் வேலைசெய்த மணித்தியாலங்களில் கணிசமான குறைவு காரணமாக இருந்தது.

அட்டவணை 2.18
வெளிநாட்டு தொழில்வாய்ப்புக்கான வெளிச்செல்கைகள்

| தொழில்வாய்ப்பு | 2019 | | 2020 (அ) | | 2021 (ஆ) | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் |
| **மொத்த தொழிலிலுள்ளோர்** | **203,087** | **100.0** | **53,711** | **100.0** | **121,795** | **100.0** |
| **மூலத்தின்படி** | | | | | | |
| உரிமம்பெற்ற முகவர்கள் | 69,278 | 34.1 | 18,065 | 33.6 | 42,012 | 34.5 |
| ஏனையோர் | 133,809 | 65.9 | 35,646 | 66.4 | 79,783 | 65.5 |
| **பால் வகையின்படி** | | | | | | |
| ஆண் | 122,257 | 60.2 | 32,500 | 60.5 | 80,670 | 66.2 |
| பெண் | 80,830 | 39.8 | 21,211 | 39.5 | 41,125 | 33.8 |
| **மனிதவலு வகையின்படி** | | | | | | |
| தொழில் வல்லுநர்கள் | 9,861 | 4.9 | 2,957 | 5.5 | 8,309 | 6.8 |
| நடுத்தர மட்டம் | 5,725 | 2.8 | 1,496 | 2.8 | 4,216 | 3.5 |
| எழுதுவினைஞர் மற்றும் தொடர்பானோர் | 9,163 | 4.5 | 2,496 | 4.6 | 6,495 | 5.3 |
| தேர்ச்சிபெற்ற தொழிலாளர் | 62,711 | 30.9 | 16,664 | 31.0 | 39,971 | 32.8 |
| ஓரளவு தேர்ச்சிபெற்ற தொழிலாளர் | 2,950 | 1.5 | 789 | 1.5 | 1,908 | 1.6 |
| தேர்ச்சியற்ற தொழிலாளர் | 51,188 | 25.2 | 13,987 | 26.0 | 31,497 | 25.9 |
| வீட்டுப் பணிப்பெண்கள் | 61,489 | 30.3 | 15,322 | 28.5 | 29,399 | 24.1 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

நிலவிய குறைவான நடமாட்டக் கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் வேலைசெய்த மணித்தியாலங்களில் கணிசமான மீட்சியின் காரணமாக ஒட்டுமொத்த தொழிலாளர் உற்பத்தித்திறன் சிறிதளவு வீழ்ச்சியடைந்தது. அதற்கமைய, வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகள் நடவடிக்கைகளில் தொழிலாளர் உற்பத்தித்திறன் 2020இன் முறையே வேலைசெய்த மணித்தியாலமொன்றிற்கு ரூ.178.37, வேலைசெய்த மணித்தியாலமொன்றிற்கு ரூ.611.90, வேலைசெய்த மணித்தியாலமொன்றிற்கு ரூ.764.25 இலிருந்து 2021 இலிருந்து வேலைசெய்த மணித்தியாலமொன்றிற்கு ரூ.175.64 இற்கும், வேலைசெய்த மணித்தியாலமொன்றிற்கு ரூ.598.78 மற்றும் வேலைசெய்த மணித்தியாலமொன்றிற்கு ரூ.734.94 ஆக வீழ்ச்சியடைந்தது. உற்பத்தித்திறன் மட்டம் என்ற நியதிகளில் பணிகள் நடவடிக்கைகள் தொழில் வளத்தினை அநேகமாக வினைத்திறனுடன் பயன்படுத்துவதை தொடர்ந்தும் வெளிக்காட்டி அதிகூடிய தொழிலாளர் உற்பத்தித்திறன் மட்டத்தினைப் பதிவுசெய்து அதனைத்தொடர்ந்து கைத்தொழில் நடவடிக்கைகள் காணப்பட்ட அதேவேளை, வேளாண்மை நடவடிக்கைகள் ஆகக்குறைந்த மட்டத்தினை பதிவுசெய்தன.